RAJA & CO SOLICITORS

We provide following Legal Services:

Conveyancing:

Buying and Selling

Houses, Flats & Business

- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG. Tel: 020 8772 4900

COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ. Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 07 ♦ ISSUE - 140 ♦ 18 FRIDAY FEBRUARY 2011

Multitop Accountants

HSMP TIER 1

- Income certification
- Accounts

போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ள உடனே நாடுங்கள்

Call Naren on 02089021271/07828396651

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

Photo: Kirukkan Ananthan

உங்களுக்கு கருத்தரிக்க சோதனைக்குழாய் குழந்தை (IVF) சிகிச்சை தேவையா, ஆனால் பணவசதி இல்லையா?

கவலை வேண்டாம், 36 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை பகிர்ந்து கொள்ளும் திட்டத்தில் இலவச IVF சிகிச்சை பெற வாய்ப்புள்ளது.

HSFC HARLEY STREET FERTILITY CLINIC

தமிழில் தொடர்பு கொள்ள உடன் அழையுங்கள்

Director: Dr Geetha Venkat MBBS, DGO, MD, FRCOG

43 Devonshire Street, London, W1G 7AL

Phone: +44 (0)20 7436 6838

E-mail: info@hsfc.org.uk | Web: www.hsfc.org.uk

New Leaf

For a SOLID Foundation for ACCADAMIC Success

English - Maths

In Morden Area UP TO 11+

Tel: 020 80 90 20 54

Mob: 0780 945 8670

Ersan & Co SOLICITORS

Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.

"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"

தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.

ERSAN & CO SOLICITORS

7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR

Tel: 0208 342 7070

Fax: 0208 342 7071 Mobile: 07816 646345

E-mail: info@ersans.co.uk

STV ELECTRICAL(Pvt)Ltd.

For All Your Electrical Solutions

நம்பிக்கையுடன் உத்தரவாதமான சேவை !

பல வருட அனுபவம் உள்ள

மின் இணைப்பு வல்லுனர்கள் !!

Free Phone Number

0800 234 3459

NICEIC Approved Contractor & Domestic Installer

Call Kaanthan on 07725 310 064

E mail: stvelect@hotmail.co.uk

இன்டலிஜென்ட் டெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் தரமான சேவையைப் பெற்று

உங்கள் கடன் சுமைகளை இன்றே அகற்றுங்கள்!

Personal Loans, Student Loan, Bank O/D, Credit Cards, Store Cards போன்ற கடன்களை கையாள்கிறோம்.

Office: 17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

020 8459 5812 Sivakumar 075 8874 5506

Muralee 079 0321 7854

INTELLIGENT DEBT MANAGEMENT

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Price starts from £1100

176 Merton High Street
South Wimbledon SW19 1AY
020 8540 0359
077 456 456 45
www.postechnology.co.uk

Metrologic

Chip and PIN

TOSHIBA Leading Innovation

IBM

FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER

Properties to Let !

UNIVERSAL ESTATES
www.universal-estates.co.uk

1, 2, 3, 4, 5 படுக்கையறைகள் கொண்ட
வசதியான வீடுகள் வாடகைக்கு உள்ளன

- Norbury
- Thornton Heath
- Croydon
- South Norwood
- Crystal Palace
- Streatham
- Brixton
- Tooting
- Balham
- Clapham
- Mitcham
- Dulwich
- Lewisham and surrounding areas

தமிழில் உரையாட அழையுங்கள்
Charlina - Tel: 0208 764 6444

1526, London Road, Norbury, SW16 4EU
E.Mail:info@universal-estates.co.uk

M&K
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

IMMIGRATION

All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

PERSONAL INJURY

All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation **+ £300.00 Cash back** on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

CONVEYANCING

Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

FAMILY LAW

Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோள்

காலம் தாழ்த்தி வந்தாலும், புதுப் பொலிவுடன் அழகுற, வெளிவந்த ஒரு பேப்பர் வாசகர் மத்தியில் வரவேற்பை பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. தொடர்ந்து வெளிவர உறுதுணையாக இருக்கும் அத்தனை சக்திகளும், புத்துயிரளிக்க முன் வரவேண்டுமென வாசகர்கள் சார்பாக வேண்டுகிறேன்.

- உமா மகாலிங்கம்

என்ன நடந்த்து உங்களுக்கு?

ஒரு மாதத்துக்கு மேல் ஒரு பேப்பர் வரவில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு பெப்பிரவரி 4ம் திகதி பேப்பரை வாசித்ததில் ஏமாற்றம்தான் மிஞ்சியது. சப்பென்று இருந்தது. சுவாரசியமாய் ஒன்றையும் காணவில்லை.

- மாதவி

வெடித்த நிலத்தில் வேர்களைத் தேடி..

ஈழத் தமிழர்களின் வரலாற்றைச் சொல்லும் ஆவணப் படத்தில் திரையிடப்பட விருப்பதாக ஒரு விளம்பரத்தை பிரசுரித்திருக்கிறீர்கள். எப்போது திரையிடப்பட விருக்கிறது என்ற விபரங்களை வெளியிடுவீர்களா?

- மகேந்திரன்

ஒரு பேப்பரை அனுப்பி வைக்க முடியுமா?

லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் வந்த எனக்கு ஒரு பேப்பர், தமிழ் கார்டியன் பத்திரிகைகளை படிக்காமல் இருப்பது சிரமமாக உள்ளது, தயவு செய்து எனக்கு ஒரு பேப்பர் ரை கிரமமாக அனுப்பி வைப்பீர்களா?

- தம்பிமுத்து

மீண்டும் பணம் சேர்க்க முயற்சி

கிழக்கின் வெள்ள நிவாரணத்திற்கென மீண்டும் காசு சேர்க்கும் முயற்சியில் புலியின் ரீ:எச்.ஓ ஈடுபடவுள்ளதாம். சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஊடாக மட்டுமே காசு அனுப்ப வேண்டும் என சிறப்புக் கைதி கே.பி. கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளாராம். ஆகையால் வேறு வழிகளில் பணம் அனுப்பவர்களை காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் அவரது குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

- கிருபை

ஐடீ கார்ட சரி, தேர்தல் எப்போ?

நாடு கடந்த அரசாங்கத்தினர் தமீழீழ அடையாள அட்டைகளை விநியோகித்து வருகிறார்கள். இதனால் என்ன பயன் இருக்கிறது என்று தெரியவில்லை. இருந்து விட்டு போகட்டும், ஆனால் Out of London இல் தேர்தல் வைக்கிறதை கைவிட்டு விட்டார்களா? நாடு கடந்த அரசாங்கத்திற்கு தெரிவான உறுப்பினர்களில் சிலரை ஒரு இடமும் காணவில்லை! நல்ல ஒரு திட்டம் கேலிக் கூத்தாக மாறி விடக் கூடாது என்பதே எனது அவா.

- குயிலன்

ஜெயபாலனின் ஆடுகளம்

தனுஸ் நடிக்கிற ஆடுகளம் என்ற படத்தில் ஜெயபாலன் என்ற ஈழத்து கவிஞர் அசத்தலாக நடித்திருப்பதாக பல இணைய தளங்களில் வாசித்திருக்கிறேன். அவர் பற்றிய விபரங்களை அறியத் தருவீர்களா? லண்டனுக்கு மகிந்த வந்தபோது நக்கிறதுக்குப் போன ஜெயபாலான இவர்? அவரது படத்தைப் பார்த்தால் அப்படியான ஆளாகத் தெரியவில்லை!

- சிவராமன்

எங்கே அவர்கள்?

முன்னர் எழுதிய சிறி, சபேசன், சாத்திரி, சயந்தன் ஆகியோரை எங்கே இருந்தாலும் இழுத்து கொண்டு வந்து ஒரு பேப்பர் இல் எழுத விட மாட்டீர்களா? அவர்கள் ஒருவரும் தொலைந்து போய்விடவில்லை என்று தெரிகிறது. ஏனென்றால் ஆசிரியர் குழுவில் இன்னமும் அவர்கள் இருக்கிறார்கள், அல்லது ஒரு பேப்பர் பொய் சொல்லுகிறதா?

- மூர்த்தி

அட்டைப்படம்.

உங்களுக்கு கடிதம் எழுதி களைத்துப் போய் விட்டேன். முன்னரெல்லாம் படங்கள் போட்டு நம்பிக்கை தரும் வரிகளை எழுதி வருவீர்கள். 'தனிவழிப்பயணம்தான் தயங்கோம், எது வந்து எதிர்த்தாலும் அடங்கோம், வாழ்வை நிமிர்த்தும் வழியில் செல்ல மறக்கோம்' என்ற வரிகள் எல்லாம் முன்னர் வந்தன. அவர்களை இப்பொழுதும் நான் மறக்கவில்லை. இப்ப 'சத்தியமா சொல்லு உன்னட்ட iPAD இல்லை என்று' என்று உதவாத வசனங்களை எழுதுகிறீர்கள். இப்பொழுது நம்பிக்கை தர வேண்டிய நீங்கள் அவநம்பிக்கை தருகிறீர்கள்.

- மாலினி.

இல்லாத போதுதான் அதன் அருமை தெரிந்தது.

ஒரு மாதமாக ஒரு பேப்பர் ரை காணாத போதுதான் அதை எந்த அளவுக்கு நான் நேசித்திருக்கிறேன் என்று எனக்கு தெரிந்தது. ஒவ்வொரு சனி மாலையும் கடை கடையாய் அலைந்தேன். கடைசியாக (5ம் திகதி சனிக்கிழமை) கடையில் கண்டதும் எவ்வளவு சந்தோசமாக இருந்தது. இனியும் ஏமாற்ற வேண்டாம்.

- புவனா.

சொல்லாதே "சொல்"லச் சொல்லாதே

கடைசியாக வந்த இல் வேல் தர்மா எழுதிய "மாயமான் சொல் ஹெய்ம் மீண்டும் வரப் போகிறாராம்" என்ற கட்டுரையை படித்தேன் அவருக்கு "சொல்" ஹெய்ம் என்று பெயர் இருப்பதாலோ என்னவோ மீண்டும் மீண்டும் தமிழர்களைப் பற்றி எதையாவது சொல்லிக் கொண்டே இருக்கிறார். இனி எல்லாத் தமிழர்களும் சேர்ந்து அவருக்கு சொல்ல வேண்டும் இனிமேல் நீ எங்களைப் பற்றி ஒரு "சொல்"லும் சொல்லாமல் இரு "சொல்" ஹெய்ம் என்று.

- மேகலா

வாழ வழி.

ஒன்றை கவனித்தீர்களா? வர வர இலண்டனில் வாழ்வது கடினமாகி கொண்டு வருகிறது. காரணம், ஏனைய வெளிநாட்டினரும் இங்கு இடம் பெயர்ந்தும், மாணவர் விசா பத்திரம் மூலம் விசா வந்ததும், இங்கு ஒரு வேலை எடுப்பதை கடினப்படுத்தியுள்ளது. புதிய அரசின் பொருளாதார கொள்கைகளும், பணவீக்கமும் இங்கிலாந்தின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய செய்துள்ளது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் எங்களைப் போன்ற நடுத்தர வர்க்கத்தினரே. பாணுக்கும், உருளைக் கிழங்குக்கும், பாலுக்கும் கூட க்ஷ்டப் படுகிறோம். எப்படி வாழ போகிறோமோ தெரியவில்லை.

- நாகநாதன்.

வாழ்க்கைத் துணை.

இலவசத் திருமண சேவை என்று ஒன்று ஒரு பக்கம் மணமகள், மணமகன் பெயர்களை நிரப்புகிறீர்கள். இதனால் ஒருவருக்காவது திருமணம் நிகழ்ந்ததா? அப்படி நடந்திருந்தால் அவர்களை வாழ்த்தி ஒரு பேப்பரில் இலவசமாக ஒரு விளம்பரம் செய்யலாமே?

- பொன்வண்ணன்.

எஸ் எம் கிருஷ்ணாவின் மொக்கை: ஐநாவில் கப்பலேறிய இந்தியாவின் மானம்

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ் எம் கிருஷ்ணா இந்தியாவின் பெருமையை உலகிற்கு பறைசாற்றி இந்தியாவையும் ஒரு வல்லரசாக்கும் எண்ணத்துடன் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டார். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையிலும் அவர் பங்கு பற்றி உரையாற்றுவது அவரது பயணத்தின் நோக்கம்.

ஐக்கிய நாடுகள் சபையில் பெருமை மிகு இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ் எம் கிருஷ்ணா உரையாற்றுகிறார் அதாவது சில காகிதங்களை வைத்து வாசிக்கிறார். அங்கு அவர் ஆற்றும் முதலாவது உரை. அவரது உரை போர்த்துகீசியா சம்பந்தமாகப் போய் கொண்டிருக்கிறது. அவர் சுமார் மூன்று நிமிடங்கள் உரையாற்றுகிறார். திடீரென்று ஐநாவிற்கான இந்தியப் பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி, எஸ் எம் கிருஷ்ணாவிடம் சென்று வேறு காகிதங்களைக் கொடுத்து முதலில் இருந்து மீண்டும் தொடங்கவும் என்று கூறுகிறார். இப்போது எஸ் எம் கிருஷ்ணா மஹாத்மா காந்தியின் வாசகத்துடன் தனது உரையை வாசிக்கிறார்.

நடந்தது இதுதான்.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒருவர் ஆற்றும் உரையை அச்சடித்து மற்ற உறுப்பினர்களுக்கு வழ்ங்குவார்கள். போர்த்துக்கீசிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஆற்றிய உரை அப்படி வழங்கப்பட்டபோது அது எஸ் எம் கிருஷ்ணா உரையாற்ற வைத்திருந்த காகிதங்களுக்கு மேல் வைக்கப்பட்டது. உரையாற்ற அழைக்கப்பட்ட போது எஸ் எம் கிருஷ்ணா தன்முன்னால் இருந்த காகிதங்களை எடுத்துச் சென்று மேல் உள்ள காகிதத்தை வாசிக்கத் தொடங்கிவிட்டார். அது போர்துக்கீசிய உரை என்பதை அறியாமல். இங்கு கேள்வி என்னவென்றால் ஏன் அல்லது ஹர்தீப் சிங் பூரி அந்த உரை வேறு என்பதை உணர மூன்று நிமிடம் எடுத்தது. ஹர்தீப் சிங் பூரி சொல்லியிருக்காவிட்டால் எஸ் எம் கிருஷ்ணா முழுவதையும் வாசித்திருப்பாரா? தான் என்ன பேசப் போகிறேன் என்று அறியாமல் எஸ் எம் கிருஷ்ணா வெறும் வாசிப்பாளராக மட்டும் அங்கு சென்றாரா? உரைத் தயாரிப்பில் அவர் எந்தப் பங்கும் வகிக்கவில்லையா? அவர் ஏன் இது தனது உரை என உணரவில்லை? அல்லது அவர் மது போதையில் இருந்தாரா? கிருஷ்ணா உரையாற்ற முன் போர்த்துக்கீசிய அமைச்சர் உரையாற்றியிருந்தார், அவர் பேசியதை கிருஷ்ணா காதில் வாங்கவில்லையா?

பின்னர் இதுபற்றி கிருஷ்ணா தெரிவித்த கருத்து இன்னும் வேடிக்கையானது: 'இதில் எந்தத் தவறும் இல்லை. என்முன் பல காகிதங்கள் இருந்தன, தவறுதலாக பிழையான உரையை எடுக்கப்பட்டு விட்ட்து.'

இப்படிப்பட்டவர்கள் வெளியுறவுத்துறை அமைச்சராக இருக்குமிடத்து இன்னும் எத்தனை தமிழ் நாட்டு மீனவர்களையும் இலங்கைக் கடற்படை கொல்லலாம். இலங்கையில் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்களைக் கொல்ல உதவிய இந்தியாவிற்கு இதுவும் வேணும் இன்னும் வேணும் என்று அங்கலாய்த்தார் ஒரு நண்பர்.

பாக்கிஸ்த்தானிய பதுகாப்புத் துறை இணையம் இப்படிக் கிண்டலடித்தது:

"Maybe Portugal has outsourced its speech to Bangalore," read one message on social networking site

பிரித்தானியப் பத்திரிகை வாசகர் இப்படிக் கூறினார்:

Reading another delegate's speech and not realising it after 3-minutes shows that Krishna didn't have a read through beforehand, never wrote it himself and would read anything put in front of him. Just another UN representative who is coasting through to the end of the month when they get their massive pay cheque.

ஐநா சபையில் நீண்ட நேர உரையாற்றிய பெருமை இந்தியாவின் வி கே கிருஷ்னமெனனுக்கு உண்டு. 23-01-1957 இல் 7 மணித்தியாலம் 48 நிமிடம் உரையாற்றிய பின்னர் மயங்கி விழுந்தார். அவர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் மீண்டும் வந்து மேலும் ஒரு மணித்தியாலம் உரையாற்றினார் .

பாதுகாப்புச் சபையில் இந்தியாவிற்கு நிரந்தர இடம் தேடிச் சென்றவர் ஐநாவின் சரித்திரத்தில் ஒரு மொக்கை உரையாற்றிய பெருமையை நிரந்தரமாகப் பெற்றுக் கொண்டார்.

- வேல் தர்மா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 18, 2011, ISSUE 140

தமிழ் ஊடகங்களை ஒடுக்க நீளும் அரூபக் கரங்கள்!

இலங்கைத் தீவில் ஊடகங்களுக்கும்; ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நீண்ட காலமாகவே நடைபெற்று வருகிறது. மகிந்த அரசாங்கம் பதவியேற்ற நாளிலிருந்து இத்தாக்குதல்கள் கட்டுக் கடங்காமால் போயுள்ளது. அதன் விளைவாக முப்பதாறு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். வன்னியில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் பு.சத்தியமூர்த்தி உட்பட மேலும் பல ஊடக வியலாளர்கள் கொல்லப்பட்டனர். தமிழீழ தொலைக் காட்சியில் செய்தியாளராகப் பணியாற்றிய இசைப்பிரியா சிறீராம் சிறிலங்கா அரசபடைகளால் கொடூரமாகக் கொல்லப்பட்டமையை பதிவு செய்த காணொளியை சனல் 4 முதற்கொண்டு பல்வேறு சர்வதேச ஊடகங்கள் ஒளிபரப்பின.

பிரகீத் எக்னெலிகொட என்ற ஊடகவியலாளர் கடத்தப்பட்டு ஒரு வருடம் கழிந் துள்ள நிலையில், இன்னமும் அவரது இருப்பு பற்றிய தகவல்கள் வெளியாக வில்லை. கொழும்பிலிருந்து இயங்கி வரும் lankaenews.com என்ற இணைய தளத்தின் பணியகம் அண்மையில் எரியூட்டப்பட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தின் சனநாயக மீறல்களை பொறுத்துக் கொண்டு, உடன் படு ஊடகவியலாளர்களாக (Embeded Journalists) தொழிற்பட மறுத்தவர் கள், தமது உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில், வெளிநாடுகளுக்கு புலம் பெயர்நதுள்ளனர். இங்கு தமது அன்றாட வாழ்விற்கே அல்லாடிக் கொண்டிருக்கும் இவர்களின் கணிசமானவர்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இலங்கைத் தீவில் நிலவரம் இவ்வாறு இருக்கையில், தற்போது புலம்பெயர் நாடுகளிலிருந்து இயக்கப்படும் ஊடகங்களின் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப் படுகின்றன. இங்கிருந்து அரசியற் கட்டுரைகளை எழுதிவரும் ஆய்வாளர்களை அச்சுறுத்தப்படுகிறார்கள். இதன் நீட்சியாக, eelamenews.com என்ற இணையதளம் தாக்குதலுக்கு (cyber attack) உள்ளாகியுள்ளது. அவ்விணையதளத்தின் ஆசிரியர் கள் தொலைபேசி மூலமாக மிரட்டப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே வேறு சில இணைய தளங்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அறியக் கிடைக்கிறது.

தீவில் கருத்துச் சுதந்திரம் ஆட்சியாளர்களால் ஒடுக்கபட்டுள்ள நிலையில், அங்கு ஊடக சுதந்திரம் பேணப்படுவதாகக் காட்ட எழுத்தாளர் மாநாடு, இலக்கிய பெரு விழா என ஏமாற்று நடவடிக்கைகளில் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என தங்களை அடையாளப்படுத்தும் சிலர் ஈடுபட்டுள்ளார்கள்.

இலங்கைத் தீவில் நடைபெறும் ஊடக ஒடுக்கு முறைகளைக் கண்டிப்பதுடன், புலம்பெயர் நாடுகளில் இவற்றிற்கு துணை போகும் சமூக விரோதிகளை இன ங்கண்டு சட்ட நடவடிக்கைளை எடுப்பதற்கு கருத்துச் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரும் முன்வரவேண்டும்.

ஒரு பேப்பர்

வணக்கம்!

*கடைசியாய் வந்த **ஒரு பேப்பர்** சுவாரசியமாய் விசயங்கள் வரயில்லை என்று பலர் குறைப்பட்டுகினம். மெய்யாய் எங்களுக்கும் இது தெரியும். என்ன செய்யிறது முந்தினமாதிரி கலகலப்பான ஆக்கள் எழுதிறதை குறைச் சிட்டினம். எழுதவெண்டு வெளிக்கிடுறவையும் ஒண்டில் தங்களை அரசியல் ஆய்வாளர்கள் கணக்கிலை நினைச்சுக் கொண்டு எழுதியினம் அல்லது ஏதாவது ஒரு குழுவுக்கு பிரச்சாரம் பண்ணிற மாதிரி எழுதுகியினம். இதுகளை பிரசுரிக்கிறதுக்கு **ஒரு பேப்பர்** தோதான இடமில்லை பாருங்கோ.*

நாங்கள் பரபரப்புக் காட்டிறதும் இல்லை சும்மா ரீல் விடுறதும் இல்லை எண்டது உங்களுக்கு தெரியும். இயல்பாக எழுதிற ஆக்கள்தான் எங்களுக்கு தேவை, அதுதான் உங்களுக்கும் பிடிக்கும் எண்டு நம்பிறம்.

*நாங்கள் திரும்ப திரும்ப சொல்லிறதையே சொல்லிறம். உங்கடை கருத்துகளை வெளியிடுகிறதுக்கு **ஒரு பேப்பர்** களம் அமைத்துத் தருகிறது. அவை எந்த மாதிரி கருத்துகளாக இருந்தாலும் சரி, நாகரிகமாய் ஆக்கள் படிக்கிற மாதிரி இருந்தால் சரி, என்னத்தை எழுத வேணும் எண்டதை நீங்களே தீர்மானியுங்கள். இலக்கணச் சுத்தமாய் எழுதவேண்டு என்றெல்லாம் இல்லை, ஆனால் சொல்ல வாற விசயம் முக்கியமானது.*

உள்ளுருக்கை நடக்கிற நிகழ்வுகள், சமூகத்துக்கு பிரயோசனமான விசயங்கள், சமூகத்தை பாதிக்கிற விசயங்கள் பற்றிய உரையாடல்கள் போன்றவற்றை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இங்கத்தையான் வாழ்க்கை முறையிலை, இருந்து எழுதிறதுக்கு நேரமில்லை எண்டது உண்மைதான்: போகிற போகிற இடமெல்லாம் கொண்டு செல்லக் கூடிய iPAD களும் எல்லாரிட்டையும் இல்லை. ஆனால் உங்கடை கருத்துகளை தொலைபேசி மூலமாகவும் பதிவு செய்யும் வசதியை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறம்.

*இங்கை குழு மோதல்கள் வலு மும்மரமாய் நடக்கிறது உங்களுக்கும் தெரிந்திருக்கும், எங்களையும் இதுகளிலை மாட்ட வைக்கிறதுக்கு முயற்சியள் நடக்குது. நாங்கள் எப்போதும் போலவே இருப்போம் எந்தக் குழுவிலையும் இல்லாமல். **ஒரு பேப்பர்** ரை பயப்படுத்தி நிப்பாட்டிறதுக்கு வேறை சில பேர் முயற்சிக்கினம். நாங்கள் இந்த சலசலப்புகளுக்கெல்லாம் அஞ்சுகிற ஆக்கள் இல்லை எண்டதை அவையளுக்கு சொல்லி வைக்கிறம்.*

வேறை என்ன?

பிறகு சந்திக்கிறம்.

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

Representing an oppressed nation

Against the many crises the Tamil people in Sri Lanka face today, perhaps the most grievous is lack of effective representation. The Tamil National Alliance (TNA) continues to claim, implicitly and explicitly, the role of chief advocate, but in practice has instead left it to other Tamil and international actors, including those in the Diaspora, to articulate the Tamils' urgent needs and difficulties.

The TNA's reluctance to vigorously articulate Tamil grievances on a range of self-evident contemporary issues inevitably raises serious questions regarding their ability, indeed their willingness, to accurately and effectively represent the Tamil nation's interests and aspirations in any wider discussion on a political settlement.

Since the end of the armed conflict, the Tamil people in Sri Lanka continue to suffer humanitarian deprivation and political and economic marginalisation in their homeland. The Tamils expected nothing else from the Sinhala-dominated state, but any electoral mandate granted the TNA was linked solely to expectations the party would speak for them on the global stage.

The TNA was formed in 2001 as the result of a growing consensus amongst the larger Tamil parties that there was a need for a united voice to articulate Tamil interests and aspirations. It is worth recalling that in the late nineties some of its key constituent parties were partners with President Chandrika Kumaratunga's government – even as she unleashed another catastrophic military campaign on the Tamils in Jaffna, first, and then Vanni.

The Tamil people nonetheless embraced the TNA on the basis of its new principled position on the Tamil nation's struggle – set out clearly in their manifestos of 2001 and 2004, for example. Moreover, it was their preparedness to faithfully project the views of the Tamil people on the international stage that lent them their legitimacy – proved not only in general elections but in local ones too. Popular support did not come from securing crumbs from the Sinhala state, but from forcefully advocating Tamil grievances and aspirations on the international stage.

Yet since the end of the war, the TNA - except for some of its (more junior) MPs - has either been muted or feeble in its protests over the deprivations continuing to be visited by the Sinhala state on the Tamil people. Instead, the TNA is leaving it international human rights groups, Diaspora organisations and other local actors, such as religious figures and even some Sinhala voices, to keep the Tamils' difficulties alive in the global conscience.

The on-going detention of Tamils held without charge, the state's arbitrary restrictions on economic and social activity and the military's continued refusal to allow resettlement of hundreds of thousands of Tamils in their properties are amongst issues on which the TNA was once forcefully vocal, but is now largely silent on. These are nonetheless being taken up by others, but the TNA seems content to limit itself to vague 'discussions' with the Sri Lankan state – something they know full well will ultimately prove futile.

> Tamil people in Sri Lanka continue to suffer humanitarian deprivation and political and economic marginalisation in their homeland.

Even amid the recent wave of paramilitary terror unleashed in the Jaffna peninsula, the TNA became active only after the main Sinhala opposition party, the UNP, had taken up the issue. Crucially, after the mass slaughter of Tamil civilians in 2009, what ought to be a key issue for Tamil representatives – accountability for war crimes – is explicitly being avoided.

There is no denying that Sri Lanka is dangerous place for those calling for accountability on war crimes, and TNA leaders have explained their silence on these terms, as the Wikileaked US cable of January 2010 shows. But if this issue, which is receiving growing global attention, is a no go area, it is difficult to comprehend how the TNA would effectively take up the political aspirations of the Tamil nation – the subject of over 60 years of strife in Sri Lanka. Meanwhile, the TNA is largely silent on the myriad day-to-day deprivations which the US cable quotes it as saying the Tamils in the Northeast are more concerned about.

Fear is understandable, but it cannot be an excuse for silence. Those who put themselves forward to speak for an oppressed people do so wilfully – aware not only of the risks, but the magnitude of responsibility such a role carries. The political history of the Tamil nation, and those of struggles across the world, is marked by those who have risen to that challenge. Amid repression, courage is sine qua non for legitimacy. The dangers of having no representation, meanwhile, are greatly surpassed by the consequences of having a passively submissive one.

Tamil Guardian.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட கண்டத்தில் உதயமாகப் போகும் புதிய தேசம்

திட்டமிடப்பட்டதன் பிரகாரம் சகல செயன்முறைகளுமே சுமுகமாக முன்னெடுக்கப்படுமானால், ஆபிரிக்காவின் மிகப் பெரிய நாடான சூடானின் தென்பிராந்தியம் உலகின் புதிய நாடாகவும் ஆபிரிக்காவின் 54 ஆவது நாடாகவும் எதிர்வரும் யூலை மாதம் விளங்கப் போகிறது. கடந்த வாரம் தெற்கு சூடானில் இடம்பெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் இறுதி முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. இதன் மூலம் 99 சதவீதமான தென் சூடானியர்கள் வடக்கில் இருந்து பிரிந்து செல்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருப்பதை அறியக் கூடியதாக இருக்கிறது. அராபிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கிற்கும் கறுப்பின கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தெற்கிற்கும் இடையே இரு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக நீடித்த இரு உள்நாட்டுப் போர்களுக்கும் (இவற்றில் குறைந்த பட்சம் 20 இலட்சம் பேர் கொல்லப்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது) அவற்றின் பின் விளைவான இனப் பூசல்களுக்கும் பிறகு 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அனுசரணையுடன் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கை முறைப்படியாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கான பெருமை இருதரப்பினருக்குமே உரியதாகும்.

தங்களுக்கென சொந்த நாடு உதயமாகப் போகிறதென்ற மகிழ்ச்சியில் தென் சூடானியர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். சர்வஜன வாக்கெடுப்பின் இறுதி முடிவுகளை சூடான் ஜனாதிபதி ஒமர் அல்பஷீர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். புதிய தேசத்தை முதலில் வாழ்த்துபவராகத் தானே இருக்க வேண்டுமென்று விரும்புவதாக அவர் கூறியிருக்கிறார். வடக்கு சூடானில் வாழ்ந்து வரும் சுமார் 20 இலட்சம் தென் சூடானியர்கள் சர்வஜன வாக்கெடுப்பில் பங்கேற்பதைத் தவிர்த்திருந்தனர். நிச்சயமாக அவர்கள் பிரிவினைக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பார்கள் என்ற போதிலும், தங்களது பகுதிகளில் வாக்கு எண்ணிக்கையில் ஏதாவது மோசடி இடம்பெறுமேயானால், சர்வஜன வாக்கெடுப்பின் இறுதி முடிவுகளை அது செல்லுபடியதாக்கி விடக் கூடுமென்ற பீதியில் அவர்கள் வாக்களிக்காமல் இருந்து விட்டார்கள். நாடு பிரியப் போகிறது என்பதை முன்கூட்டியே உணர்ந்து கொண்ட அவர்களில் பல ஆயிரக்கணக்கானவர்கள் ஏற்கனவே எல்லையைக் கடந்து தென்சூடானுக்குள் வந்து விட்டார்கள். மேலும் இலட்சக்கணக்கான தென் சூடானியர்கள் வடக்கில் இருந்து தெற்கிற்கு வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென் சூடானில் இருந்து அரேபிய முஸ்லிம்களும் வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். சர்வஜன வாக்கெடுப்பின் முடிவுகள் எத்தகையதாக இருந்தாலும் பெருமளவில் வன்முறைகள் மூளக் கூடுமென்றே ஐ.நா. அச்சம் தெரிவித்திருந்தது. ஆனால், இதுவரையில் இருபகுதிகளுக்குமான பரஸ்பர குடிபெயர்வு வன்முறைகளின்றியதாகவே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புதிய தேசத்தின் ஜனாதிபதியாகப் பதவியேற்கப்போகும் சூடானிய மக்கள் விடுதலை இராணுவத்தின் தலைவரான சல்வாகிர் நாட்டுப் பிரிவினை தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பில் கிடைத்திருக்கும் வெற்றியால் பெருமிதமடைந்தவராகக் காணப்படுகிறார். ஆனால், அவரும் அவரது பிரஜைகளும் எளிதில் சமாளிக்க முடியாத பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் 5 மாதகாலத்தில் பிறக்கப் போகும் புதிய தேசம் பிரிக்கப்படாத சூடானின் எண்ணெய் வளத்தில் 80 சதவீதத்தை தன்னகத்தே கொண்டிருக்கிறது. ஆனால், சூடான் துறைமுகத்துக்கு எண்ணெயைக் கொண்டு செல்லும் குழாய்க் கட்டமைப்புகள் வட பிராந்தியத்தின் ஊடாகவே செல்கின்றன. சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக அளிக்கப்பட்டிருக்கும் ஆணையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு வெற்றி கொள்ளப்பட வேண்டிய சவால்களில் பிரதானமானது எண்ணெய் வளத்தின் மூலமான வருவாயைப் பகிர்ந்து கொள்வதுடன் தொடர்புடைய சர்ச்சையாகும். கடந்த வருடத்தைய தென் சூடானின் மொத்த வருவாயில் 98 சதவீதம் எண்ணெய் ஏற்றுமதி மூலம் பெறப்பட்டதாகும்.

சூடானின் எண்ணெய் வளத்தின் நான்கில் மூன்று பங்கு தென் சூடானிலேயே இருக்கின்ற போதிலும், வடக்கு சூடானே எண்ணெய்க் குழாய்களையும் சுத்திகரிப்பு நிலையங்களையும் கொண்டிருக்கிறது. ஏற்கனவே பிளவுபட்ட நாடு போன்றே நடைமுறையில் இருக்கும் சூடானின் எண்ணெய் வள வருவாயைப் பகிர்ந்துகொள்வதில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த உடன்பாடு சர்வஜன வாக்கெடுப்புடன் முடிவுக்கு வர வேண்டுமென்பதே சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகளில் ஒன்று. புதிய தேச உதயத்துக்கு முன்பாக தெற்கிற்கும் வடக்கிற்கும் இடையே ஒளிவுமறைவற்றதும் ஒப்புரவானதுமான வருவாய்ப் பகிர்வு உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

பெருமளவுக்கு மண் வீடுகளையும் குடில்களையும் கொண்டதாக விளங்கும் ஜூபாவைத் தலைநகரமாகக் கொண்டமையப் போகும் தென் சூடான் வருவாயில் தற்போது பெறுகின்ற அரைப்பங்கிற்கும் கூடுதலான பங்கைப் பெறுவதற்கு விரும்பக் கூடும். அதேவேளை தற்போதைய தனிநகர் கார்ட்டுமில் இருக்கும் சூடானிய ஜனாதிபதி ஒமர் அல் பஷீர் நாட்டின் தேசியக் கடனான 2800 கோடி யூரோவை புதிய அரசும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் சாத்தியம் இருப்பதாக சர்வதேச அரசியல் அவதானிகள் நம்புகிறார்கள்.

அரசியல் நிலைவரத்தைப் பொறுத்தவரை ஆயுத பாணிக் குழுக்களின் தலைவர்களின் ஒத்துழைப்பை சல்வா கீர் பெற்றிருக்கின்ற போதிலும் சூடானிய மக்கள் விடுதலை இராணுவம் புதிய தேசத்தில் எத்தகைய பாத்திரத்தை வகிக்கப் போகிறது என்பதும் சர்ச்சையை ஏற்படுத்தக் கூடியதொரு விவகாரமாகும். எண்ணெய் வளமுடைய எல்லைப் பிராந்தியமான அபியீயின் அந்தஸ்தும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இவ்வாறாக புதிய தேச உதயத்துக்கு முன்னால் பெருமளவு பிரச்சினைகள் விரிந்து கிடக்கின்றன. சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகளை இதுவரையில் நடைமுறைப்படுத்துவதில் காட்டிய அரசியல் பக்குவத்தை எதிர்வரும் கட்டங்களிலும் வடக்கினதும் தெற்கினதும் தலைவர்களும் தொடர்ந்தும் வெளிக்காட்டிச் செயற்படுவார்கள் என்றே உலக நாடுகள் எதிர்பார்க்கின்றன.

வேல் தர்மா

எலி என

உன்னை

இகழ்ந்தவர்

முன்னே

புலி என

செயல் செய்யப்

புறப்படு தமிழா

OPINION

What has the LTTE to do with Al Qaeda?

By Periasamy Kanthavel

At the outset, this is nothing but the desperate imagination of Bahukutumbi Raman, also known as B. Raman that resulted in the worst type of Genocide that could happen to the manhood in the twenty first century and made a mockery of the United Nations and other world orders. Let us review the story and the tragedies, that caused the terrible permanent damage caused to the humanity.

The personality driven shift in India's Sri Lanka policy came after the 2004 change of government in New Delhi, when the desire to teach a lesson to the LTTE leadership for the historical insult the IPKF faced and emboldened with the well known prejudice and scent respect those in power had for the Tamils on either side of Palk Straight. The 'hands off policy' was simply India's pretension to sleep with the headache of LTTE's military success, and the popularity of the de-facto Tamil Eelam. India was waiting for right opportunity to wake up.

This handily coincided with the hawkish agenda of the war criminal President Rajapakse. The opportunist imperialist powers, UK, USA... say the Co-Chairs who accepted the LTTE's military power and the budding Eelam nation put a U- turn to accommodate India. What a shame!

On 11 May 2006, at the IISS Special Round Table Discussion, Mr B. Raman, Former Head, Counter-Terrorism Division of India's Intelligence Agency (External) spoke on 'South Asia and Al Qaeda – Emerging Trends'. B.Raman dared to say, " The successful maritime terrorism strike by the LTTE brings to mind Al Qaeda's attack on the US Naval ship USS Cole off Aden in October, 2000. The Al Qaeda attacks were copy-cat versions of the LTTE's tactics and not vice versa".

This scoundrel tried the same trick once before, when the popular Chris patten met with the great Leader Prabhakaran on the 25th November, 2003. (B. Raman's Paper no. 845, www.southasiaanalysis.org). What else one can expect from someone who started his carrier as an 'Indian Policeman'.

He dared to say, " Prabakaran and his organisation had committed as many deadly suicide bombings as the Al Qaeda. In fact, it was the LTTE, emulating the West Asian terrorist organisations, which introduced suicide bombings into the South Asian region long before Osama bin Laden introduced them in 1999". "Chris Patten: Legitimising LTTE's Self-Rule" was the title of his nasty article, but it was simply ignored.

Al Qaeda was Established by Osama Bin Laden in the late 1980s to bring together Arabs who fought in Afghanistan against the Soviet invasion, alleged with the blessing of USA and other Imperialist forces. Al-Qaeda's goal is simply to "unite all Muslims and to establish a government which follows the rule of the Caliphs, their the first system of government established in Islam, and represented the political unity of the Muslim Um-mah (nation).

The LTTE captured Elephant Pass, on the 22nd of April, 2000. They overran the Elephant Pass Army camp, with over 1000 Sri Lank troops killed while the rest "fled in disarray". Widespread coverage was given in the British Press too. The report by Luke Harding said, " ...Most analysts now believe it is only a matter of time before Jaffna falls". The LTTE never wanted to kill all those solders but what did they want was the troops out of Tamil Eelam, their homeland.

Within a year after capturing the Elephant Pass garrison, LTTE routed Sri Lanka army's Agni Khiela (Rod of Fire) offensive. These victories underscored Tamils' perception that their ability to negotiate political rights is essentially predicated on the LTTE's military power.

Sustaining strategic parity and beyond..

The well planned and precisely executed assault on the Sri Lanka Katunayake International Airport on Tuesday, the 24th July, 2001, causing an estimated cost of $450 million was to put pressure on the government of Sri Lanka to negotiate with it on its terms.

LTTE under the brilliant leadership of Praphakaran achieved what he meant for the freedom of Eelam Tamils and he also showed the world what the LTTE, the great freedom fighters were capable of.

Tragedy of Errors

In a casual manner one can at least understand the crime of the UK, after all the, then India was the main supply of human power and resources to British imperialism in all the wars. But how about the more open and transparent USA. The FBI, the Federal Bureau of Investigation, the prestigious agency of the United States Department of Justice, only in January, 2008 only released a report, " LTTE worse than Al Quida"

It is high-time that International Community stopped its game of camouflaging the grave Sri Lankan genocide and started the serious business of making Tamil Eelam a reality.

Afterall, Tamil Eelam is not "Humpty and Dumpty"!

ஒரு பேப்பர் ORU PAPER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
சாரதா
விளம்பரம்
சோபனா
அச்சு
தர்சினி (கனடா) பானு
வடிவமைப்பு
மயூரன் - விஜி
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
பானு
வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

சவால் அல்லது சபதம் அல்லது சாபம்

எதிலிருந்துதொடங்குவது அல்லது எப்படித் தொடங்குவது ? என்பது தான் இப்பத்தி எழுதத் தொடங்கும் போது எனக்கு வரும் சிக்கல். அச்சிக்கல் தீர முடியாமல் அரைமணித்தியாலமாவது மூடிகழற்றிய பேனையுடனும், வெள்ளையாக விரிந்த ஒற்றைகளுடனும் மேசையின் முன் அமர்ந்திருப்பேன். என்ன எழுதப்போகிறேன் என்பது தெளிவாகத் தெரிந்திருந்தும் முதல் வாக்கியமெதுவெனத் தோன்றாமலிருப்பது தான் என் பிரச்சினை.

சரி எப்படியோ தொடங்கிவிட்டேன் இனித் தொடர்கிறேன். சென்ற வாரம் ஓர் இசைநிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன் இசைப்பேழை வெளியிடுவதும் அதன் பாடகர் குறிப்பிட்ட அந்தப் பாடல்களைப் பாடுவதும் தான் அந்நிகழ்ச்சி. சுமார் பத்துப்பேர் மேடையில் வீற்றிருந்து இடையிடை ஒவ்வொருவராக எழுந்து அப்பாடகரை புகழுரைகளால் குளிப்பாட்டுவதும் அந்நிகழ்ச்சியில் ஓர் அங்கம்.

எந்த ஒரு விமர்சனபூர்வமான அணுகுமுறைம் இல்லாது யார் மிகச்சிறப்பாக புகழ்கிறார் என்கின்ற போட்டியும் அப்பத்துப் பேருக்கும் இடையில் வந்துவிட்டது. தமிழக முதல்வர் கருணாநிதியை வைரமுத்து, கமலஹாசன், ரஜினிகாந்த் சு.ப. வீரபாண்டியன், ஜெகத் ரட்சகன் ஆகியோர் புழுகுரைகளால் குளிப்பாட்டுவதற்கு ஒப்பாக இருந்தது இந்நிகழ்ச்சி. இனிமேல் இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு போவதில்லை என உறுதி பூண்டேன். வழமைபோல் இவ் உறுதிமொழியும் காற்றில் பறந்து கரைந்து விடும் என்றே நினைக்கிறேன்.

அஃது அவ்வாறு இருக்க அரங்கிற்குச் சற்று வெளியில் ஒருவருடன் ஒரு கருத்தில் மோத வேண்டி வந்தது. அது குறித்து எழுதுவது தான் இப்பத்தியின் நோக்கம்.

இந்தப் புகழுரைகளின் புழுக்கம் தாங்காமல் வெளியே வந்ததனால் தான் நிகழ்ந்த அனர்த்தம் இது. ஏன் தான் வெளியே வந்திருந்தேன் என்றிருந்தது.

எனது நண்பர் அல்ல ஆனால் எனக்குத் தெரிந்த ஒருவர் ' உங்களுடன் கொஞ்சம் கதைக்க வேண்டும்' என்று என்னைக் கூப்பிட்டார். கதைப்பதற்கு காசு ஏதும் கேட்க மாட்டார்தானே என்று நானும் போனேன். அவர் தனது 'வீரப்பிரதாபங்கள்' கொஞ்சத்தை அள்ளிவிடத் தொடங்கினார். அந்தப்பிரதாபங்களுக்கும் அரங்கில் நிகழ்ந்த புகழுரைகளுக்கும் எந்தப் பேதமும் எனக்குத் தெரியவில்லை.

சற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

அவர் சொன்னதன் அல்லது எனக்கு விளங்கியதன் சுருக்கம் இது தான். 'சமீபத்தில் கே.பியின் அழைப்பின் பேரில் இலங்கை சென்ற தறுதலைக் தமிழர்களில் இவரும் ஒருவர் அங்கு யாழ்ப்பாணம் வன்னி என்று கே.பியுடன் சுற்றியிருக்கிறார். கோத்தபாயாவையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். 'அங்குள்ள மக்கள் பாவங்கள், போராளிகள் ஆகப் பாவங்கள் அவர்களுக்கு நாங்கள் ஏதாகிலும் செய்யவேண்டும் தான் அதற்காக முழுமூச்சாக வேலை செய்கிறேன்' என்கிற மாதிரி பிதற்றினார் இது ஐந்து நிமிடத்தில் சொல்லி முடித்தது அல்ல. அரை மணித்தியாலம் எடுத்தது. அவர் ஏற்கனவே ஒரு நல்ல நடிகர் பாலேந்திராவின் நாடகங்களில் நடித்தவர் ஆனால் அதிலும் பார்க்க திறம்பட என்முன்னே நடித்துக்கொண்டிருந்தார். முகபாவங்கள் சட்சட்டென மாறுவதும் குரல் சட்டென தளம்புவதும் திடீரென வீரம் கொள்வதும் கைகள் உயர்வதும் தாழ்வதும் விறைத்துப் போவதும் வீரம் கொள்வதும் காற்றைக்குத்துவதும் கடலைக்கடைவதும் என அரை மணித்தியாலமாக தனிநபர் நடிப்பை நயந்து கொண்டிருந்தேன் பிறகு எனது பொறுமை என்னைவிட்டுக் கழன்று போய்விட்டது

அதன் காரணம் என்னவென்றால் தமிழ்மக்களை மீட்க வந்த தேவதூதன் தான் என விளம்பியதே எனக்குப் பொல்லாத ஞாபகங்களும் அப்போது ஒற்றைகளைப் புரட்டின. ஈழத்தில் தேசிய விடுதலைப்போர் உக்கிரமாக நடந்த காலத்தில் இவர் போராட்டத்திற்கு எதிராகவும் போராளிகளுக்கு எதிராகவும் நிறையக் கடமைகள் ஆற்றியிருக்கிறார். ' நாசம் வலை' இணையத்தளத்தில் போராட்டம் போராளிகளுக்கு எதிராக மோசமான கட்டுரைகள் வரைபவர்.

சமீபத்திய உதாரணம், இசைப்பிரியா, எங்கள் அருமைத் தங்கை வன்புணர்ச்சிசெய்து கொல்லப்பட்ட படங்கள் வெளியானபோது அவர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதன் சாரம் 'இசைப்பிரியாவின் கொலை என்பது பெரிய விசயம் அல்ல ஏற்கனவே புலிகளால் செல்வி என்ற பெண் கவிஞரும் ராஜினி திரணகம என்ற பெண் விரிவுரையாளரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள் அதில் என்ன நீதி இருக்கிறதோ அதே நீதி தான் இசைப்பிரியாவின் கொலையிலும்'

இப்படி எழுதுகிற மர மண்டைகளுக்குக் கறுப்பு மையைச் செலவழிப்பது வீண் விரையம். பொதுவில் என்னைப்பற்றி இழிவாக எழுதுபவர்களுடன் இப்படியான வீண் விவாதங்கள் செய்பவர்களுடன் நான் மினைக்கெடுவது கிடையாது. அந்நேரத்தில் செய்ய ஆயிரம் வேலைகள் இருக்கின்றன. ஆனால் இதில் சில விடயங்கள் சொல்ல வேண்டி இருக்கிறது. இசைப்பிரியாவினதும் அவர் போன்ற ஏராளம் போராளிகளினதும் பொதுமக்களினதும் படுகொலைகள் சொன்ன அரசியல் செய்தி தான் என்ன? தமிழ் இளைஞர்கள் பலர் நிர்வாணப்படுத்தப்பட்டு கண்களைக் கறுப்புத்துணியால் கட்டி கைகள் கட்டப்பட்டு முதுகில் சப்பாத்துக் கால் வைத்து பிடரியில் சுட்டுக் கொலை செய்த குரோதம் தந்த அரசியல் செய்தி தான் என்ன ?

அவற்றைப் புரிந்து கெள்வதற்கு இவர் தரவளிகளுக்கு மனம் கிடையாது, பக்குவமும் கிடையாது. இவர் தரவளிகள் புலம்பெயர் தேசத்தில் ஒரு சில நுாறு பேராவது இருப்பார்கள். இவர்கள் சிங்களம் செய்த படுபாதகச் செயலை நியாயப் படுத்திக்கொண்டு இருப்பவர்கள்.

இவர்' தரவளிகளை நாம் திரும்பியும் பார்க்கத் தேவையில்லை ஆனால் என்ன கொடுமையென்றால் 'தமிழ்மக்களைப்' பற்றி இப்பொழுது அவர்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதுவே என் கடுங்கோபத்துக்கு உள்ளானது.

குறையை நிறையாக்கலாம்

ஒரு கார் விபத்தில் தன் இடது கையை இழந்திருந்த ஒரு பத்து வயது சிறுவனுக்கு 'ஜுடோ ' என்ற ஜப்பானிய மற்போர்க் கலையைக் கற்றுக் கொள்ள ஆவலாக இருந்தது. அவன் ஒரு ஜப்பானிய ஜுடோ ஆசிரியரிடம் தன் ஆவலைத் தெரிவித்தான். அந்த ஆசிரியர் அவன் ஊனத்தைக் கவனித்தும் பொருட்படுத்தாமல் அவனுக்கு ஜுடோ கற்றுக் கொடுக்க ஒப்புக் கொண்டார்.

சில மாதங்கள் கழிந்த பின்னும் அந்த ஆசிரியர் அவனுக்கு ஜுடோவின் ஒரே ஒரு ஆக்கிரமிப்புப் பயிற்சியை மட்டுமே திரும்பத் திரும்ப மிக நுணுக்கமான முறையில் கற்றுத் தந்திருந்தார். அந்த சிறுவன் அந்தப் பயிற்சியை ஓரளவு நன்றாகவே கற்றுத் தேர்ந்த பின் ஆசிரியரிடம் சொன்னான். 'ஐயா எனக்கு நீங்கள் வேறு பயிற்சிகளையும் கற்றுத் தாருங்களேன்? '

அந்த வயதான ஆசிரியர் 'நீ இந்த ஒரு பயிற்சியை சிறு குறையும் இல்லாமல் முழுமையாகக் கற்றுத் தேர்ந்தால் அதுவே போதுமானது. இதைத் தவிர வேறு எந்த பயிற்சியும் நீ கற்க வேண்டிய அவசியமில்லை' என்று கூறி விட்டார். அந்த சிறுவனுக்கு அவர் வேறு பயிற்சிகள் கற்றுத் தராமல் இருப்பது ஏமாற்றத்தைத் தந்த போதும் அவர் மீது அவனுக்கு நம்பிக்கை இருந்தபடியால் அவர் கூறியபடி அந்த ஒரு பயிற்சியையே தொடர்ந்து மேலும் சில மாதங்கள் செய்து அதில் முழு ஆளுமை பெற்றான்.

அவன் அந்த ஒரு பயிற்சியில் ஒரு சிறு குறையும் இல்லாமல் முழுமையான ஆளுமை பெற்று விட்டான் என்பதை உறுதிப் படுத்திக் கொண்ட பின் அந்த வருடத்திய தேசிய ஜுடோ போட்டியில் அந்தச் சிறுவனைக் கலந்து கொள்ளச் செய்தார் அந்த ஆசிரியர். அந்த சிறுவனுக்கோ திகைப்பு. அந்த தேசியப் போட்டியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல திறமையான வீரர்கள் கலந்து கொள்வார்கள். அவனோ ஒரே ஒரு ஆக்கிரமிப்புப் பயிற்சியை மட்டுமே முழுமையாகக் கற்றுத் தேர்ந்திருக்கிறான். ஜுடோவில் அவனுக்குக் கற்றுக் கொள்ள இன்னும் எத்தனையோ இருக்கின்றன. 'ஐயா எனக்கு அந்த ஒரு பயிற்சி தவிர வேறு எதுவும் தெரியாத நிலையில் தேசிய அளவு போட்டியில் எப்படி கலந்து கொள்வது?'

அப்போதும் அந்த ஆசிரியர் அவனுக்குச் சொன்னார். 'உனக்கு அந்த ஒரு பயிற்சி போதும். உனக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே உன் எதிரியிடம் இந்த ஆக்கிரமிப்பு முறையை பயன் படுத்து. மற்ற எதைப் பற்றியும் நீ கவலைப்படாதே'

அவர் அந்த அளவு உறுதியாக கூறிய பிறகு அவன் மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் போட்டியில் கலந்து கொள்ள சம்மதித்தான். ஆசிரியர் அவனை போட்டிக்கு அழைத்துச் சென்றார். முதல் இரண்டு போட்டிகளில் அவர் சொன்னது போலவே செய்து அவன் மிக எளிதாக வென்று காலிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றான்.

அரையிறுதிப் போட்டியில் வெற்றி அவ்வளவு எளிதாகக் கிடைக்கவில்லை. ஆனால் சிரமங்களுக்கு இடையில் அவனுக்கு சந்தர்ப்பம் கிடைத்த போது அந்த ஆக்கிரமிப்பு முறையைப் பிரயோகித்து வென்று முன்னேறினான்.

இறுதிப் போட்டியில் அவனுக்கு எதிராக போட்டியிட்ட ஆள் வயதிலும், வலிமையிலும், திறமையிலும் அவனுக்கு மேற்பட்டவனாகவே இருந்தான். போட்டியில் ஆரம்பத்தில் அவனால் அந்த நபரை வெல்ல முடியவில்லை. அவனுடைய இடது கை இல்லாத குறையையும், படும் சிரமத்தையும் பார்த்த நடுவர்கள் இடைவேளையின் போது அவன் போட்டியில் இருந்து விலகிக் கொள்ள அனுமதி தருவதாகக் கூறினார்கள். அவனுடைய ஆசிரியரோ அதற்கு சம்மதிக்கவில்லை. 'அவன் போட்டியில் தொடர்வான்' என்று உறுதியாகக் கூறினார்.

அவர் தன் மேல் வைத்திருந்த நம்பிக்கையைக் கண்ட அந்த சிறுவனுக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டது. இடைவேளைக்குப் பின் தொடர்ந்த போட்டியில் எதிராளி சற்று அசந்திருந்த போது தன் முழு பலத்தையும் திரட்டி அந்த ஆக்கிரமிப்பு முறையைப் பயன்படுத்தி எதிராளியை செயலிழக்க வைத்து வெற்றி பெற்றான். அவனுக்கே அந்த வெற்றி ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பதக்கத்தைப் பெற்ற போதும் அவனுக்கு பிரமிப்பு நீங்கவில்லை. வீடு திரும்புகையில் அவன் ஆசிரியரிடம் தன்னால் எப்படி அந்த ஒரு பயிற்சி மட்டும் கற்றுக் கொண்டு வெற்றி பெற முடிந்தது என்று கேட்டான். ஆசிரியர் சொன்னார். 'அதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது, நீ அந்த ஒரு பயிற்சியில் குறைவில்லாமல் முழுமையாகப் பயிற்சி செய்திருக்கிறாய். இரண்டாவது, இந்த ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட எதிராளிக்கு ஒரே வழி தான் இருக்கிறது. அந்த வழி ஆக்கிரமிப்பவரின் இடது கையைப் பிடித்துக் கொள்வதில் தான் இருந்து தான் ஆரம்பிக்கிறது'. இடது கை இல்லாதவன் ஆக்கிரமித்தால் அந்தப் பிடியில் இருந்து தப்பிக்க வேறு வழியே இல்லை. அந்த சிறுவனின் மிகப் பெரிய குறை மிகப் பெரிய பலமாகப் போய் விட்டது பாருங்கள்.

பல சந்தர்ப்பங்களில் குறைகள் வேறு விதத்தில் நிறைகளாக முடியும். சில குறைகள் இருப்பவர்கள் அதை ஈடுகட்ட முயற்சித்து அந்த குறையில்லாதவர்களை விடவும் அதிகமாக சாதித்து விடுவதை பல சமயங்களில் நம்மால் பார்க்க முடிகிறது. குருடு, செவிடு, ஊமை என்ற மூன்று ஊனங்களை உதாசீனப்படுத்தி விட்டு உலக அளவில் பெரும் சாதனை புரிந்த ஹெலன் கெல்லரை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

குறைகளை மீறி சாதிப்பதற்குத் தேவையான மிக முக்கியமான பண்பு தன்னிரக்கத்தோடு தளர்ந்து ஒடுங்கி விடாமையே. தன்னிரக்கத்தில் ஆரம்பித்து அடுத்தவர் இரக்கத்தையும் தேடி நிற்பவர்கள் வாழ்க்கை தேக்கமடைந்து விடுகிறது. குடும்பத்தினரும், மற்றவர்களும் கூட அங்கீகாரம் தந்து ஆதரிக்க ஆரம்பிக்கும் போது அந்த மனிதரின் முன்னேற்றம் முடங்கிப் போகிறது.

எனவே உடலின் குறைகளையோ, வசதி வாய்ப்புகளின் குறைகளையோ கண்டு தளர்ந்து விடாதீர்கள். அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து உங்களை மட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள். சில குறைகளை இன்னொரு கோணத்தில் பார்த்தீர்களானால் அதுவே வேறு சில முன்னேற்றங்களுக்கு அனுகூலமாகலாம். உண்மையான குறை மனதின் குறைகளே. வெளிப்புறக் குறைகள் தோற்றத்தில் இருக்குமளவு நம் முன்னேற்றத்தை தடுக்க சக்திபடைத்தவை அல்ல. இதை தங்களுக்கு இருக்கும் குறைகளைப் பெரிதாக நினைக்கும் ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதே போல அவர்கள் நம்பிக்கை இழக்கும் தருணங்களில் நண்பர்களும், உறவினர்களும் அந்த அவநம்பிக்கைக்கு துணை போகாமல் தங்கள் அன்பாலும் நம்பிக்கையாலும் அவர்களைத் தாக்குப் பிடிக்க வைக்க வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே குறைகள் ஒருவரைக் குறைத்து விடாமல் நிறைகளாகப் பரிணமிக்க முடியும்.

- என்.கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மொழியை உணர்ந்து விடு

'தடை வரும் பகை வரும் வீழ்ந்து போகலாம். வீழ்ந்த பின் எழும்பு நீ தொடர்ந்து ஓடலாம்?.' என்கிற வரிகளோடு, 'இந்த உலகத்தின் மொழியை நீ அறிந்து விடு' என்ற ஆழமான செய்தியைத் தாங்கி வெளிவந்துள்ளது 'இராவண்ணன்' இசைத்தட்டு.

இந்த உலகத்தின் மொழியை அறிந்து கொள்வதில் தான், எம்மிடையே பல அறிவார்ந்த வாதப் பிரதிவாதங்கள் நிகழ்கின்றன.

உலகம் எம்மை ஏமாற்றிவிட்டது, அதனை மீறி எம்மால் இனி என்ன செய்ய முடியுமென மக்கள் சோர்வடையும் போது, புதிய பாதைகளைக் காட்ட பலர் மன்வருவார்கள்.

ஆனாலும் இலங்கையில் போடப்படும் பாதைகளையிட்டு, அதிக அக்கறை கொள்ளத் தேவையில்லை.

மகிந்த இராஜதானியின் அதிகாரசக்தி, பேரினவாத நிறுவன மயப்பட்ட நிருவாகக் கட்டமைப்பு எங்கும், அடிவேர் வரை பாய்ந்திருப்பதால், அதற்கு ஏற்றவாறே தமிழத் தேசிய அரசியலிலும் இசைந்து செல்கிறது.

போர்க்குற்ற விசாரணை என்பதனை, கனவிலும் மறந்துவிட்டால், அதிகாரப் பகிர்வினை தருவேனென சிங்களம் கூறும்போது, குறுக்குப் பாதைகளையே விடுதலைப் பாதையாக அழுத்திச் சொல்லும் அபத்த அரசியலும் அங்கு நிகழ்கிறது.

தென்சூடான் தனிநாடாவதை வரவேற்கும் எரிக் சொல்ஹெய்ம், தமிழீழத்தில் சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடாத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனச் சொல்வார்.

உள்ளுராட்சி சபைகளைக் கைப்பற்றி, ஈழப் புரட்சிக்கு அடிக்கல் நாட்டு விழா நடாத்திவிடலாமென்கிற கதைகளும் வருகின்றன.

தமிழீழம் கேட்ட தமிழர் ஐக்க விடுதலை முன்னணிக்கு மாவட்ட சபைகள் கிடைத்தது போன்று மாகாண சபை கேட்டவர்களுக்கு, கிராமசபைகள் மட்டுமே மிஞ்சும் போல் தெரிகிறது.

சிங்களம் வழங்கவிருக்கும் அதிகாரப்பகிர்வு என்பது கிராமசபைதான் என்பதனை பலர் புரிந்திருந்தும், தெரியாதது போல் பேசுவது வேடிக்கையாகவிருக்கிறது.

இதற்கும் அப்பால், தேசிய விடுதலை குறித்த உலகின் மொழியும், அதன் இலக்கணமும் வேறு வகையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இசுலாமியத் தீவிரவாதத்தின் மீது சுமத்தப்பட்ட 'பயங்கரவாதம்' என்கிற சொல், தமிழத் தேசிய விடுதலைக்கும் பொருத்திப் பார்க்கப்பட்டு, பொது மொழியாக்கப்பட்டுள்ளது.

அரசியல் பார்வை

இதயச்சந்திரன்

போர் முடிவடைந்தாலும் 'பயங்கரவாதம்' என்கிற சொல்லாடல் பயனற்றுப் போனதால், தமிழ் மக்களின் சட்ட ரீதியான உரிமைகளுக்கு ஆதரவு உண்டு ஆனால் தனி தமிழ்அரசிற்கு ஆதரவில்லை என்று கூற ஆரம்பித்துள்ளது மேற்குலகம்.

ஆக மொத்தம், ஒரு விடயம் மட்டும் தெளிவாகப் புரிகிறது.

தமிழ்மக்களின் சட்டபூர்வமான 'சுயநிர்ணய உரிமை' என்ற பிறப்புரிமை, பிரிந்து சென்று தனித்து வாழும் தகுதியைக் கொடுத்து விடுமென்பதால், பயங்கரவாதக் கதை பேசி, எமது இனத்தின் அடிப்படை உரிமையை இவர்கள் மறைத்து விட்டார்கள் போலிருக்கிறது.

இவர்கள் வலியுறுத்தும், சட்டரீதியிலான உரிமைகள் என்பது, சிங்கள இறையாண்மையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

இதைத்தான் சிங்களமும் கூறுகிறது. ஆகவே முன்பு அனுசரணையாளர்களாக இருந்து, இன்று பேச்சாளராக மேடையேற முனையும் மேற்குலக மென்போக்கு முகங்கள், தமிழ்த்தேசிய இனத்திற்கு தனித்துவமான இறைமை உண்டென்பதை இன்னமும் ஏற்றுக்கொள்ள வில்லையென உறுதி படக் கூறலாம்.

உலகத்தின் மொழி ஒன்றுதான் அவர்களுக்கிடையே சந்தைப் போட்டிகளும், ஆதிக்க மோதல்களும் பரவிக் கிடந்தாலும், மனித உரிமை, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை போன்ற விடயங்களில், தமது நலனுக்கு ஏற்ற விதத்தில், ஏற்றும் மறுத்தும் செயல்படுவார்கள்.

தென்சூடான் தனிநாடாவதை வரவேற்கும் எரிக் சொல்ஹெய்ம், தமிழீழத்தில் சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடாத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனச் சொல்வார்.

இன அழிப்பிற்கு இன்னமும் துணை நிற்கும் பிராந்திய வல்லரசுகள், அரசியல் தீர்வினூடாகவே, தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கலாமென்கிற வாய்ப்பாட்டை, அடுத்த இருபது வருடங்களிலும் தொடர்ந்து சலிக்காமல் பாடுவார்கள்.

அதேவேளை ' பயங்கரவாதம்' என்ற சொந்தச் சொல்லை, மேற்குலகம் மறந்து விட்டதோவென்று நினைத்தவாறு நாடாளுமன்றிலும் ஐநா சபையிலும், அதனை நினைவூட்டி வருகிறது சிங்களம்.

அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களில் தம்மால் பயணிக்க முடியாத நிலை, புலம்பெயர் மக்களால் உருவாக்கப் படுவதை அவதானிக்கும் சிங்களதேசம், தமது மாக்சிக அறிவு சீவிகளை அனுப்பி, நாடுகடந்த அரசாங்கத்திற்கு எதிராக பரப்புரைகளையும் முடுக்கிவிட்டுள்ளது.

வாய் தடுமாறி 'சமஷ்டி' என்ற சொல்லை மாக்சிசம் படித்த பேரினவாதி சோமவன்ச உதிர்த்தவுடன், நாட்டைப் பிரிப்பதற்கு, உருத்திரகுமாரனோடு இணைந்து விட்டார் ஜே.வி.பி யின் தலைவரென, ஹெல உறுமயக் காரர்கள் போர்க்கொடி தூக்கிவிட்டனர்.

இந்த இலட்சணத்தில் கிராமசபை, நகரசபைகளைக் கைப்பற்றி, வடமாகாண சபையினையும் தம்வசமாக்கி, கிழக்குமாகாண சபையினையும் தம்வசமாக்கி, கிழக்கு மாகாணசபையின் அயுட்காலம் முடிவடைந்தவுடன், அதனையும் கைப்பற்றி, வடக்கையும் கிழக்கையும் இணைத்து, (வழக்குப் போட ஜே.வி.பி காத்திருக்கிறது) சமஷ்டி என்ற இலட்சியம் நோக்கிப் பயணிப்போமென கனவுலகில் வாழ்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

சர்வதேச அழுத்தம் இல்லாமல், சிங்களம் அசையாது என்பதனை கூட்டமைப்பினர் புரிந்தாலும், புரியாதது போல் நடிப்பதும் தம்மால் மடடுமே, இறைமையுள்ள தேசம் என்பதனடிப்படையில் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முடியுமென் மக்களை நம்பகைவக் முயற்சிப்பதும்போன்றவைவேடிக்கையான விடயமாகத் தென்படுகிறது.

ஏமாற்றப்ட்ட வரலாறுகளை அரசியல்வாதிகள் மறக்கலாம். வலி சுமக்கும் மக்கள் மறக்க மாட்டார்கள்,

இங்கு இன்னொரு விவகாரத்தையும் கவனிக்க வேண்டும் புலம்பெயர் நாட்டு அரசியல் தளங்களில் பொதுவாகப் பேசப்படும விடயம் 'புலம்பெயர் மக்கள் தமிழத் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் 'அவர்களைவிட்டால் தாயக மக்களுக்கு வேறு தலைமை இல்லை'. இக்கருத்து நிலையை உயர்த்திப் பிடித்தவாறு பரப்புரை செய்பவர்கள், சிங்களத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், தொடரும் இனவழிபபு என்பவற்றிற்கு எதிராக சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதில் தீவிரம் காட்டுவதில்லை

நாட்டிலுள்ள கூட்டமைப்பின் தலைவர்களும் அதுகுறித்து வாய்திறப்பதில்லை குரல் இழந்த மக்களின் நிலைதான் அவர்களுக்கு.

அழிவுகளை மறந்து அரசியல் தீர்வு பற்றி பேச வாருங்களென்று சிங்களம் அழைப்புவிடும். தீர்வினை எட்ட, நாம் கூட்டமைப்புடன் பேசும் போது பழையனவற்றை கிளறி, தேசிய இன நல்லிணக்கத்தை ஏன் கொடுக்க முற்படுகிறீர்களென, சர்வதேசத்தைப் பார்த்து சிங்களம் கேட்கிறது.

உலக அரங்கில் போர்க்குற்ற விசாரணை என்கிற சத்தம் ஒடுங்கிப்போகும் வரைதான், தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் கூடிக்குலவும் இந்த சிங்கள தேசம்.

இசுலாமியத் தீவிரவாதத்தின் மீது சுமத்தப்பட்ட 'பயங்கரவாதம்' என்கிற சொல், தமிழத் தேசிய விடுதலைக்கும் பொருத்திப் பார்க்கப்பட்டு, பொது மொழியாக்கப்பட்டுள்ளது.

ஏமாற்றப்ட்ட வரலாறுகளை அரசியல்வாதிகள் மறக்கலாம். வலிசுமக்கும் மக்கள் மறக்க மாட்டார்கள்.

சிங்களம் மீது புலம்பெயர் மக்கள், முன்னெடுத்துக் கொண்டிருக்கும் போராட்ட வடிவங்களே, இறுதில் நிரந்தரமான தீர்வொன்றைத் தாயக மக்கள் அடைவதில் பெரும் பங்காற்றும் என்பதை கூட்டமைப்பினர் அப்போது புரிந்து கொள்வார்கள்.

பலப்படுத்த வேண்டியது கூட்டமைப்பையல்ல. சிங்களத்திற்கு எதிராக ஒன்றிணைந்து போராடும் புலம்பெயர் மக்களின் கட்டமைப்புக்களை.

மறம்
உண்டானால்
மாறா முனைப்புக்
கொண்டால்
அறம் வெல்லும்
அதர்மம் ஒழியும்

ஒரு பேப்பர்
ORU PAPER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vithu.com

VITHU TRUST FUND

- Vithu Trust is a charity organisation dedicated to improve and safeguard the lives of Children in Sri Lanka and raises voice for the needy.
- There are thousands of children who go through the day without a single nourishing meal. They include victims of war, which has thrown the bread - winners of these families out of work and the future of our youngsters into darkness.
- Your contribution as a donor, no matter how big or small, will make a huge difference in the lives of these children.
- With your donation we help children in need of food, shelter, education, Counselling & medical.

Urgent appeal for the Flood in Sri Lanka

Please don't ignore their plight!

T : +44 208 407 5767 | M : +44 796 144 1237

Registered charity since 2004 in England & Wales - 1107418

Contact
Vithu Trust Fund
Beauchamp Court, 10 Victors Way, Barnet, EN5 5TZ

W : www.vithu.com | E : charity@vithu.com

Bank Details

VITHU TRUST FUND

Account No : 92205262 | Sort Code : 40-18-41

HSBC, Croydon Branch 9 Wellesley Road, Croydon, CR9 2AA, UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ள குழப்பங்களும், அவற்றை உருவாக்கும் தனி மனிதர்களும், குழுக்களும்

கோபி
ஒரு பேப்பர்

தமிழ்த் தேசிய அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்கள் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் துயரையும், சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இன்று ஒரு கருத்துடன் இருப்பவர் நாளை அதற்கு நேரெதிரான கருத்துகளை வெளிபடுத்துகிறார். திரைமறைவில் நடக்கும் சில சந்திப்புகள் பற்றிய விபரங்கள் வெளிச்சத்திற்கு வரும்போது மக்கள் ஏமாற்றமடைகின்றனர். பொதுமக்களைப் பொறுத்தவரை, யாரை நம்புவது என்று தெரியாத ஐயப்பாடு அவர்களை விரக்தியடைய வைக்கிறது. தமது ஆதங்கங்கத்தை அவர்கள் பொதுப்பரப்பில் வெளிப்படையாகவே தெரிவித்து வருகிறார்கள்.

சிங்களப் பேரினவாதத்தின் கிடுக்குப்பிடியிலிருக்கும் தாயக மக்களைப்போலன்றி, புலம் பெயர் தமிழ் மக்களுக்கு சுயமாகச் சிந்தித்து செயற்படக் கூடிய வெளி உள்ளது. இப்போது ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளை அவர்கள் அறிவு பூர்வமாக அணுகி, தமிழர் நலன் சார்ந்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்விடயத்தில் புத்திசீவிகள், ஊடகங்கள், அரசியல் மற்றும் மனிதவுரிமை ஆர்வலர்கள் ஆகியோர் காத்திரமான பங்களிப்பினை வழங்கி, மக்களுக்கு சரியான திசைவழியை காட்ட வேண்டும். துரதிஸ்டவசமாக இவர்களில் பலர் குழம்பிப்போயுள்ளார்கள் அல்லது தெரிந்து கொண்டே மக்களை தவறாக வழி நடத்த முற்படுகிறார்கள்.

ஒரு பாரிய இனவழிப்பு நடவடிக்கையின் பின்னர், ஈழத்தில் வாழும் தமிழ் மக்கள், சிங்களப் பேரினவாதிகளின் முழுமையான அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், இவ்விதமான குழப்பங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்றே குறிப்பிட வேண்டும். குறிப்பாக இன்று கருத்தில் கொள்ளக் கூடிய அளவிற்கு ஒரு மக்கள் சக்தியாக உள்ள புலம்பெயர் அலைந்துழல்வு மக்கள் மத்தியில் திட்டமிட்ட வகையில் பிளவுகளை ஏற்படுத்துவதில் இவ்விடயத்தில் நாட்டமுடைய பல்வேறு சக்திகள் முனைந்து வருகின்றன. இச்சக்திகள் ஒவ்வொன்றும் சேர்ந்து இயங்காவிட்டாலும், தமது நலன் சார்நது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக, சிறிலங்கா, இந்தியா, மேற்கத்தைய நாடுகள், மேற்கத்தைய நாடுகளுக்கு எதிரான நாடுகள், நாடுகளின் உளவு அமைப்புகள் என பல்வேறு சக்திகள் இவ்விடயத்தில் தொடர்பு பட்டிருக்கின்றன. மேற்படி தரப்பினருக்கு இசைவாக நடந்து கொள்ளும் நடவடிக்யையாளர்களும், அமைப்புகள், ஊடகங்கள் என்பனவற்றின் வாயிலாக தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை தோற்றுவிக்கப்படுகின்றன. இதில் தனிநபர் நலன்களே ஊக்க சக்தியாக அமைந்துள்ளன.

இவ்வாறான முரண்பாடுகளை களைந்து கொள்ளாமல், தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்கால நலன் பற்றி சிந்திப்பதில் அர்த்தமிருக்காது. இங்கு குழப்பங்களிலிருந்து விடுபடுவது ஒன்பது ஒட்டுமொத்த மக்களும் ஏதாவது ஒரு குழுவின் பின்னால் அல்லது ஒரு அரசியல் தலைவரின் பின்னால் செல்வது என அர்த்தப்படுத்திக் கொள்ளலாகாது. தற்போதைய சூழ்நிலையில் தனி அமைப்பு ஒன்று பலம்பெறுவது சாத்தியமாக அமையாது. அவ்வாறு அமையுமிடத்தில், அதனை சிதைத்தொழிப்பது இலகுவாக அமைந்துவிடும். ஆதலால், பன் முகத்தன்மை கொண்ட பல்வேறு அமைப்புகள் இருப்பது மூலோபாய ரீதியில் அவசியமானது. ஆனால் இவற்றிடையே தமிழ் மக்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு, பொருண்மிய மேம்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை உள்ளடக்கியதான அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான பாதை வரைவு (Road Map) தொடர்பான விடயங்களில் உடன்பாடு இருக்க வேண்டும். பொது எதிரியுடன் கைகோர்த்துக் கொண்டு இவ்வாறான உடன்பாட்டுக்கு வரமுடியாது, மாறாக, இது முரண்பாடுகளை உச்சக்கட்டதில் கொண்டு போய் விடும்.

இன்றைய நிலையுடன் ஒப்பிடும்போது, மே 2009 க்கு முன்னரான நிலமை குறிப்பிட்டளவு சீரானதாக அமைந்திருந்தது. அப்போது விடுதலைப்புலிகளின் தலைமையை ஏற்றுக் கொண்ட தமிழ்த் தேசியவாதிகள் ஈழத்தமிழ் அரசியலின் மைய நீரோட்டத்திலும், அவர்களுக்கு எதிரானவர்கள் உதிரிக் குழுக்களாகவும் செயற்பட்டு வந்தன. விடுதலைப்புலிகளுக்கு எதிரான இக்குழுக்கள் தம்மை பெரும்பான்மை கருத்திலிருந்து வேறுபட்ட மாற்றுக் கருத்தாளர்கள் என அடையாளம் காட்ட முனைந்த போதிலும், அவ்வாறு இனங் காணக் கூடிய கொள்கை வேறுபாடுகள் எதுவும் அவர்களிடம் வெளிப்படவில்லை. குறிப்பாக, விடுதலைப் புலிகள் சனநாயகத்திற்கு முரணான வகையில் செயற்படுகிறார்கள், அல்லது மனிதவுரிமை மீறல்களில் ஈடுபடுகிறார்கள் என குற்றம் சுமத்தி வந்தவர்களால் இவ் விடயங்களில் நேர்த்தியாக செயற்பட முடியவில்லை. சனநாயகத்திற்கு விரோதமாக, மனிதவுரிமை மீறல்களை புரிந்து வரும் சிறிலங்கா அரசாங்கத்தின் அனுசரணையுடனேயே இவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமது பொது எதிரியாக விடுதலைப் புலிகளை கருதிய இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்ட எல்லாச் சக்திகளுடனும் உறவினைப் பேணிக் கொள்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் தலைமையில் ஒரு அரசு நோக்கிய அரசு நடைமுறையில் இருந்த போது, நம்பிக்கை தரக்கூடிய விடயங்கள் அங்கு காணப்பட்டன. ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பு விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அவர்கள் இராணுவக் கட்டமைப்பு பலம் பொருந்தியதாக இருந்தமையால், மக்களின் பாதுகாப்பை அவர்களால் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்தது. வீரஞ் செறிந்த போர் நடைபெற்றது. அர்ப்பணிப்புடன் போராளிகள் களமாடினார்கள். இவையெல்லாவற்றிற்கும் மேலாக உறுதியான, விரும்பத்தக்க ஒரு தலைமை இவற்றை வழி நடாத்தியது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டவுடன் நிலமை தலைகீழாக மாறிவிட்டது.

மே 2009 க்கு பின்னரான நிலைமை மிகவும் மோசமானது. அற்றகுளத்தில் அன்றில் பறவைகள் போன்று வேறு தளம் நோக்கி பறக்க ஆரம்பித்தனர், இதுவரைகாலமும், தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் என தம்மை அடையாளப்படுத்தியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களாகப் பிரிந்து, தமக்குள்ளேயே மோத ஆரம்பித்தார்கள்.

மே 2009 க்கு பின்னரான நிலைமை மிகவும் மோசமானது. அற்றகுளத்தில் அன்றில் பறவைகள் போன்று வேறு தளம் நோக்கி பறக்க ஆரம்பித்தனர், இதுவரைகாலமும், தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் என தம்மை அடையாளப்படுத்தியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களாகப் பிரிந்து, தமக்குள்ளேயே மோத ஆரம்பித்தார்கள். தாயகத்தில், விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டிருந்த அரசியல்வாதிகள், புதிய அணிகளாகப் பிரிந்தார்கள் அல்லது முன்னைய கூட்டை உடைத்துக் கொண்டு வேறு கூட்டுக்களை ஏற்படுத்திக்- கொண்டார்கள். புலம் பெயர் நாடுகளில் புதிய குழுக்கள் உருவாகின. இவை அனைத்தும் ஒன்றை ஒன்று விமர்சிக்கவும், அவதூறுகளை அள்ளி வீசுவதிலுமே காலத்தைச் செலவிடுகின்றன. பொது எதிரியை தவறவிட்டுவிட்டு தமக்குள் மோதுவதிலேயே இவை கவனத்தை திருப்பியுள்ளன. இவ்வற்றுள் ஒரிரு குழுக்கள், பொது எதிரியுடன் குலாவிக் கொண்டு, மற்றய குழுக்களை காட்டிக் கொடுக்கு கைங்கரியத்தையும் செய்துவருகின்றன..

சிங்களத்திற்கு அடிபணியும் (சலுகை) அரசியலை கருணா, பிள்ளையான், கே.பி. போன்ற முன்னாள் புலிகளும், விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்ட சம்பந்தனும் அவரது சகாக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். புலம்பெயர் நாடுகளில் உள்ள இவர்களது ஆதரவாளர்களும், அவர்களால் நடாத்தப்படும் ஊடகங்களும் அடிபணிவு அரசியல் பற்றியே போதிக்க முனைகின்றன. முன்னர் பரபரப்புக் காட்டி மக்களுக்கு புழுகுப் புதினம் சொன்ன ஊடகங்கள் சிங்களத்தை அண்டிப் பிழைக்கின்றன. அறிதல், தெளிதல், துணிதல் என்பதை மகுட வாசகமாகக் கொண்ட இளைப்பாறிய போராளி கி.பி. அரவிந்தனின் 'புதினப்பலகை' இணையதளம், முடிந்த வரை விடுதலை போராட்ட வரலாற்றை கொச்சைப்படுத்த முனைகிறது. நடைமுறை யதார்த்தம் சார்ந்த அணுகுமுறை (pragmatic approach) என்ற அடிப்டையில் சிங்கள மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கூறுவதே அதன் துணிதலாக அமைகிறது. 'பொங்குதமிழ்' இணையதளமும் இந்த அணியில் சேர்ந்து விட்டது அல்லது வெளிப்படையாக செயற்படும் துணிவினைப் பெற்றுள்ளது எனலாம்.

சிறிலங்கா அரசாங்கம் புரிந்த இனவழிப்பு நடவடிக்கைகளை, குறைந்த பட்சம் போர்க் குற்றங்கள் என்ற வகையில் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்வதனை மனிதவுரிமை அமைப்புகளினால் வெளியிடப்படும் அறிக்கைகளிலிருந்து அறிய முடிகிறது. போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை அவை வலியுறுத்தி வருகின்றன. சர்வதேச நியமங்களுக்கமைய விசாரணைகள் நடைபெறுமாயின், அது தனித்து குற்றவாளிகளை இனங்காண்பதாக அமையாது. முாறாக தமிழ் தேசிய இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனப் படுகொலையை சர்வதேச அரங்கில் வெளிக்காட்டுவதாக அமையும். இவ்விடயத்தில் மந்த கதியிலேனும் சில விடயங்கள் நடந்தேறிவருகின்றன. ஆனால் இம்முயற்சிகளை முறியடிக்க தமிழர் தரப்புடன் பேரம்பேசும் முயற்சிகளில் சிங்கள, இந்திய அரசுகள் ஈடுபட்டு வருவதாகவும். இது விடயத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே வெளிவந்த விக்கிலீக்ஸ் தகவல்களின்படி போர்க்குற்ற விசாரணைகள் விடயத்தை வலியுறுத்தும் விடயத்தில் சம்பந்தன் சிரத்தை கொண்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

புலம்பெயர் தளத்தில், போர்க்குற்ற விசாரணைகள் விடயத்தில் அக்கறை செலுத்துவதாக காட்டிக் கொள்ளும் உலகத் தமிழர் பேரவை, பிரித்தானியாவிற்கு மகிந்தவுடன் வந்திருந்த சஜி கலகே என்ற இராணுவ அதிகாரியை கைது செய்யுமாறு வெஸ்றமின்ஸ்ரர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததாக செய்தி வெளியாகியிருந்தது. பிரித்தானிய தமிழர் பேரவையும் இதுவிடயமாக ஒரு ஊடக அறிக்கையை வெளியிட்டிருந்தது. ஆனால் அவ்விதமான வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், சில வெளிச்சக்திகளின் அறிவுறுத்தலின்படி இறுதி நேரத்தில் இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் போலவே பிரித்தானிய தமிழரவையும் இந்தியாவின் அனுசரணையை நாடி நிற்பதாகத் தெரிகிறது. இவ்வமைப்பின் தலைவர்களில் ஒருவரான செந்தில் கந்தையா, இராகுல் காந்தியுடன் அண்மையில் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஈழத்தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரவலத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சக்திகள் காரணமாக இருந்தன என்பது வெளிப்படையானது, இவற்றிற்கு அறிந்தோ, அறியாமலோ துணை புரிந்தவர்கள், தமிழ்த் தேசியவாதிகளின் பக்கத்திலும் உள்ளார்கள். இவ்விடயத்தில் இன்னமும் வெளிப்படுத்தப்படாத விடயங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றை பொது நன்மை கருதி வெளிப்படுத்த வேண்டி தருணம் வந்து விட்டதாகவே தோன்றுகிறது. அவர்களை அம்பலப்படுத்த வேண்டிய பணி தமிழ் ஊடகங்களிடமே உள்ளது.

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET 020 8216 2520 | CROYDON 020 8150 9950 | CITY OF LONDON 020 7 183 2696 | CAMBS

BBK PARTNERSHIP
www.bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS
R3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்பற்றாளர் பு.சத்தியமூர்த்தியின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்!

ஒரு இனத்தின் அடையாளம் ஊடகம் என்பார்கள். அந்த ஊடகத்தை நிர்வகிக்கின்ற அல்லது அதனைப் பிரதிபலிக்கின்ற ஒப்பற்ற பணிதான் இனத்தினைப் பிரதிபலிக்கும். இந்த இலக்கணத்திற்கு வடிவம் கொடுக்க முனைந்து தன்னாலான பணியினை ஒப்பேற்றி இடை நடுவே பிரிந்த ஊடகர் நாட்டுப்பற்றாளர் பு.சத்தியமூர்த்தி உலகில் இருந்து பிரிக்கப்பட்டு 12-02-2011 உடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி கொள்கின்றது.

ஆரம்பத்தில் எழுத்தின் மீதான உந்துதலால் அல்லது ஈர்ப்பினால் அவர் தனது ஊடகப் பணியினை தொடங்கினார்.

மட்டக்களப்பினை பூர்வீகமாகக் கொண்ட அவர் தந்தையின் பணி நிமிர்த்தம் யாழ்ப்பாணம் மண்டதீவில் வசித்து தனது ஆரம்பம் முதலான கல்வியைத் தொடர்ந்தார். யாழ். இந்துக்கல்லூரி மாணவரான அவர் மாணவப் பருவத்தில் இருந்தே எழுதும் பணியினை மேற்கொண்டு வந்த அவர் 1995 இன் பின்னர் யாழ். இடப்பெயர்வுடன் தனது பல்கலைக்கழக வாழ்க்கையை இடைநிறுத்த வேண்டிய சூழலை எதிர்கொண்டார்.

ஒரு ஊடகன் என்ற காரணத்தினால் அன்றைய தனது மேலதிக கல்வியை நிறுத்திக் கொண்ட அவர் வன்னியில் ஊடகங்களின் பங்களிப்பில் முனைப்புக் காட்டினார். ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையிலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதாரம் சஞ்சிகையிலும் தனக்கான பங்களிப்பினைச் சரியாகப் பயன்படுத்தி பணியாற்றினார்.

கால ஓட்டத்தில் முல்லைமாவட்ட கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிய அவர் அதன் மூலமும் ஊடகச்செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு முனைந்தார். அந்தக் காலப்பகுதியில் அவர் புதுக்குடியிருப்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்ட எழுகலை இலக்கியப் பேரவையில் முக்கிய செயற்பாட்டாளர்களாக அன்று விளங்கிய இளம் படைப்பாளர்களுடனும், ஆர்வலர்களுடனும் கைகோர்த்து அந்த அமைப்பின் வளர்ச்சியில் கூடுதல் பங்காற்றினார்.

இந்த நிலையில் எழுவின் ஆலோசனையுடன் எழு கலை இலக்கியப் பேரவை, ஈழநாதம் மக்கள் நாளிதழ், மற்றும் சர்வுதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் முல்லை மாவட்ட கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் இதழியல் கற்கை நெறி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்தக் கற்கை நெறியின் போது வன்னியில் செயற்பட்டுவந்த பல்வேறு ஊடகத்துறை சார் முக்கியஸ்தர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்டு பயிற்சிகளை வழங்கிவந்தனர். அந்தக் கற்கை நெறியில் பெருமளவான படைப்பாளர்களும், ஊடகச் செயற்பாட்டாளர்களும் வெளிவந்தனர். அவ்வாறானவர்களில் ஒருவராக பு.சத்தியமூர்த்தியும் தன்னைப் புடம் போட்டு இன்னமும் மெருகேற்றி வெளியேறினார். அந்தக் கற்கை நெறியினை முன்னெடுப்பதற்கான முழுமையான முனைப்பில் கல்வித் திணைக்களம் ஈடுபடுவதற்கான ஏற்பாட்டினை அவரே மேற்கொண்டிருந்தார்.

அதே காலப்பகுதியில் வன்னியில் இருந்து வெளிவந்த கலைபண்பாட்டுக் கழகத்தின் வெளிச்சம் கலை இலக்கிய சஞ்சிகை, மற்றும் ஈழநாதம் உட்பட்ட ஊடகங்களின் முக்கிய இடத்தினை சத்திய மூர்த்தியினுடைய படைப்புக்கள் பெற்றிருந்தன. அதன் பின்னர் சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றிய பு.சத்தியமூர்த்தியினுடைய ஊடகப் பணியானது புலம் பெயர் மக்களை நோக்கி விரிவடைந்தது. அரசியல் விமர்சனங்களை மேற்கொள்ளும் அவர் இலக்கியத்திலும் தன்னாலான பங்களிப்பினை மேற்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகத்தின் கீழ் செயற்பட்ட ரீ.ரீ.என் (தமிழ் ஒளி), தரிசனம் தொலைக் காட்சிகளுக்கான நாளாந்த செய்திப் பார்வைத் தொகுப்பு, அரசியல் கலந்துரையாடல்கள், உள்ளூர் நடப்புக்கள் உட்பட்ட நிகழ்ச்சிகளை முன்னெடுத்த அவர் குறுகிய காலத்தில் புலம்பெயர் தமிழர்களால் நன்கறியப்பட்ட ஒருவராக மாற்றம் பெற்றார். இதே காலப் பகுதியில் அனைத்துலக தொடர்பகத்தின் கீழ் செயற்பட்ட இணையத்தளம் ஒன்றின் செய்தி தொகுப்பாளராகவும் செயற்பட்ட அவர் புலம் பெயர் ஊடகங்கள் பலவற்றிற்கும் எழுதிவந்தார். குறிப்பாக பரிஸ் ஈழமுரசு, எரிமலை சஞ்சிகை, கனடாவின் உலகத்தமிழர் பத்திரிகை உட்பட பல ஊடகங்களில் இவரது பல்வேறு படைப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

தமிழீழத் தேசியத் தொலைக் காட்சியின் நாள்நோக்கு மற்றும் நிலவரம் நிகழ்சிகளில் இவரது செவ்விகள் அடிக்கடி இடம்பெற்றன. தாயகத்தில் ஊடக வளர்ச்சியினை இன்னும் மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் தோற்றம் முதல் அதன் இறுதிக்காலம் வரையில் அவரது கல்லூரிக்கான பணி ஓயாதே இருந்தது. கல்லூரியின் கற்கை நெறியின் போது செய்தி தொடர்பிலான விரிவுரைகளாகவே அவரது பணி அமைந்திருந்தது.

வன்னியில் நடைபெற்ற அரசியல் சந்திப்புக்களின் போது பு.சத்தியமூர்த்தி நேரடியாகவே செய்தி சேகரிப்பில் ஈடுபட்டார். தனது பார்வையில் சரி எனப்பட்டதை எடுத்து வெளிப்படுத்துவதில் அல்லது அது தொடர்பில் விவாதிப்பதில் அவர் என்றும் பின்நின்றதில்லை. சமாதான காலத்தின் பின்னான பல சஞ்சிகைகள் வெளியீடுகள் வன்னியிலும், புலம் பெயர் தளத்திலும் அதிகமாக முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக போராளிகளுக்கான வழிகாட்டி, மற்றும் குறிப்பிட்டகாலம் மாணவர்களுக்காக வெளியாகிய கடுகு உட்பட்ட சஞ்சிகைகள் என்பனவற்றிலும் இவரது படைப்புக்கள் தொடராக வெளிவந்தன. பத்திரிகை முதல் தொலைக்காட்சிவரையான அவரது பரந்துபட்ட ஊடக அனுபவம் அவரிடம் நிறைந்தே காணப்பட்டது. பு.சத்தியமூர்த்தி மற்றும் சிந்துஜன் ஆகிய பெயர்களில் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில் இடப்பெயர்வின் தொடராய் வள்ளிபுனத்தில் இருந்து தனது குடும்பத்தினரை இரணைப்பாலை என்ற இடத்தில் இருத்திவிட்டு வள்ளிபுனம் பகுதிக்குச் சென்ற வேளை எறிகணைத் தாக்குதலுக்கு உட்பட்டு அவரது உயிர் பிரிந்தது. உடனடியாகவே தமிழீழ விடுதலைப்புலிகளால் அவர் நாட்டுப்பற்றாளராக மதிப்பளிக்கப்பட்டார்.

அவரது நினைவு நிகழ்வுகள் புலம்பெயர் தேசமெங்கும் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அவருக்கான எந்த ஒரு வணக்க நிகழ்வினையும் இன்றுவரையில் தாயகத்தில் நிகழ்த்தவில்லை என்ற சோகம் அல்லது துயர் இன்னமும் ஆற்றுப்படுத்த முடியாது உள்ளது. அவரது மனைவி கமலநந்தினி, அவர் தனது சகோதரன் மாவீரர் சிந்துஜன் நினைவாக தனது மகளுக்கு சிந்து எனப் பெயரிட்டார். தனது மகளை ஒரு ராஜதந்திரி ஆக்கவேண்டும் என்பதே தனது ஆவல் என அவர் அடிக்கடி கூறுவதுதான் அவரது சுட்டி மகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் நினைவில் நிழலாடுகின்றது.

வன்னியில் ஊடகப் பணியில் தம்மை வெறுத்து சொற்களுக்குள் அடக்க முடியாத பணியாற்றிய பல ஊடகர்கள் தொடர்பில் இதுவரையில் வெளித்தெரியாத செய்திகளே உள்ளன. அவர்கள் ஒவ்வொருவரும் ஆற்றிய பணிகளும், நண்பர் சத்தியமூர்த்தி ஆற்றிய பணிகளும் வீண் போகுமா? அவர்களுக்கான அவர்களின் அர்ப்பணிப்புக்களுக்கான பலன் கிடைக்குமா? காலமே நீ பதில் சொல்வாய்..

- ஹர்சன்

சகல விதமான மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்!

TR AUTOS

£15 Offer
MOT Charge
Class 4 Car: £54.85
Class 7 Commercial Van: £58.60

- MOT
- SERVICE
- REPAIRS
- TYRES
- EXHAUSTS
- PRIVATE CARS
- TAXIS
- COMMERCIALS
- ACCIDENT & BODYWORK

For MOT:
Please Call **Mr. Tharma**
020 8540 6537
020 7252 4438

Unit 23, Riverside Business Park
Lyon Road, South Wimbledon, SW19 2RL
Fax: 0207 358 2524
Email: trautos@gmail.com





Elephant & Castle ல்
Complete automotive service and repairs
by fully licenced mechanics

111 – 113 Elephant Road
London, SE17 1LB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமுக சதி வலையில் சகோதர மீனவர்கள்

தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்: - திருமாவளவன்

தமிழக மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்.

தமிழிக மீனவர்களுக்கு எதிரான சிங்கள இன வெறியர்களின் போக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பாண்டியன், ஜெயக்குமார் படுகொலைகளைத் தொடர்ந்து தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கே கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. இந்திய அரசும் உரிய நடவடிக்கை எடுப்பதாக வழக்கம்போல வாக்குறுதி அளித்தது.

இந்நிலையில் மீண்டும் திடீரென கடந்த 15.02.2011 அன்று 18 இழுவைப் படகுகளுடன் 112 தமிழக மீனவர்களை சிங்கள வெறியர்கள் கடத்திச் சென்றுள்ளனர். அத்துடன், மறுநாளே (16.02.2011) 27 மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் கடத்தப்பட்டு, அனைவரும் பொய் வழக்குகளில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் கருத்து

இந்தப்பிரச்சனையால்லாபமடையப்போவதுஇருபுறத்திலுமுள்ள தமிழர் விரோத சக்திகள்தான் என்பது இந்த மீனவர்களுக்கு புரிகிறதோ என்னவோ??!! இவர்கள்தான் புலிகளை அழித்தவர்கள். தற்போது மிச்சம் மீதியிருக்கும் தமிழர்களையும் அழிக்காமல் ஓயமாட்டார்கள். என்ன பிறப்புகளோ.....?

- விசுகு

இது இலங்கை இந்திய கூட்டுச் சதி யாழ் மீனவர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். தமிழகத்து ஈழ ஆதரவு போரட்டங்களை திசை திருப்பும் ஒரு சதி.

- கிளியவன்

பல நூற்றாண்டுகளாக தமிழ் பேரரசர்களால் கட்டிக் காக்கப் பட்டு வந்த தமிழக, ஈழ உறவு இந்த நூற்றாண்டில் எம் கண் முன்னே அழிய ஆரம்பித்திருப்பதற்கு முக்கிய காரணமே.... போலித் திராவிடம் பேசும் தற்போதைய தமிழக அரசியல் வாதிகளால்தான் ஏற்பட்டது. இனியாவது திருந்தி தமிழனுக்காக ஒற்றுமையாக குரல் கொடுக்கும் முயற்சியில் இறங்க வேண்டும். சும்மா பாராளுமன்ற கதிரைகளை நிரப்புவதற்காக அரசியல் மேடைப் பேச்சுக்கள் ஒரு பலனையும் தரப் போவதில்லை. முதலாவது மீனவன் கடலில் சுட்டுக் கொல்லப்பட்ட போதே தமிழக கட்சிகள் ஒற்றுமையாக செயல்பட்டு, டெல்லியை பணிய வைத்திருக்க வேண்டும். செய்யவில்லை... இன்று மீனவர் படுகொலை 500 ல் வந்து நிற்கின்றது.

குதிரை ஓடிப் போன பின் லாயத்தை பூட்டி பிரயோசனமில்லை.

- தமிழ் சிறி

இப்ப பாருங்கோ நாங்கள் மீன்களை கூட அதுவும் சொந்த இனத்துக்கு விட்டுக் கொடுக்க மாட்டம் எண்டு அறிக்கை விடுகிற, அடிபடுகிற ஆக்கள்...! இப்படி எதையும் யாருக்கும் விட்டுக் கூட குடுக்காமல் எங்களுக்காக எல்லாரும் குரல் குடுக்க வேண்டும் எண்டு நினைக்கிறது அவ்வளவு நல்லதாய் பட இல்லை.... !

இந்த கேவலத்துக்கை ஒரு தமிழக தமிழன் முன் எடுக்க பலர் அங்கை தீக்குழிச்சு எங்கட பரதேசிகளுக்காக உயிரை குடுத்து இருக்கினம்... ஆனால் நாங்கள் கடலிலை ஓடுகிற மீனை கூட குடுக்க மாட்டம்.. ஏதோ நாங்கள் பிடிச்சு வைச்சு இருக்கிற மீன் எண்டாலும் பற வாய் இல்லை... !

திருமா எங்களுக்கு நண்பராக இருக்கிறாரோ இல்லையோ எதிரியாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்... அதுதான் இராஜதந்திரம்... அதாவது உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல்...!

- தயா

இழுவைப் படகு (ட்ராவ்லர்) பாவித்து மீனை ஆயிரக் கணக்கில் வாரிக் கொண்டு போவது தான் பிரச்சினை என்று இலங்கை மீனவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதனால் இன்னும் இழுவை வலை பாவிக்கும் வட பகுதி மீனவர்களுக்கு வாழ்வாதாரம் உண்மையிலேயே பாதிக்கப் படுகிறது.

மேலும்இ எங்கள் எல்லைக்குள் கிடைக்கிற மீன் வளத்தை எங்கள் வயிற்றுப் பாட்டுக்காக விட்டுத் தாருங்கள் என்று கேட்டால் அது எப்படி தமிழக உறவுகள் எங்களுக்காக குரல் கொடுப்பதோடு சம்பந்தப் படும் என்று நினைக்கிறீர்கள்?

- யஸ்டின்

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். சிங்களமும் இந்தியாவும் சண்டையில் ஈடுபடமாட்டா. தொப்புள்கொடி உறவுகள் இடையே பிரச்சனைகளை திட்டமிட்டு பெரிதாக்கல் நடக்கும். மேலே கூறப்பட்ட மாதிரி கூட்டணியினர்இ சீமான் போன்றோர் விளக்கமான அறிக்கைகளை விடுதல் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை தரும்.

- அகோதா

முல்லைத் தீவு பக்கம் சிங்களவர்கள் வந்து மீன் பிடித்து கொண்டு போவதால், தமிழர்கள் என்ற காரணத்தினால் தமிழகத்து மீனவர்கள் வந்து ட்ராலர் போன்ற வசதியான படகுளில் வந்து ஆயிரக் கணக்காக மீன்களை பிடித்து கொண்டு போக அனுமதியுங்கள் என்று போரினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு தன் வாழ்வாதாரத்தினை இழந்து தவிக்கும் ஒரு ஈழ மீனவனிடம் கேட்டால் அவர் என்ன சொல்வார் தயா?

- நிழலி

தேர்தல் நெருங்கும் போது இத்தகைய சிக்கல் கிளப்படுவது வாடிக்கையாகிவிட்டது... இதில் உள்குத்து கட்டாயம் உள்ளது.

1) முதலில் எல்லை தாண்டும் மீன்வர்களை கைது செய்து சில நாட்கள் உள்ளே வைத்திருக்கலாம்... ஆனால் சுட்டுதள்ளுவது எக்காரணம் கொண்டும் மனித தன்மையுள்ளவர்கள் ஏற்று கொள்ள கூடிய செயல் அல்ல..

2) ராமநாதபுரம் சம்ஸ்தானத்திற்கு சொந்தமான கச்ச தீவு திரும்ப மீட்கபட வேண்டும்.. அதுவே எல்லை கோடாக நிர்ணயக்கபட வேணும்..அப்பத்தான் கடலுக்கு ஏது எல்லை கில்லை என்ற பஞ்ச் டயலாக்ஸை நிறுத்த முடியும்...

- புரட்சிகர தமிழ் தேசியன்

யாழ்ப்பானத்தில் நடைபெற்ற தமிழக மீனவர் மீதான சுற்றி வளைப்புக் கைதை நியாயப்படுத்தும் எவரும் எரிகிற நெருப்பிற்கு எண்ணெய் வார்க்கிறீர்கள் என்பதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்.

இன்றைக்கு தமிழகத்துத் தமிழனையும், ஈழத்துத் தமிழனையும் மோத விடுவதால் யாருக்கு லாபம் என்று புரிந்துகொண்டால் இந்தப் பிரச்சனைக்கு இடமிருக்காது. தமிழகமும் எம்மைக் கைவிட்டால், இந்திய - சிங்கள அரக்கர்களின் எம்மீதான இனக்கொலை தங்கு தடையின்றி நடைபெறும். இன்றுவரை இந்திய மத்திய அரசு ஈழத் தமிழர் விடயத்தில் வெளிப்படையாகவேனும் அடக்கி வாசிக்கக் காரணமே தமிழகத்துத் தமிழன் எம்மீது வைத்திருக்கும் இரக்கம்தான். அது எப்போது தொலைந்து இல்லாமல் போகிறதோ அன்றைக்கே நாங்கள் அநாதைகள் ஆகிவிடுவோம். ஐய்யோ எங்களைக் காப்பற்றுங்கள் என்று கெஞ்சுவதற்குக் கூட எங்களுக்கு நாதியிருக்காது. சிறுகச் சிறுக சீமான் போன்றவர்களால் கட்டியெழுப்பப்பட்டு வரும் ஈழத்தமிழர் மீதான இரக்கத்தை தயவுசெய்து உங்கள் மோட்டுத்தனமான நடவடிக்கைகளாலும்,அறிக்கைகளாலும் அழித்து விடாதீர்கள்.

இவ்வளவு காலமும் சிங்கள ஆக்கிரமிப்பினுள் யாழ்ப்பாணத்தில் வாழவில்லையா, அப்போது மட்டும் எங்கே போயிருந்தது இந்த ஆத்திரமும், கோபமும்? உங்கள் வலைகளை அறுக்கிறார்கள் என்றால் அதை உரிய முறையில் தெரிவியுங்கள். அதை விட்டுக் கள்வர்களைப் போல அவர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்து விட்டு பிறகு எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர்களிடமே போய்த் தஞ்சம் கேட்பீர்கள்?? சிங்களவன் செய்ய வேண்டியதை நீங்களே செய்வதால் சிங்களவனிடம் நல்ல பிள்ளை என்று பெயர்தான் வாங்கமுடியும், ஆனால் தமிழகத்துத் தமிழனை நிரந்தரமாகவே எதிரியாக்கி விடுகிறீர்கள்.

இந்தச் சமூகத்தில் பிறந்ததற்காக நான் உண்மையாகவே வேதனைப்படுகிறேன். இறைவா, நாங்கள் எப்போதுதான் திருந்தப் போகிறோம்??

- ரகுநாதன்

இது காலம் காலமாக நடந்து கொண்டுதானிருக்கின்றது. அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் புகுந்து எமது மீனவர்களின் வலைகளை இந்திய றோலர்கள் வெட்டிச் செல்வதும். இலங்கை கடற்படை வெள்ளி பார்ப்பதும். சுடுவது தப்பென்று சொல்பவர்கள் இலங்கை மீனவர்களுடன் பேசினீர்களானால் உண்மை நிலை விளங்கும்.

- சிற்பி

பரவாயில்லையே! நல்லாத் தான் தமிழக - தமிழீழ மீனவர்களுக்கிடையே பிரச்சனையைத் தூண்டி விடுகின்றீர்கள்!!

- தூயவன்

(நன்றி: யாழ்)

CHEF/COOK WANTED
for a busy Sri Lankan Restaurant in Balham (SW12).
Exeperience Required.
Pay £7.50-£8.50 per hour
Please call Bahi
0772 054 7714

Services and repair all makes and models, MOTs, Air Conditioning, Welding Insurance Work, Bodywork, Tyres, Exhausts Automatic & Manual Gearbox Repairs, Engine Rebuilds Specialists, Courtersy Cars Available on Most Repairs and Vehicle Recovery Services

020 8689 1984 • 020 8648 345

MITCHAM WORKSHOP 1
R/O 36A, Grenfell Road,
Mitcham, Surrey CR4 2BY
T : 020 8648 3458
M : 07956274764
F : 020 8665 9111

ஒரு பேப்பர் ORU PAPER உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________________

Address: ____________________

____

____

Postcode: ____________________

Telephone: ____________________

Email: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தில் நடந்ததும் நடக்கப் போவதும்

வேல். தர்மா
(ஒரு கவிஞனின் உணர்வுகளில்)

ஆட்சி மாற்றம் ஏற்படுத்தும் புரட்சியாளர்கள் கைக்குண்டுகள் கண்ணி வெடிகள் அரச வங்கிக் கொள்ளைகள் அரசியல்வாதிகள் கொலைகளுடன் ஆரம்பிப்பதுண்டு. எகிப்தில் ஆட்சிமாற்றம் சமூக வலைத்தளங்கள் கைபேசித் தகவல்கள் செய்மதித் தொலைக் காட்சிகளுடன் நடக்கிறது.

எகிப்திய மக்கள் சிறந்த மதபக்தர்கள் ஆனால் ஆட்சியில் மதம் சம்பந்தப்படுவதை விரும்புவதில்லை. எகிப்து உலகின் மிக நீண்ட கலாச்சாரத்தை கொண்ட சில நாடுகளில் ஒன்று. எகிப்திய மக்கள் தொகையில் இளையோரே அதிகம். மொத்த மக்கள் தொகையில் மூன்றின் இரு பங்கினர் முப்பது வயதிற்கு உட்பட்டவர்கள்.

சமூக வலைத்தளங்களும் செய்தி ஊடகங்களும்

எகிப்திய எழுச்சிக்கு சமூக வலைத் தளங்களான பேஸ்புக்கும் டுவிட்டரும் காரணமல்ல என்று சில அமெரிக்க விமர்சகர்கள் காட்ட முனைகிறார்கள். மேற்கத்திய பண முதலைகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களால் மட்டுமே பன்னாட்டு ஊடக ஒழுங்கை நிலை நாட்ட முடியும் என்ற நிலைப்பாடு எகிப்தில் ஆட்டம் கண்டுவிட்டது. இதன் காரணமாக இருக்கலாம். எகிப்திய இளைஞர்கள் முபராக் ஆட்சியின் கொடூரம் சம்பந்தப்பட்ட படங்கள் காணொளிகளை சமூக வலைத்தளங்கள் மூலம் பகிர்ந்து பகிரங்கப்படுத்தினர்.

வால் கொனிம் (Wael Ghonim) என்ற எகிப்திய எழுச்சி ஏற்பாட்டாளர் சமூக வலைத் தளங்கள் இருந்திருக்காவிடில் இந்த எழுச்சித் தீ மூட்டப்பட்டிருக்காது என்கிறார். facebook.com/ElShaheeed என்ற தளத்திற்கு 819,292 இரசிகர்கள் இருக்கிறார்கள்.

எழுச்சியின் வித்து.

எகிப்திய எழுச்சி ஏற்ப்பாட்டாளர்கள் தங்கள் எழுச்சிக்கான நாளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்தனர். ஜனவரி 25-ம் திகதி எகிப்திய மக்களால் மிகவும் வெறுக்கப்படும் எகிப்தியக் காவல்துறையினரின் விழாவிற்கான பொது விடுமுறை நாள். அதை எழுச்சியாளர்கள் தமது எழுச்சியின் ஆரம்ப நாளாகத் தேர்ந்தெடுத்தனர். முப்பது ஆண்டுகளாக மக்கள் அடக்கி வைத்திருந்த ஆத்திரம் வெளிப்படும் நாளாக அது அமைந்தது. எகிப்தின் எழுச்சியாளர்கள் எகிப்தியபடைத்துறையினருடன் நல்ல உறவை வளர்ப்பதில் மிகக் கவனமாகச் செய்றபட்டனர். நீங்களும் மக்களும் ஒன்றே என்ற அடிப்படையில் அவர்கள் படைத் துறையினருடன் நடந்து கொண்டனர்.

முதல் தப்பி ஓடிய முபாரக்கின் மகன் கமல்

எகிப்த்திய படைத்துறையினருக்கு முபாரக்கின் மகனான கமலைப் பிடிக்காது. அவரை அறவே வெறுத்தனர். அவர் முபாரக்கிற்கு பின்னர் பதவிக்கு வருவதை படைத்துறை அதிகாரிகள் எவரும் விரும்பவில்லை. இதனால் எழுச்சி தொடங்கிய உடனேயே முபாரக் தனது மகனை இலண்டன் அனுப்பி விட்டார்.

முபாரக்கின் இமாலயத் தவறு.

எழுச்சியாளர்கள் வலைத் தளங்களையும் கைப்பேசிகளையும் பாவிக்கிறார்கள் என்பதற்காக எகிப்திய முன்னாள் அதிபர் ஹஸ்னி முபாரக் வலைத் தொடர்புகளையும் கைப்பேசிச் சேவைகளையும் துண்டித்தார். இது பலரையும் ஆத்திரமடையச் செய்தது. முபாரக்கிற்கு எதிரான எழுச்சிக்கு வலுவூட்டியது.

ஒரு அமெரிக்க சார்பு சர்வாதிக்கு எதிராக ஒரு அரபு நாட்டில் இசுலாமிய அடிப்படை வாதிகள் கிளர்ந்து எழாமல் மத சார்பற்ற ஒரு எழுச்சி நடந்தது ஒரு வித்தியாசமான நிகழ்வு.

அமெரிக்கக் காய் நகர்த்தல்

எழுச்சியைக் கட்டுப்படுத்த அமெரிக்க ஆலோசனைப்படி நியமிக்கப்பட்ட துணைத் தலைவர் ஒமர் சுலைமான் ஒரு முபாரக் கையாளே. அவருடன் பேச்சு வார்த்தை நடத்தும்படி ஹிலரி கிளிண்டன் எகிப்திய மக்களைக் கேட்டுக் கொண்டார். அதை எகிப்திய மக்களை ஆத்திரபடுத்தியது. ஒமர் சுலைமான் சாட்டுக்கு சில அரச ஒட்டுக் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நாடாத்தினார். அமரிக்கக் காய் நகர்த்தல் நாய் நகர்த்தல் ஆனது. வெற்றுக் குரைப்பு மட்டுமே. ஒமர் சுலைமான் எகிப்திய மக்கள் மக்களாட்சிக்குத் தயாரில்லை என்று கூறிக்கொண்டார். மக்கள் ஆத்திரம் இன்னும் அதிகமானது.

அமெரிக்காவில் நெருங்கிய நண்பர்களான சவுதி அரேபிய மன்னரும் இஸ்ரேலிய அரசும் அமெரிக்காவிற்கு பல அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கின. கடைசிவரைக்கும் முபாரக் பதவி விலகக் கூடாது என்று அந்த இரு தரப்பும் வேண்டின. அமெரிக்காவிற்கு சில ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் முபாரக்கின் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று. எழுச்சியாளர்களை பகைத்துக் கொண்டால் அது தனது பிராந்திய நலன்களைப் பெரிதும் பாதிக்கும் என்று உணர்ந்து கொண்டது. முபாரக் உடன் பதவி விலக வேண்டும் என்று அறைகூவல் விடுவதையும் அமெரிக்கா கவனமாகத் தவிர்த்துக் கொண்டது. அப்படிச் செய்தால் மற்ற அமெரிக்க ஆதரவுசர்வாதிகாரிகள் அமெரிக்காவைச் சந்தேகக் கண்ணோடு பார்த்து வேறு வகையில் சிந்திக்கத் தொடங்கி விடுவார்கள் என்று அமெரிக்கா அஞ்சியது.

காணமற் போன எழுச்சி ஏற்பாட்டாளர்

எகிப்திய எழுச்சி ஏற்ப்பாட்டாளர்களில் ஒருவரான வால் கொனிம் (Wael Ghonim) எழுச்சி தொடங்கி மூன்றாம் நாள் காணமற் போனார். அவர் காவல்துறையினரால் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் தான் விடுவிக்கப் படமைக்கு ஒபாமா காரணமாக இருக்கலாம் என்று அவர் சொல்கிறார். தனது விடுதலைக்கு கூகிள் மிகவும் பாடுபட்டது என்றும் அவர் கூறுகிறார்.

அவர் விடுவிக்கப்பட்ட பின் தொலைக் காட்சியில் தோன்றி தனக்கு நடந்ததையும் கூறினார். முபராக்கின் காவல்துறையினரால் கொல்லப்பட்டவர்கள் பற்றியும் கூறினார். இதன் பிறகு எழுச்சியில் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் இணைந்து கொண்டனர். இனி முபராக் பதவியில் இருக்க முடியாது என்று அமெரிக்கா முடிவு செய்தது. இதனால் பல மேற்கத்திய அரசியல் விமர்சகர்கள் ஒபாமா நிர்வாகம் எகிப்திய விவகாரத்தை மோசமாகக் கையாளவில்லை என்று கருதுகிறார்கள். திரை மறைவில் அமெரிக்க இறுதி நாட்களில்சில மிரட்டல்களையும் முபாரக்கிற்கு விடுத்தது. அதில் ஒன்று தனது வருடாந்த இரு பில்லியன் டொலர் உதவியை நிறுத்துவது.

இசுலாமிய சகோதரத்துவ அமைப்பு

எகிப்தின் இசுலாமிய சகோதரத்துவ அமைப்பு தற்போதுள்ள ஒரு ஒழுங்கமைக்கப் பட்ட கட்சியாகும். அது இப்போது மதசார்பற்றவரான மொகமட் அல் பரடியை (Mohamed ElBaradei) என்னும் முன்னாள் பன்னாட்டு அணுசக்தி முகவரகத்தின் தலைவரை தலைமைத்துவம் ஏற்கும்படி கேட்கிறது. இசுலாமிய சகோதரத்துவ அமைப்பு தமக்கு ஆட்சியைப் பிடிக்கும் எண்ணம் இல்லை என்று கூறுகின்றனர். மொகமட் அல் பரடி (Mohamed ElBaradei)தான் கேட்டுக் கொள்ளப்பட்டால் எகிப்தின் தலைவராகுவேன் என்கிறார்.

இசுலாமிய சகோதரத்துவ அமைப்பிற்கு 20% மான எகிப்திய மக்களின் ஆதரவே உள்ளது என்றும் கூறப்படுகிறது. ஊழலற்ற சிறந்த ஆட்சியையும் சுதந்திரத்தையும் வேண்டிச் செய்யப்பட்ட மக்கள் எழுச்சி இனி எத்திசையில் பயணிக்கப் போகிறது? இசுலாமிய சகோதரத்துவ அமைப்புக்கு இளைய தலைமுறையினரின் ஆதரவுகுறைவு. முப்பதுவருடங்களாக எதுவும் செய்யாமல் இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டை இளைய தலைமுறையினர் இசுலாமிய சகோதரத்துவ அமைப்பின் மீது வைக்கின்றனர்.

இசுலாமிய சகோதரத்துவ அமைப்பு ஒரு அரசியல் கட்சியல்ல அது ஒரு transnational movement நாடு கடந்த அமைப்பு என்று சொல்வோரும் உண்டு. இசுலாமிய சகோதரத்துவ அமைப்பு பல நாடுகளில் செயற்படுகிறது. அது எகிப்தில் ஆட்சி மாற்றத்தையும் ஆட்சி முறை மாற்றத்தையுமே விரும்புகிற ஆள விரும்பவில்லை என்றும் கூறுகின்றனர் சிலர்.

காவல் துறையின் விழா நாளான ஜனவரி 25இல் காவல் துறையினருடன் இணைந்து கொண்டாடாமல் அவர்களை எதிர்க்கக் கூடாது என்று முதலில் இசுலாமிய சகோதரத்துவ அமைப்பின் ஒரு தலைவர் எஸ்ஸாம் அல் எரியன் தெரிவித்திருந்தது இங்கு கவனிக்கக் தக்கது.

முபராக்கின் மந்திரி சபை இப்போதும் செயற்படுகிறது. ஊழலும் கொடுமையும் நிறைந்த பிராந்திய கவர்னர்கள் இன்றும் உள்ளனர். எகிப்திய அரச இயந்திரம் இப்போதும் முபாரக்கின் அடியாட்கள் பலரைக் கொண்டுள்ளது. இவர்கள் இனிஎப்படிச் செயற்படுவார்கள்? புதிய அரசோடு ஒத்துழைப்பார்களா? என்பவை பெரும் கேள்விகள்.

வேலை நிறுத்தங்கள்

இச் சந்தர்ப்பத்தை பாவித்து காவல் துறை உடபட பல அரச ஊழியர்கள் அதிக ஊதியம் கேட்டுவேலைநிறுத்தத்தில் ஈடுபட முயன்றனர். இவர்கள் முபராக் ஆதரவாளர்களே. புதிய இராணுவ ஆட்சியாளர்கள் வேலை நிறுத்தத்தை சட்ட விரோதமாக்கியுள்ளனர்.

மாற்றுத் தலைமை

வால் கொனிம் (Wael Ghonim)ஐ துரோகி என்றும் உளவாளி என்றும் குற்றம் சாட்டப்படுவதுண்டு. இது எழுச்சியாளர்களுக்குள் பல பிரிவினர் உண்டு என்பதைக் காட்டுகிறது. சரியான மாற்றுத் தலைமை இல்லாமை இப்போதைய எகிப்தின் பெரும் பிரச்சனை.

உட்பூசல் இன்றி ஒற்றுமையாக பலதரப்பட்ட பிரிவினர்களை ஒன்றிணைக்க வேண்டியதும் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டியதும்இப்போது பெரும் பிரச்சனை. எகிப்திய எழுச்சியில் படைத்துறையினர் நடந்த விதம் மிகவும் ஆச்சரியப்படவைத்ததோடு மிக மிக பாராட்டப்பட்ட வேண்டிய ஒன்றுமாகும்.

எகிப்தியப் பல்கலைக்கழக அரசறிவியல் பேராசிரியர் முஸ்தபா ஒல்வி கூறுகிறார் எகிப்தின் சமூக அரசியல் கட்டமைப்பு பெரிதும் மாறி விட்டது. இப்போது இளைஞர்கள் இதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் ஒரு மாபெரும் அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளார்கள். இதை நிச்சயம் எகிப்திய படைத்துறையினர் கருத்தில் கொண்டு நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்வார்கள்.

பலரும் படைத்துறையினருக்கு எகிப்தை சரியான பாதையில் இட்டுச் செல்வதைத்தவிர வேறு வழியில்லை என்று கருதுகின்றனர். இப்போது எழுச்சியை அரங்கேற்றி வெற்றி கண்ட மதசார்பற்ற எகிப்திய இளைஞர்களின் பெரு முயற்சி வீண்போனால் இசுலாமிய அடிப்படைவாதிகள் கை ஓங்கலாம். மேற்குலகம் தனது முக்கிய வர்த்தகப் பாதையான சூயஸ் கால்வாய் ஓரத்தில் அப்படி ஒன்று நடப்பதை அறவே விரும்பாது. பண உதவி, நோபல் பரிசு என்பவற்றுடன் அமெரிக்கா மீள நுழையுமா? காமால் நாசருக்குப்பின் அதுதான் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Independence without civil liberties is a farce

By Basil Fernando

Chair of the Asian Human Rights Commission

Sri Lanka was celebrating its independence from the British Empire on February 4, 2011. The lamentation that independence has not meant a great deal to the people of Sri Lanka is commonly heard. However, the causes that created this situation have often not been examined.

The very meaning of independence for citizens of any country is the respect achieved for the liberties of the individuals that constitute the nation. Overcoming the suppression caused to the liberty of the individuals by a foreign power is at the heart of independence. However, the mere absence of the foreign power does not mean that the citizens have gained a victory over the suppression of their civil liberties. A closer examination would show that the extent of the enjoyment of civil liberties as individuals, by Sri Lankan now is much less than those they enjoyed under the British. Territorial independence has been achieved. However, civil liberties have been reduced particularly since the adoption of 1978 constitution.

It is easy to illustrate this. Take the case of habeas corpus. This is the most basic legal protection that is available to an individual against the arbitrary power of the state. Under the British Empire this legal protection was available even during the situation of a war. This was illustrated by famous Bracegirdle case- The Bracegirdle judgment was based on the principles of the Magna Carta. As stated by Abraham CJ,

"There can be no doubt that in British territory there is the fundamental principle of law enshrined in Magna Carta that no person can be deprived of his liberty except by judicial process. The following passage from The Government of the British Empire by Professor Berriedale Keith, is illuminating and instructive. In Chapter VII of Part I., he discusses 'The Rule of Law and the Rights of the Subject' p. 234. He says: -

'Throughout the Empire the system of Government is distinguished by the predominance of the rule of law. The most obvious side of this conception is afforded by the principles that no man can be made to suffer in person or property save through the action of the ordinary Courts after a public trial by established legal rules, and that there is a definite body of well known legal principles, excluding arbitrary executive action. The value of the principles was made obvious enough during the war when vast powers were necessarily conferred on the executive by statute, under which rights of individual liberty were severely curtailed both in the United Kingdom and in the overseas territories. Persons both British and alien were deprived legally but more or less arbitrarily of liberty on grounds of suspicion of enemy connections or inclinations, and the movements of aliens were severely restricted and supervised; the courts of the Empire recognized the validity of such powers under war conditions, but it is clear that a complete change would be effected in the security of personal rights if executive officers in time of peace were permitted the discretion they exercised during the war, and which in foreign countries they often exercise even in time of peace.'"

This is not the case in Sri Lanka anymore. The capacity of legal protection under habeas corpus lies with power of the court to intervene against the decisions of the executive. This power today is much less available than it was under the British Empire. In the Bracegirdle case an Australian citizen who acquired sympathy for the independence struggle of the Sri Lankan people was disliked by the colonial administration and the governor issued an order for his immediate deportation. This was challenged in the courts. The courts not only vacated the governor general's order and nullified it but also stated the obligation of the courts to intervene when the liberties of the individual are curtailed as a right of the courts which is not limited even during the conditions of war.

However that power that the court had to nullify an order of the governor general representing the British crown is not available today to nullify an order of the executive president of Sri Lanka. The executive president of Sri Lanka enjoys a power which is very much more than a power enjoyed by a governor general representing the British crown in the suppression of the liberties of the individual. The courts are powerless when the president acts. Under the constitution the president represents the executive power of the state.

Today in actual fact all the major actions of the executive is done under the name and direct involvement of the president. This is also true of the execution of all issues relating to public security. If those actions violate the civil liberties of the individual there is nothing that the courts can do about it.

Independence means little when the power of the courts is reduced. If the courts do not have the power to protect the liberty of the individuals there is no other component of the government that is capable of doing that task. Therefore the citizens of Sri Lanka today do not have the protection of the courts to safeguard their civil liberties and by that token they have no ultimate authority to turn to for protection.

Can the citizens who have less protection under the law be referred to as citizens of an independent country? The protection of the individuals that constitute a country is the very essence of the meaning of independence. The absence of that protection virtually takes away the meaning and notion of independence.

Even under the colonial empire the administration recognised the rights of the labour unions to organise themselves and to function freely. In fact, the independence trade union movement grew within Sri Lanka during the time of the colonial powers. With independence have come far greater restrictions on the capacities of the labour movements to organise themselves. With the enactment of the 1978 Constitution a structure was created within which any action could be taken to crush the legitimate struggles of the working people. The way in which the 1980 general strike was crushed and the manner in which 40,000 workers were deprived of their employment due to their participation in the strike symbolises the deprivation of the liberty that has become a hallmark of the way a citizen is treated in this independent nation.

The same can be said for the rights of peasants, farmers, students and all marginalised sections of society. And this of course, includes sections of the minorities. Today's minorities are without any kind of protection before the law. They also do not have the protection that goes with the powers that should be provided to their local representatives. The weakening of the minorities has become a boast of the political party in power.

Can the weakened citizens claim that they are enjoying the benefits of an independent nation? Of course, this is not the case. The 1978 Constitution has created the situation where the liberties achieved where the freedoms created by the independence from the British Empire have been taken away by a new kind of tyranny born within the nation itself. Today, all the basic rights that the citizens gained against the colonial power have been taken away and this includes the right of franchise. With draconian limitations imposed on the capacity of Sri Lanka to have to have free and fair elections the very meaning of the election of representatives by the franchise of the people has lost much of its meaning. Voting in elections remains a façade. The substance of free and fair elections does not exist.

In short, genuine independence for the Sri Lankan is not possible as long as the 1978 Constitution remains in operation. Sometime back there was a loud claim that the crushing of the LTTE had marked the genuine independence of Sri Lanka. However, experience now shows that this is not the case. The tyranny that was created by the 1978 Constitution has even increased with the 18th Amendment to the Constitution. The tyrannical system has increased its power and the citizens have lost their civil liberties.

Liberties of personal freedoms and even property rights can today be attacked with impunity. The removal of people from their property by force is a symbol of the extent to which all protection is lost .

The struggle for independence is unfinished. The challenge remains to defeat the forces that uphold the 1978 Constitution and remove this constitution altogether and replace with a constitution that recognises the basic civil liberties of all the individuals that constitute the nation. In such a nation courts must have the power to protect the individual from arbitrary actions of all, including the head of the state.

Until that happens, all celebrations of independence will be a farce.

The day of independence is one that reminds us of the cynical manner in which a small group of people are having the last laugh when the majority of the citizens are deprived of their rights.

Courtesy: Sri Lanka Guardian

WANTED

பிரித்தானியாவின் எப்பாகத்தில் இருந்தாலும்
வியாபார நிலையங்கள் தேவை.

Karan : 07413087026

FOR SALE

Renault Clio 5 Doors,Automatic W. Registration,
Croydon பகுதியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 07783581715

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Judging international criminal justice

By: Kyle R. Olson
CHICAGO TRIBUNE

The Holocaust needed closure and the Nuremberg trials allowed the world to do it.

Just months after World War II ended, 22 Nazi leaders were put on trial for war crimes and crimes against humanity before a hastily selected international panel of judges. The judges convicted 19 of the defendants and 12 were sentenced to death. While Nuremberg was welcomed by many, critics derided it as "victor's justice" that lacked the qualities of a proper legal process. So began the modern international criminal justice movement, with advocates and skeptics to boot.

International criminal justice has come far since Nuremberg and a conference at Northwestern University on Monday will judge its worth. The Balkan wars' ethnic cleansing, the Rwandan and Cambodian genocides, the blood diamonds of Sierra Leone and the terrorist killing of Lebanon's former prime minister have all found international legal refuge where the courts at home were not up to the task. Still, naysayers, citing the flaws of the International Criminal Court, claim that international criminal justice — despite its humanitarian agenda — has not come far enough and should be buried once and for all. Wars and their attendant crimes — however grotesque — belong solely to the countries with the blood-stained soil, they say. According to these critics, the grimmest displays of human behavior, which tend to take the form of mass murder, torture, rape and ethnic cleansing, are not the business of far-away countries, much less an ivory-tower court sitting thousands of miles away in The Hague.

This view gets it wrong

For one, the naysayers ignore what war crimes tribunals, other than the International Criminal Court, have given to the international community. 2010 was a big year. The Special Tribunal for Lebanon, created to prosecute those responsible for the 2005 assassination of former Lebanese Prime Minister Rafik Hariri, issued its first indictment. Radovan Karadzic, the highest profile figure since Slobodan Milosevic to appear in The Hague for crimes committed in the 1990s Balkan wars, is in the full throes of trial before the former Yugoslavia war crimes court. And the Khmer Rouge tribunal in Cambodia, established to address the nearly 2 million deaths suffered at the hands of Khmer Rouge founder Pol Pot's communist regime in the late 1970s, handed down its first conviction in July.

And what of the International Criminal Court? It is true that the court has been lacing up its shoes for awhile. But this past year, it took major strides. The crime of aggression was codified to join war crimes, crimes against humanity and genocide. In 2017, member states can vote to formally activate the court's jurisdictional power over the new crime.

In March, the prosecutor gained authorization to investigate the 2009 massacres in Kenya which saw more than 29 people stoned and hacked to death. Four other investigations continue, including a probe into what the U.S. government has called genocide in Sudan's Darfur region. Two trials are also under way: one against a Congolese rebel leader, Thomas Lubanga, accused of enlisting child soldiers to murder, mutilate and mass rape; the other against two of Lubanga's underlings for the same alleged wrongs.

These achievements provide hard evidence that international criminal justice, even with its flaws, is working.

So when the major players fly into Chicago from The Hague to speak at Northwestern's annual Atrocity Crimes Litigation Year-in-Review Conference on Monday, it should make for interesting conversation about whether international criminal law is worth the effort. Given this past year, my prediction is that while the naysayers may not say "yes," they will say less.

Kyle R. Olson is a Chicago attorney at Baker & McKenzie. He assisted the office of the prosecutor for the U.N. war crimes tribunal for the former Yugoslavia in The Hague.

Courtesy: Chicago Tribune

He just used 'Twitter and Face-book'

In Egypt last week, Egyptians made their own revolution against a dictatorship. I do not know all they were thinking, and I do not know what words will come to symbolize the heroism, but I was certainly impressed by the words of Wael Ghonim, the 30-year-old Google executive, who played the same role as Paul Revere and other riders who pounded along the Boston-Lexington-Concord road shouting, "The Redcoats are coming!"

Ghonim, of course, didn't have to shout. He had Twitter and Face-book to warn and organize his people. His quote was not poetic but astonishingly modern:

"I worked in marketing, and I knew if you built a brand you can get people to trust the brand."

Ghonim filled the site he created not only with reports and video clips of police brutality, but with slogans and quotes to build the brand, most notably using the name of a young Egyptian who was beaten to death by police: "We Are All Khaled Said."

TrainingConnect
www.trainingconnect.co.uk
• UK • India • China • Dubai • Russia •

• ESOL with Citizenship • Points Based Test • Spouse Visa Test • Multilingual Staff
• You pay only once & we train you until you pass • Successfully trained over 28,000 students
• Courses from £200 • Certificates with 20 days • Online numeracy and literacy courses

National Centres :
Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Birmingham, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Croydon, Wolverhampton.

Head Office :
Vista Centre, 9th Flr, 50, Salisbury Road, Hounslow TW4 6JQ

To enrol or enquire about your nearest centre, call our team on 0208 538 0248

இலண்டன் தமிழ் நிலையம்
நடாத்தும்
தமிழ்ப் பாடசாலைக்கிடையேயான
நாவன்மைப் போட்டி

இடம்: Wembley High School, East Lane, Wembley HA0 3NT
காலம்: 20-03-2011 நேரம்: காலை 10.00 மணி

விண்ணப்பதாரர் முறையே வயது, தலைப்பு, நேரம் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளவும்.
30-01-11 அன்று கீழே குறிப்பிட்ட வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்யவும்

பிரிவு	வயது	தலைப்பு	நிமிடங்கள்
அ	3-5	புதுச்சட்டை* / பாலர் பாடல் - 31-01-2006 - 30-01-2008 வயதிற்கு இடைப்பட்டவர்கள்	2
ஆ	5-7	ஓடி விளையாடு பாப்பா* 31-01-2004 -30-01-2006 வயதிற்கு இடைப்பட்டவர்கள்	3
இ	7-9	காலத்தினால் செய்த நன்றி* / சிறுகதை* 31-01-2002 - 30-01-2004 வயதிற்கு இடைப்பட்டவர்கள்	4
ஈ	9-11	ஆசைக் கனவு* / மாணவர் கடமை / கல்வி 31-01-2000 -30-01-2002 வயதிற்கு இடைப்பட்டவர்கள்	5
உ	11-13	வாசிப்பு பழக்கம்* / முதியோர் பேண் / தாய் நாடு 31-01-1998 -30-01-2000 வய'ற்கு இடைப்பட்டவர்கள்	6
ஊ	13-15	விபுலாநந்த அடிகளார்* / சுற்றுச் சூழல் பாதுகாப்பு / இயற்கை இன்பம் 31-01-1996 -30-01-1998 வயதிற்கு இடைப்பட்டவர்கள்	6
எ	15-17	தமிழின் சுவை* / தொழில் நுட்ப வளர்ச்சி / யாதும் ஊரே யாவரும் கேளீர் 31-01-1994 -30-01-1996 வயதிற்கு இடைப்பட்டவர்கள்	6

* இப் பேச்சு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி : 10-03-2011

நாவன்மைப் போட்டியில் தெரிவாகும் ஒவ்வோர் பிரிவுக்கான முதல் மூன்று திறமைசாலிகளுக்கும் 04-06-2011 அன்று வின்ஸ்ரன் சேர்ச்சில் மண்டபத்தில் நடைபெறும் கலாச்சார மாலை விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவம்
Full Name:........................
Address:........................
படிக்கும் தமிழ்ப் பாடசாலை:........................
தொலைபேசி இலக்கம் :........................ பிறந்த திகதி :........................
பிரிவு :........................ (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ தேர்ந்த தலைப்பு :........................

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: Inter - School Elocution Competition
253 East Lane, Wembley, Middx HA0 3NN. Tel 020 8908 2646 / 020 8904 5939 / 079 5654 1844

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KIDSபேப்பர்



7 Wonders

The Great Pyramid at Giza

TThe Great Pyramid of Giza is about 4,500 years old, and is the only ancient wonder still standing.

Until the early 1800's, the Great Pyramid at Giza was the tallest building in the world!

The Great pyramid is nearly 800 feet long, 450 feet high, and built with over two million of blocks of stone.

The average weight of each stone is about 2,500 pounds - around the same weight as a car! .

Ant Jokes

The elephants of the jungle were playing basketball. There was one ant in the midst of all this. What was he doing?

He was the referee.

An ant and an elephant are playing hide-and-seek near a place which has 1000 temples. The elephant starts counting. The ant goes into one of the temples and hides. The elephant finishes counting, and within a few seconds knows which temple the ant entered. How does he know which one?

The ant left his slippers outside the temple.

Why did the ant race along the boxtop?

Because the box said: "Tear Along Dotted Line."

Colouring

Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last issue winner is Virada Ravindran (10 years)

Mothers day - *inspiring story about mother*

A man stopped at a flower shop to order some flowers to be wired to his mother who lived two hundred miles away.

As he got out of his car he noticed a young girl sitting on the curb sobbing.

He asked her what was wrong and she replied, "I wanted to buy a red rose for my mother.

But I only have seventy-five cents, and a rose costs two dollars."

The man smiled and said, "Come on in with me. I'll buy you a rose."

He bought the little girl her rose and ordered his own mother's flowers.

As they were leaving he offered the girl a ride home.

She said, "Yes, please! You can take me to my mother."

She directed him to a cemetery, where she placed the rose on a freshly dug grave.

The man returned to the flower shop, canceled the wire order, picked up a bouquet and drove the two hundred miles to his mother's house..

AMAZING FACTS

- The act of snapping one's fingers is called a "fillip".
- The dot on top of the letter 'i' is called a tittle.
- Skepticisms is the longest word that alternates hands when typing.
- Any number, squared, is equal to one more than the numbers on either side of it -- 4x6 is 24, 5x5 is 25 etc.
- A "hairbreadth away" is 1/48 of an inch.
- The word four has four letters. In the English language there is no other number whose number of letters is equal to its value.
- The king of hearts is the only king without a moustache.
- No piece of square dry paper can be folded more than 7 times in half.
- A crocodile cannot stick its tongue out.
- The ant can lift 50 times its own weight, can pull 30 times its own weight and always falls over on its right side when intoxicated.



Show Amy the way to her tricycle.

Vigaashan · Asokan (5years)

Colouring

Virada Ravindran

Colouring

Age: 10

WINNER

Word Search

O	D	E	L	K	U	R	U	V	I
J	E	M	A	I	N	A	U	A	R
S	M	R	D	L	V	F	T	N	G
E	K	U	Y	I	L	Q	Y	Z	A
I	U	W	P	S	O	H	I	B	N
J	E	M	U	U	O	P	C	X	T
U	K	A	R	A	R	S	O	P	C
X	T	Y	A	U	K	L	M	R	D
V	F	I	T	N	G	U	F	U	N
B	R	L	A	I	N	W	S	O	H

Hidden Words:

Subject: Domestic living things

KILI, PURA, MAINA, MAYIL, KUYIL, KURUVI

Submitted by:

By: Vennila Kuruparan (Age 5) (Harrow)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் தமிழர்களுக்காக தமிழர்களினால்
ஆரம்பிக்கப்பட்ட முதல் நிறுவனம்

JSN

Plumbing & Electricals ltd

6வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு **Boilers spare parts & control** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எல்லா விதமான Boiler உதிரிப்பாகங்களும் நியாயமான விலையில் இங்கே பெற்றுக் கொள்ளலாம்

In Business over 6 years

FREE CONSULTATION

- எல்லா விதமான **Porcelain, Ceramic Tiles & Kitchen grantes Worktop** நல்ல **quality** ஆகவும் நியாயமான விலையிலும் செய்து தரப்படும்.
- **Underfloor Heating(Water & Electric)** மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
- பல முன்னணி நிறுவனங்களுடன் நேரடி விநியோகஸ்தர்கள் உள்ளபடியால் நியாயமான விலையில் பெறறுக் கொள்ளலாம்.

- Vaillant
- Worcester
- Booster
- Ideal Standard
- Mega flow
- Radiator

- Mira
- Ideal Standard
- Armitage Shanks
- Kaldewei Bath
- kudox
- Saneux
- Grohe
- Handgrohe
- Franke
- Jacuzzi
- Roca
- Merlyn

போன்றவற்றை தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Hudson Reed (Tab & Shower)
(20 வருட உத்தரவாதம்)

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய Bathroom Showroom தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Morden Bathroom முதல் சாதாரண **Bathroom** வரை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

Italy, Germany & Spain நாடுகளிலிருந்து மிக உயர்தரமான **Bathroom furniture** களை பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்

இலண்டனில் எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது



162 Pinner Road, Harrow, Middlesex, HA1 4JJ

உடன் அழையுங்கள்!

Tel: 020 8427 0553
Fax : 020 8427 0550

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவியற் போர்

பாகம் 87

சென்ற முறை தமிழத் திரைப் படத்துறையில் பெரும் பணமுதலைகளின் ஆதிக்கம் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். தமிழுக்காகவும், தமிழினத்துக்காகவும், திராவிட நாட்டுக்காகவும் பாடுபடப் போகிறோமென்று, சமூகத்தின் மிக அடிமட்டத்திலிருந்து வெளிக்கிட்டு, சினிமாவாலும் அரசியலாலும் சம்பாதித்து, இன்று தெற்காசியாவின் மிகப் பெரிய பணமுதலைகளாக மாறிவிட்டன சில குடும்பங்கள். இன்று அவர்களின் அரசியல் தலைமைத்துவங்களிலிருந்து வெளியேறி மீட்சி பெறமுடியாது தத்தளிக்கும் பரிதாப நிலைக்கு பாக்கு நீரிணையின் இரு கரைகளிலுமுள்ள ஒட்டு மொத்தத் தமிழினமும் வந்துவிட்டது. இத்தனைக்கும் இத்தலைமைகள் திராவிட இயக்கக் கொள்கையென்கின்ற உள்ளூர்த் தயாரிப்பான (லோக்கலி மேட்) சோசலிச தத்துவமொன்றின் தயாரிப்பாளர்கள். அரிதாரம் போட்டவர்களாதலால் மிக இலகுவாக நடித்து சுரண்டல் முதலாளித்துவத்தை மேற்படி கொள்கைக்கூடாக நாட்டில் பரவவிட்டு அதன் மொத்தப் பலனையும் தாங்களே பெற்றுக் கொண்டார்கள். அதனால் அன்று மிகச்சாதாரண மனிதராயிருந்தவர் இன்று தெற்காசியாவிலேயே மிகப் பெரிய புள்ளியாகவும் அந்தப் பெருமரத்தில் கிளைவிட்ட பலரும் மிகப் பெரிய சுரண்டல் முதலாளிகளாகவும் மாறிவிட்டனர். இன்று தமிழகத்தின் கலாச்சார பாரம்பரியங்களையேமாற்றியமைத்துக் கொண்டிருக்கும் சினிமா, ரிவி போன்ற ராட்சத தொழில்களின் 'மொனோப்பொளி' முதலீட்டாளர்களாக இவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழினத்தின் வாழ்வியலில் சின்னத்திரையும் சினிமாவும் புகுந்து விளையாடுவது சர்வசாதாரணமாகிவிட்டது. தமிழ்நாட்டில் சில இளம் குடும்பப் பெண்களின் (அவர்கள் சுத்தத் தமிழர்கள்) பேச்சு முறையில்க் கூட சினிமா ரிவி போன்றவற்றில் சில பெண்களால் பின்பற்றப்படும் முத்தல் மதலை தொற்றிக் கொண்டுவிட்டது. இதை நான் நேரிலேயே அவதானித்தேன். அவர்கள் வலிந்து அந்தப் பேச்சு ஸ்டைலில் பேசத் தொடங்கி விட்டார்கள். தமிழைத் தமிங்கலமாக்கிய சினிமாவும் ரிவியும் தற்போது தமிழ் உச்சரிப்பிலும் சகிக்க முடியாத மாற்றத்தைக் கொண்டுவரத் தொடங்கிவிட்டன. சின்னத்திரைகளில் வரும் குடும்பப் பாங்கான நாடகங்கள் என்ற போர்வையில் நடைபெறும் கண்றாவிக் கூத்துகள் பெரும்பாலான குடும்பங்களின், குறிப்பாகப் பெண்களின் மிக முக்கிய பொழுது போக்காக மாறி அதற்கடுத்து ஒரங்குலம்தானும் அறிவியல் பற்றிய சிந்தனை நோக்கி அவர்கள் காலடியெடுத்து வைக்க முடியாமல் செய்து கொண்டிருக்கின்றன.

இரண்டாம் மிலேனியமும் கடந்து இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் காலடியெடுத்து வைக்கும் தமிழன் தனது வரலாற்றை இறங்கு தளத்தில் சரிக்கிறானா ஏறுதளத்தில் உயர்த்துகிறானா என்பது புரியாத புதிராகவேயிருக்கிறது. சமூகவியலாளர்கள் எவ்வாறு ஒரு இனத்தின் வளர்ச்சிப் போக்கை மட்டிடுகிறார்கள் என்பதை அத்துறையில் அறிவில்லாததால் என்னால் இங்கு குறிப்பிட முடியவில்லை. பல்கலைக் கழக மட்டத்தில் ஆய்வாளர்கள் குறிப்பாகத் தமிழ், தமிழர் பண்பாட்டுத் துறை கற்கை நெறிகளில் ஈடுபடுவோர் இத்தகைய ஆய்வுகளில் ஈடுபட முடியும்.

ஒரு நாட்டை அல்லது ஒரு பிரதேசத்தை ஆய்வு செய்வோர் அதன் எல்லைகளுக்குள் தங்கள் ஆய்வுகளை நெறிப்படுத்துகிறார்கள். பொருளாதார வளர்ச்சி, உள்ளகக் கட்டுமானம் என்று பலவகைப்பட்ட விடயங்களுக்குமான மதிப்பீடுகள் அந்த நாட்டின் புவியியல் எல்லைகளுக்குள் நடைபெறுகின்றன. இவ்வாறே ஓர் தேசிய இனத்தையும் அதன் சமூக வளர்ச்சியையும் பொருளாதார, பண்பாட்டு அணுகு முறைகளின் கீழ் ஆய்வு செய்ய முடியும். அங்கே சற்றுத் தடங்கலாக இருக்கக் கூடியவை இன அடையாளங்கள் என்கிற அளவீடில்லா எல்லைகள்தான். அதாவது ஆங்கிலத்தில் சொல்வதாயின் குவாலிட்டேட்டிவ் லிமிட்ஸ். ஆனாலும் ஐநா போன்ற நிறுவனங்கள் இன அடையாளங்களை ஏற்றுக் கொள்கின்றன.

யூதர்கள் இஸ்ரவேலில் மட்டும் வாழவில்லை. உலகில் பரந்து வாழ்கிறார்கள். அவர்களின் இன அடையாளங்கள் ஏற்கப் பட்டதால்த்தான் அவர்களுக்கெனவோர் நாடு இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

அத்தகைய இனத்துவ அடையாளங்களை பல்வேறு ஆய்வு நெறிகளினூடாக வெளிக்கொணர்ந்து நிலைப்படுத்தி இந்த உலகில் தமக்கெனவோர் நாட்டைக் கட்டியெழுப்பவோ அல்லது அந்தத் தாயகத்தின் தேவைக்கான தார்மீக ஆதரவை உலகளாவிய ரீதியில் உருவாக்கி தக்க சமயத்தில் அவ் ஆதரவைப் பயன்படுத்தவோ முடியாமல் போகுமானால் அதுவே தமிழரின் வரலாற்றுச் சரிவு நிலையாகிவிடும்.

ஆயுதப் போரொன்றின் மூலமாகவோ, அன்றி ஜனநாயக ரீதியான போராட்டங்களினூடாகவோ யூதர்கள் தமக்கெனவோர் நாடு வேண்டுமெனப் போராடியதாகத் தெரியவில்லை. தங்கள் தாயகத்துக்கு வெளியே தமக்கெனவோர் நாடு வேண்டுமென்னும் முணுமுணுப்பைத் தவிர அவர்கள் பெரிதாக எதையும் செய்யவில்லை. தாங்கள் வாழ்ந்த நாடுகளில் அவர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதற்கான காரணம் அவர்களின் தாயகத்திற்கான போராட்டமாக இருக்கவில்லை.

தங்களுக்கெனவோர் நாடு வேண்டுமென்னும் கொள்கைக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டுவதில் சியோனிச இயக்கம் வெளிநாடுகளிலிருந்தே தன் பங்களிப்பைச் செய்தது. ஆக நாடு அமைக்கப்பட்ட பின்னர்தான் அதன் எல்லைகளை விஸ்தரிக்க அராபியர்களுடன் பல போர்களை இஸ்ரேலியர்கள் நடத்தினார்கள். இன்று வளர்ச்சியடைந்த நாடுகளின் வரிசையில், மத்திய கிழக்கில் எந்த நாட்டுக்குமில்லாத பாராளுமன்ற ஜனநாயக நாடு என்னும் தகுதியோடு இஸ்ரேல். நிமிர்ந்து நிற்கிறது. ஐநா வின் மனித மேம்பாட்டுச் சுட்டெண் அளவீடுகளின்படி மத்திய கிழக்கில் இஸ்ரேலே உயர்வானதாக இருக்கிறது.

இத்தகைய மனித மேம்பாட்டு சுட்டெண் ஒருநாட்டுக்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது நாடில்லாவிட்டாலும் தமது தேசிய இன அடையாளங்களுக்காகப் போராடும் வேறு இனங்களுக்கும் பொருந்துமா என்பது தெரியவில்லை. ஆனாலும் தேசிய இனங்கள் தங்களுக்கான வேறு பல சுட்டெண்களை உருவாக்கி ஆய்வறிக்கைகளை சர்வதேசத்தின் முன் வெளிக்கொணர முடியும்.

இவ்வளவு காலமும் இராணுவ யுத்த தந்திரோபாயங்களின் மூலமாக வென்றெடுக்க முடியாமற் போய்விட்ட எமது தாயகத்தை, அங்குள்ள அடக்கு முறைச் சூழ்நிலைகளினிடையே, ஜனநாயக வழிமுறைகளைப் பாவித்து வென்றெடுக்கவோ அல்லது அங்கு ஒரு அரசியல் தீர்வைத்தானும் கொண்டு வரவோ எம் உறவுகளால் முடியப் போவதில்லை. அறிவியற்போரை வெளிநாடுகளிலிருந்து யூதர்கள் செய்ததைப் போல தமிழர்கள் செய்யும்போது தமிழினத்தின் அடையாளங்கள் மேம்பட வழிபிறக்கும். இத்தகைய முன்னேற்றமிக்க இனத்திற்கோர் தாயகம் அவசியம் தேவை என்னும் அபிப்பிராயமும் உலக அரங்கில் பிறக்கும்.

இவை எல்லாவற்றிற்கும் முக்கிய தமிழ்த் தேசிய இனத்தின் குறிப்பிடத்தக்க ஆனால் அளவீட்டெல்லைகளற்ற அடையாளங்கள்தான். இன்று தமிழகமென்றும் தமிழீழமென்றும் பிரிந்து கிடக்கும் தமிழர் தேசியம் தனது அடையாளங்களை ஒன்றுபடுத்தி அறிவியல் ரீதியில் உலக அரங்கில் முன்வைக்கும்போதுதான் தமிழனுக்கு ஒரு நாடு தேவையென்னும் உலக அபிப்பிராயம் பரிணமிக்க முடியும்.

தொடருவம்,...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளர் சிவநாயகம் நினைவு வணக்க நிகழ்வு

கடந்த வருடம் நொவெம்பர் மாதம் 29ம் திகதி கொழும்பில் காலமான பத்திரிகையாளர் திரு. சுப்பிரமணியம் சிவநாயகம் அவர்களது நினைவு வணக்க நிகழ்வு ஜனவரி 22ம் திகதி சனிக்கிழமை ரூற்றிங் சிவயோகம் மண்டபத்தில் நடைபெற்றது. சர்வதேச தமிழ் செய்தியாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு அதன் உபதலைவர் திரு. தினேஸ் குமார் தலைமை வகித்தார்.

திரு. சிவநாயகம் அவரகளது நண்பர்கள், குடும்பத்தினர், ஊடகத்துறையைச் சேர்நதவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் அன்னாருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவருடனான தமது அனுபவத்தை பகிரந்து கொண்டனர்.

ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகி திரு. நா. சீவரத்தினம், சர்வதேச தமிழ் செய்தியாளர் சங்கத்தின் தலைவி திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம், புதினம் பத்திரிகையின் ஆசிரியர் திரு. ஈ.கே. இராஜகோபால், தமிழ் தகவல் நடுவத்தைச் சேர்ந்த மருத்துவர். சு. இரத்தினேஸ்வரன், கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. சிறிரஞ்சன், விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் திரு. நடராசா பாலசுப்பிரமணியம், கவுன்சிலர் செல்வி எலைசா மான், நாழிகை சஞ்சிகையின் ஆசிரியர் திரு. மகாலிங்கசிவம், தமிழ் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் திருமதி வினோ கணபதிப்பிள்ளை, ஜீரிவி தொலைக்காட்சியின் திரு. பிரேம் சிவகுரு, திரு. குலசபாநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

செய்தியாளர் சங்கத்தின் பணிப்பாளர் திரு. கோபி இரத்தினத்தின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

வீரவணக்க நிகழ்வுகள்

தியாகச் சுடர்களான முத்துக்குமார், முருகதாசன் உட்பட்ட 19 தியாக சீலர்களினதும் இரண்டாம் ஆண்டுநினைவுவணக்கநிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்றன.

சிங்கள படைகளின் கொடூர தாக்குதலில் தமிழர் தாயகமும், தமிழர்களின் வாழ்விடங்கள், சொத்துக்கள், உள்ளிட்ட அனைத்து வளங்களும் அழிக்கப்பட்டதோடு தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் கொடூரமாக கொல்லப்பட்டுக் கொண்டும் இருந்த வேளையில் அதனை பார்த்து பொறுக்கமுடியாமல் பொங்கி எழுந்த தமிழராய் தம் உடலில் தீயிட்டு சர்வதேசத்திடம் நீதி கேட்ட அற்புத மனிதர்களான அந்த 19 தியாகச் சுடர்களையும் நினைவுகொள்ளும் நினைவுவணக்க நிகழ்வே லண்டனில் நேற்று இடம்பெற்றது.

சிறப்பு நிகழ்வாக நாம் தமிழர் இயக்கத்தின் தனைவரும், திரைப்பட இயக்குனரும், தமிழீழ ஆதரவாளருமான திரு. சீமான் அவர்களின் உரையும், உலகத் தமிழர் இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் ஐயா அவர்களின் உரையும் மண்டபத்தில் ஒலிவடிவில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பாடல்கள், கவிதைகள், நினைவுப் பேருரைகள் நடனங்கள் என்பன இடம்பெற்றன.

ஆர்ப்பாட்ட நிகழ்வுகள்

சிறீலங்காவின் 63வது சுதந்திர தினத்தைப் புறக்கணித்தும், தமிழ் மக்களிற்கு இதுவரை சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தும் வகையிலும் கவனயீர்ப்பு நடவடிக்கைகள் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 4ஆம் நாள் பிரித்தானியாவெங்கும் முன்னெடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"இராவண்ணன்" இசைப்பேழை வெளியீடு



சுஜித்ஜீ, சந்தோஸ் மற்றும் திசாந்தன் ஆகியோரின் கூட்டு முயற்சியால் உருவான 'இராவண்ணன்' இறுவட்டு வெளியீடு அண்மையில் நடைபெற்றது. இந்த இசைத்தட்டின் வெளியீட்டு நிகழ்வில், பல சமூக ஆர்வலர்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், கலந்து சிறப்பித்தனர். இறுதியாக, இசைப்பேழையினை உருவாக்கிய படைப்பாளிகள் நிகழ்விற்கு வருகை தந்திருந்த மக்களோடு தமது அனுபவங்களையும், உணர்வுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

நடக்க இருக்கும் நிகழ்வுகள்

FEB 26 — SATURDAY @ 17:00

நினைவு வணக்க நிகழ்வு

வான்கரும்புலிகள் ரூபன், சிரித்திரன் மற்றும் லெப்.கேணல் பொன்னம்மான், லெப் கேணல் கௌசல்யன் உட்பட இம்மாதத்தில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களை நினைவுகொள்ளும் வணக்க நிகழ்வு

நேரம்: காலை 11:00 மணி

இடம்: Medbourne Community Sports Pavilion
31, Pascal Drive, Medbourne,
Milton Keynes, MK5 6LS

தொடர்புகளுக்கு: 074 0021 9654

FEB 27 — SUNDAY @ 17:00

ஊக்குவிப்புப் பெருவிழா

ஈழத்து இளம் கலைஞர் பாடலாசிரியர் சுஜித்ஜீ அவர்களின் புதிய படைப்பு இராவண்ணன் ஒளித்தகட்டைப் பாராட்டி வாழ்த்தி ஊக்குவிக்கும் விழா.

நேரம்: மாலை 5.00 - 9.00 வரை

இடம்: Thamil House, Unit 2, Fountayne Business Center, Broad Lane Tottenham,
London N15 4AG

தொடர்புகளுக்கு: ஈழவர் திரைக்கலை மன்றம்.
020 8809 3083, 078 3159 4270

MAR 20 — SUNDAY @ 10:00

நாவன்மைப் போட்டிகள் - 2011

இலண்டன் தமிழ் நிலையம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலைக்கிடையேயான நாவன்மைப் போட்டிகள்.

இடம்: Wembley High School, East Lane,
Wembley HA0 3NT,

தொடர்புகளுக்கு: 020 8908 2646 / 020 8904 5939
079 5654 1844

நேரம்: காலை 10.00 மணி

உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?

உங்களுக்கு கிடைக்கும்

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.

நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

020 7243 1417

முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

020 7243 1417

Cheque Line

31, Queens Way, London, W2 4QJ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுங்கிய களைகளில் ஏன் பிழைத்தன கொஞ்சம்?



வ. கணேஸ்
(ஒரு பேப்பருக்காக)

2010ம் ஆண்டு மெல்ல மெல்ல நடந்து மெத்தென வீழ்ந்து விட்டது. இருந்தாலும் முன்னைய ஆண்டுகளைப் போல் 2011ம் ஆண்டும் எங்களுக் கெதிராக ஆண்டவனும், ஆகாயமும், எதிரிகளும், ஏரிகளும், குளங்களும், குட்டைகளுமென தமிழனை நிமிர விடாமல், நினைக்க விடாமல் துரத்திக் கொண்டே நகர்கிறது நடப்பாண்டும்.

எத்தனை துன்பங்கள் வரினும் மீண்டும் எழுவோம், நடத்தி முடிப்போம், நாட்டை மீட்போமென்று வீழ்த்த வீழ்த்த மீண்டும் எழுந்து நின்று அவரவர் பங்குகளை செய்து கொண்டிருக்கிறது எங்கள் சமூகம். இனி எழவே முடியாதென்று சுருண்டு விட்டவர் களுமுண்டு. தலைமை வீழ்ந்ததால் தனக்கினி குஷியென்று எதிரியிடம் மண்டியிட்டவர் களுமுண்டு.

புலம்பெயர் தேசங்களிலிலும் சிலர் தோற்ற சோகத்தை சொல்லி மாளாதென்றும், சிங்கள வனின் காட்டுமிராண்டி தனத்துக்கும், இந்திய னின் இழிவு வேலைகளுக்கும் இனியும் முகம் கொடுக்க முடியாதென்று முடங்கியவர்களை நாம் பார்க்கின்றோம். ஆனாலும் முடியு மென்று ஒரு தலைமை முளைக்கும் போது இவர்கள் மீண்டும் விடுதலை பாதையில் பயணிக்க தவறமாட்டார்கள்.

தாயக மண்ணிலும் முடியாதென்று முடங்கி யவர்கள் ஏராளம். முன்கூட்டியே அரசியல் சிக்கலில் அகப்பட்டு இருப்பவர்கள் சத்தமிட்டு சாவதைவிட இன்றைய சூழலில் தலை கவிழ்ந்து நடப்பதே மேலென்று இருப்பவர்கள் ஏராளம். ஆனாலும் சுய லாபம் பெற தனது இனத்தையே காட்டி கொடுத்து, தனது இனத்தின் தலைகளை கொய்து கும்மாளம் கொட்டும் இந்த ஈனர்களை கடவுளும் மன்னிக் கமாட்டான், சிங்களவனும் ஒரு நாள் இவர் களை காலை வாரிவிடும் போது கண்டிப்பாய் கண்ணீர் வடிக்கத்தான் போகிறார்கள் தமிழர் முன் தலை கவிழ்ந்து.

சிங்களவன் இந்த ஈனப்பிறப்புகளை வைத்து தினசரி தமிழர்களை வேட்டையாடுகிறான். இவர்களை வைத்து இனப்பரம்பலையும் துரிதப்படுத்துகிறான். இவர்களே தமிழ்பெண் களை கடத்தி சிங்களவன் இந்த அப்பாவி பெண் பிஞ்சுகளை கதறக்கதற கற்பழித்து விட்டு கிணற்றிலோ, ஆற்றிலோ வீச மாமா வேலை பார்த்த நிறைவோடு கைகட்டி வேடிக்கை பார்க்கிறான். வீடு புகுந்து தமிழரை சுட்டுக் கொன்று விட்டு அவர்கள் நகைகளை யும் பணங்களையும் திருடி தன் பங்கிற்கு ஐந்தோ பத்தோ எடுத்துக்கொண்டு மீதியை கோட்டாவிடம் கொட்டிக் கொடுக்கின்றார்கள் இந்த ஈனர்கள்.

இந்த நாதாரிகள் ஒரு நிமிடம் சுத்த தமிழ னாக இருந்து சுயமாக சிந்திப்பார்கள்ாக இருந்தால் ஒரு பிடி சோறு தின்ன மனம் வருமா? இந்த ஈனச் சாதிகளின் கறை படிந்த கைகளால். முடியுமா ஒரு சுத்த தமிழனால்? புலி புலி என சொல்லிச் சொல்லியே தனது சொந்த இனத்தையே இழிவுபடுத்தி தன்னினத் தையே இல்லாமலும் செய்கிறார்கள் இந்த வேஷதாரிகள். இந்த நாற்றம் பிடித்த இவர்களது உடலுக்கு வெள்ளை வேட்டியும் சேர்ட்டும் வேறு தரித்திரத் தமிழர்கள் இவர்கள்.

இவர்கள் போதாதென்று போக்கிட மானத்தை கொழும்பிலுள்ள தமிழ் நகை வியா பாரிகள் பணம் திரட்டி கொட்டிக் கொடுத் திருக்கிறார்கள் கோட்டாவின் கைகளில். இலங்கைத் தீவில் சிங்களவனின் பாராளுமன் றத்தில் தேவைக்கு அதிகமாக எத்தனையோ அமைச்சுக்கள் இருக்கின்றது. இவைகளில் சில குறைந்த பட்சமாக போர் முடிந்த பின்னர் தமிழர்களுக்கு சிறு சிறு உதவிகளை யேனும் பேருக்காவது செய்து வருகின்றது. ஆந்த அமைச்சுக்களில் ஒன்றுக்கேனும் இந்த தமிழ் வியாபாரிகள் இந்த பணத்தை கொடுத்திருக்க முடியும். அல்லது நேரடியாக வேனும் கொட்டும் மழையிலும் கூடாரமின்றி தத்தளிக்கும் அந்த மக்களுக்கு பகிர்ந்து கொடுத்திருக்கலாம். இன்னும் எவ்வளவோ செய்திருக்க முடியும். சிங்களவன் பொன் நகைகள் போடுவதும் குறைவு. இவர்களிடம் வேண்டுவதும் குறைவு.

போரில் அறுந்து போன பித்தளை தந்திக் கம்பிகளை இனாமாக சுரட்டிவந்து, அதில் பாதியை பொன்னுக்குள் புடம் போட்டு தமிழரின் தலைகளில் கட்டியடித்து, இலாப த்தை சுரட்டி நமது இனத்தை கருவறுக்கும் அந்த கொலைகாரனிடமல்லாவா கொட்டி கொடுத்திருக்கிறார்கள்.

கோட்டா, ஐயெ இந்த பணத்தை பிடியுங்கோ, இதை வைத்து வடக்கு கிழக் கில் இன்னும் அதிகமாக பத்து இராணுவ முகாமை போட்டு தமிழனை அடிமைப் படுத்து. அப்போதுதான் அங்குள்ள தமிழன் கொழும்புக்கு வருவான். வெளிநாட்டு தமிழன் அவர்களுக்கு பணம் அனுப்புவான். அப்போது தான் அவன் எங்களிடம் நகைகளும் வேண்டு வான் என்று சொல்லியா கொடுத்தீர்கள்.

நிச்சயமா உங்களால் சொல்லியிருக்க முடியாது. ஐயா நாங்கள் பணம் கேட்கம லேயே தருகிறோம். எங்களை கடத்தாதே. கப்பம் கேட்காதே. சுணங்கினால் சுட்டு கொல்லாதேயென்று. முாறாக விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிகக்க தூதரகம் தனது இராஜாங்க அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கடத்தல், கப்பம், கொலை இவைகளினது சூத்திரதாரி கோட்டாதான் என்று. இதை அந்த கொலைகாரப்பாவி மறுத்துரைக்க, இல்லை என்று நியாயப்படுத்த நீங்கள் அவனுக்கு ஒரு மேடை அமைத்து கொடுத்திருக்கிறீர்கள்.

இவர்கள் போதாதென்று யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரி மாணவியரை வைத்து இன வெறியன் ராஜபக்ஷவை ராஜாவாக்கி புகழ் பாட வைத்திருக்கிறார்கள் அதுவும் சிங்கள மொழியில். வருடம் இரண்டைக் கூட தொட வில்லை வன்னிக்குள் வகை தொகையின்றி தமிழரை கொன்று குவித்து. பிணவாடை மாறவில்லை இன்னும் வன்னியில், அதுசரி அந்த பிணவாடை உங்களை நோக்கி வராதே. தென்றல்' இது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வீசுவதால்தானே தென்றல் என்கிறோம். ஆக அந்த பிணவாடை உங்களை வந்து தொட நியாயமில்லைத் தானே. ஆது சிங்களவனை தொட்டு சுகந்தப் படுத்துவதால்தானே தொடர்ந்து சுட்டுக் கொண்டே இருக்கின்றான் தமிழனை. சுட்ட பிணத்துக்கு துகிலுரிந்து நுகர்கின்றான் பிண வாடையை அந்த நாசகார பிணந்தின்னிகள்.

இலண்டனில் இருந்து இலங்கை அரசனை இலண்டன் தமிழர்கள் மண்டியிட வைத்து விரட்டியடித்த கையோடு அவன் தனது துவேசத்தை காட்ட தேசிய கீதத்தை சிங்களத் தில்தான் பாட வேண்டுமென்று உத்தரவு போட்டான். இதற்கு முழுச் சிங்களமும் முழு மனதோடு துதி பாடியது. இருந்தும் இது தகுந்த நேரமில்லை என்று பின்போடப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு சில நரிகள் ஒன்று கூடி இந்துக் கல்லூரி மாணவி யரை வைத்து சிங்களத்தில் துதி பாட வைத்து அவளை தட்டி கொக்கிறார்கள். நீ எம்மின த்தை அடக்க, அடிபணிய வைக்க, நீ எதுவும் செய்யலாம் நல்லூர் கந்தன் (தமிழ் கடவுள்) சாட்சியாக யாமிருக்க பயமேனென்று. அழுகிச் சாகத் துடிக்கும் அறு– பிள்ளைகள் இவர்கள். ஆதனால் தான் மானத் தமிழரின் மானத்தையும் சேர்த்து விக்கிறார்கள்.

2008ம் ஆண்டு போர் உக்கிரமடைந்து 2009ல் சிங்கள இராணுவம் சிறிது வன்னிக்குள் காலடி வைக்கும் போது, கோட்டா யாழ்ப் பாணம் சென்று இராணுவத்தின் முன்னிலை யில் பேசுகிறான்: வீரர்களே நீங்கள் வன்னிக் குள் நுளையும் போது தமிழனின் இரத்தம் கலந்து இந்து சமுத்திரம் சிவப்பாகட்டும். தமிழ் பெண்கள் உங்களின் காம இச்சை க்கு இரையாகட்டும்மென்று. நீங்கள் உண்மைத் தமிழனாக இருந்தால் அந்த கோட்டாவின் வார்த்தைகளே போதும் உங்கள் உயிர் உள்ளவரை அதாவது நெஞ்சிலி ருக்கும் வரை மானமுள்ள தமிழன் மற க்கமாட்டான் அந்த வார்த்யையை. ஆவன் அன்று இராணுவம் முன்பாக கக்கிய அந்த நச்சு வார்த்தைகளை எள்ளளவும் பிசகின்றி நடாத்தி முடித்து வைத்தது இலங்கையின் சிங்கள வெறி இராணுவம்.

இன்று வடக்கு கிழக்கிலும் குறிப்பாக வன்னிக்குள் எத்தனையோ முடங்கள், எத்தனையோ விதவைகள் மேலும் எத்தனை யோ பேர் சிறைகளில் வாடுகிறார்கள். எஞ்சிய அந்த மக்களும் பலதரப்பட்ட நோய்கள், பீடைகளால் அழுந்துகிறார்கள்.

வன்னியில் இம்முறை கூடுதலான தென்னைகள், பனைகள் வேறும் பலதரப் பட்ட மரங்கள் பூக்கவுமில்லை. காய்க்கவு மில்லை. காரணம் தெரியுமா நன்றி கெட்டு நக்கிப் பிழைக்கும் தமிழா உனக்கு? சிங்களவன் வீசிய அந்த நச்சுக் குண்டுகளின் நாற்றத்தை சுவாசித்த அந்த மரங்களே அப்படி என்றால் அந்த மனிதர்கள் எவ்வளவு துன்பப்படுவார்கள். அவர்களுக்கு பிறக்கும் அந்த குழந்தைகள் என்ன பாடு படப்போகிற ார்கள். விலை போன தமிழா விரைந்து நீ சிந்தித்துப் பாரடா.

தமிழனை வடக்கு கிழக்கில் இருந்து படிப் படியாக அகற்றி இலங்கைத்தீவை முழு சிங்கள நாடாக்கும் அவனது தொலை தூர திட்டத்தை உணர்ந்து, அவனது காலை நக்கித்தான் கஞ்சி குடிக்க வேண்டுமென்று நினைக்கும் ஈனப் பிறவிகளே, தமிழனை காட்டிக் கொடுத்து சிங்களவனுக்கு மாமா வேலை பார்த்து உன்னினத்தையே நீயழித்த பாவம் உனக்கு வேண்டாம். பெருமானம் போனாலும் கூட நீ சிறு மானத்தோடாவது செத்துப் போ தமிழனை முற்றாக விற்று விட்டு போகு முன். மானமுள்ள தமிழன் ஐந்து மிஞ்சினாலும் அறுவடை நடக்கும் ஒரு நாள். அன்று தப்பாது களைகள்.

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing, Serving all the Sri Lankan Communities
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
Packers • Movers • Shippers
We Offer the Best Services than all the Other in the trade!
Special rates for Containers and Machinery
4 Collection Points: Harrow, Warford, Knightsbridege, Croydon
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes from £9.00
Call 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
Warehouse,652,VictoriaRoad Ruslip,HA40LN
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com

பசித்திடும்போதே புசித்திட நாடுங்கள்.
SPICELAND
FOR THE ASIAN TASTE OF SPICE CURRY
Tamil food Restuarant and Takeaway
Fully Licenced & Air Conditioned
எல்லாளன் Super market (Croydon)
Openning Soon
212 London Road, Croydon, Surrey CRO 2TE
020 8667 1700 / 07984 038 757
020 8667 1700 / 020 8649 8895 / 07984 038 757
e-mail : spicelandcroydon@hotmail.com • web : spicelanduk.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யார் இந்த திருடர்கள்

மஞ்சள் கயிற்றினில் மஞ்சள் துண்டு பிணைக்கப்பட்டு, மணமக்களை சேர்த்து வைத்த தாலிக்கயிறு, தங்கப் பவுண்கள் கோர்க்கப்பட்டு படிப்படியாக அந்தஸ்த்தை காட்டும் அலங்கார பொருளாக மாறிவருவது பெருமைப்பட வேண்டிய ஒரு முன்னெற்றமல்ல. மணமான பெண்கள் அணிந்திருக்கும் தாலிக்கொடியின் கனம் அதிகரிக்க அதிகரிக்க இதை அணிந்திருக்கும் பெண்களின் கழுத்துக்கும் கனமான ஆபத்துக்கள் வருவதை அடிக்கடி கிடைக்கும் நம்பகமான செயதிகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

தாலிக்கொடிகளை களவாடும் திருடர் கூட்டம், புலம்பெயர் தமிழர் கூடுதலாக வசிக்கும் இடங்களிலேயே தங்கள் கைவரிசைகளை காட்டியுள்ளனர். குறிப்பாக, சைவ கோவில்களையண்மித்த சனநடமாட்டம் குறைவான பகுதிகளிலேயே, இக்களவாணிகளின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக அரங்கேறியுள்ளது. திட்டம் போட்டு திருடும் இக்கூட்டத்திற்கு அனுசரணையாக தமிழ் பேசும் கூட்டத்தினரும் உடந்தையாக இருந்துள்ளதை சமீபத்தில் நடந்த சம்பவம் சந்தேகிக்க வைத்துள்ளது.

இளம் பெண்ணொருவர் அணிந்திருந்த தாலிக்கொடியை கழற்றித்தரும்படி கத்திமுனையில் ஒரு கறுப்பன் பயமுறுத்தியுள்ளான். இந்தப் பெண்ணுக்கோ ஆங்கிலத்தில் பேசும் திறமை இல்லாத காரணத்தினால், தனக்கு ஆங்கிலம் பேச தெரியாது என மன்றாடியுள்ளார். இதைக் கேட்ட அந்த கறுப்பன் தனது செல்பேசியில் வேறு ஒருவருடன் தொடர்பு கொண்டு மறுமுனையில் இவளை பேசும்படி செல்பேசியைக் கொடுத்துள்ளான். மறுமுனையில் இருந்து பேசிய தமிழ்க்குரல், அந்த கறுப்பன் கேட்பதை கொடுக்கும் படியும் இல்லாவிட்டால் உயிருக்கு ஆபத்தென்றும் எச்சரித்துள்ளான். உயிருக்கு பயந்த அந்தப்பெண் உதவுவதற்கு எவரும் இல்லாத காரணத்தினால், 21 பவுண்கள் மதிப்புள்ள தனது கணவன் கட்டிய தாலிக்கொடியை, அழுது அழுது கழட்டிக் கொடுத்ததாக உண்மைச் செய்திகள் கூறுகின்றன. கள்ளன்தான் கறுப்பன் என்றால் தமிழில் பேசியவர் யார்?

அதிகரிக்கும் களவுகளால், ஆபத்தை எதிர்நோக்கும் தமிழ் பெண்கள், அளவுக்கதிகமான கனமுள்ள நகைகளை அணிந்து செல்வதை, பாதுகாப்புக் கருதி தவிர்ப்பது திருடர்களின் அட்டகாசத்தை குறைப்பதோடு, இவர்களுக்கு பின்னால் இயங்கும் கூட்டத்தையும் காட்டி கொடுப்பதற்கு வழி கோலுமல்லவா? வந்த இடத்திலுமா இந்த வக்கிரச் செயல்கள்? திருடர்கள் ஜாக்கிரதை!

முடி உதிர்தலை முறியடிக்க புத்துயிர் தரும் உயிரணுக்கள்.

முப்பது வயதே நிரம்பவில்லை, தலையில் முடியில்லை, இந்தக்காலத்து இளைஞர்களை வாட்டும் ஈவிரக்கமற்ற இயற்கையின் கொடூரம். எந்த தைலத்தை நம்பி பூசினாலும், மொட்டை மொட்டைதான். இதற்கு ஒரே ஒரு குறுக்குவழி, இந்த காலத்து நாகரீகத்துக்கு எந்த விதத்தில், முடி உதிர்தலை மறைக்க மொட்டை வழித்தல் தான். எப்படியோ காலத்துக்கேற்ற கோலத்தில் மொட்டைத்தலை மறைக்கப்பட்டாலும், இதன் அடிப்படை காரணமென்ன என்ற ஆராய்ச்சி தொடர்ந்த வண்ணமிருப்பது சமீபத்தில் கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் கூறுகின்றன.

பேன்சில்வேனியா மருத்துவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த George Cotsarelis என்பவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனாக, தலைமுடி உதிரும் பகுதியில் அமுங்கிப்போயிருக்கும் Stem Cells வளர்ச்சி குன்றிய காரணத்தினாலேயே, அப்பகுதி வழுக்கை பிரதேசமாக மாறி வருவதை ஆய்வுக்குட்படுத்திய ஆட்கள் மூலம் அறிந்து கொண்டார்கள். உதிர்ந்த தலைமுடியை மீண்டும் தளிர்க்க வைக்க இரண்டே இரண்டு வழிகள் இருப்பதாக இவர்களின் ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன. முடங்கி கிடக்கும் உயிரணுக்களை (Stem Cells) பிரித்தெடுத்து அவற்றை பல மடங்காக பெருக்கி, மீணடும் வழுக்கை விழுந்த இடத்தில் சேர்ப்பது ஒருவகை. அல்லது வளர்ச்சியடையாமல் கிடக்கும் உயிரணுக்களை, தகுந்த இரசாயன மருந்தை செலுத்தி, புத்துயிர் அளிப்பதுதான் இரண்டாவது வகையென தீர்மானித்துள்ளனர்.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

எது எப்படியோ, வழுக்கை தலைகளில் மீண்டும் முடி வளர்ந்தால், எத்தனை இளைஞர்கள் கரை சேர்வார்கள் என்பது பாதிக்கப்பட்டவர்களால்தான் உணர முடியும். நம்பிக்கை தான் வாழ்க்கை!.

முதியவர்களைப் போல நடக்கும் றோபோ.



மனித மூளையில் மலர்ந்த அபூர்வ கண்டுபிடிப்புகளில் றோபோ ஒரு அதிசய வார்ப்பு. றோபோவை வைத்து சாதனைகள் செய்யும் விஞ்ஞான உலகில் மனிதர்களைப்போல நடமாடும் இதுவரை ஓட்டம் காண்பித்தது, குத்துக்கரணம் போட்டது, நடனம் கூட ஆடியது. எனினும் வயதில் ஆடிப்போனவர்களை போல நடமாடியது கிடையாதே!

இதைப்பற்றி சிந்தித்தார்கள் ஜப்பானிலுள்ள சில விஞ்ஞானிகள். சிந்தனை செயலாக மாறி, வயதில் முதிர்ந்த வயோதிகர்கள் எப்படி எப்படியெல்லாம் தமது அன்றாட கருமங்களை நிறைவேற்ற அங்குமிங்கும் சாய்ந்து, தள்ளாடி பிடிக்க வேண்டிய இடங்களில் பிடித்து, தமது கடமைகளை முடித்தார்களோ, அதே பாணியில் ஒரு நவீன றோபோவை உருவாக்கியுள்ளார்கள். கண்டுபிடித்தவர்கள் வேறு யாருமல்ல Tsukuba நகரில் மையம் கொண்டுள்ள National Institute Of Advanced Industrial Science And Technology நிலையத்தாரின் சிரேஷ்ட விஞ்ஞானி Sebastian Lengagne. இவர்கள் கண்டுபிடித்த றோபோ முதியவர்களைப்போல நடந்து நடந்து தமக்கு தேவைப்படும்போது சுவர்களில் சாய்ந்து மேசைக்கு முன்னால் போடப்பட்டிருக்கும் கதிரையில் அமர, கைகளை மேசையில் ஊன்றி அச்சொட்டாக ஒரு மனிதரைப்போல அசைவுகளைக்காட்டியது. பிரமிக்கத்தக்க இந்த றோபோவை இயக்குவதற்கு, தூரத்தில் வைக்கப்பட்டுள்ள கணணிகள் மூலம்தான் தற்சமயம் செயலாற்ற முடிகிறது. இவர்களின் ஆராய்ச்சி மேலும் முன்னேறும்போது, றோபோவின் உள்ளேயிருந்து இயங்க கூடிய வகையில், கணணியின் கட்டுப்பாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமென விஞ்ஞானிகள். நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

Lengagne அவர்களின் புதிய றோபோவுக்கு HRP-z என்று அடையாளமிட்டு, தமது விஞ்ஞான அறிக்கையை Tennesse நகரில் கூடும் மாநாட்டில் சமர்ப்பித்துள்ளனர்.

அதிசயத்தக்க இந்த றோபோ அன்றாட வாழ்க்கைக்கு எவ்வாறு உதவப்போகின்றது என்று தெரியாது போனாலும், விஞ்ஞானிகளின் நுட்பமான மூளைக்கு ஒரு சிறந்த வெகுமதியல்லவா?

மனிதரைப் போல தனது உடலை இயற்கையாக இயங்க வைக்கும் றோபோ என்றென்றும் வாழ்க! விஞ்ஞான உலகத்தை விழிப்புடன் நடமாடச்செய்யும், விஞ்ஞானிகள் நீடூழி வாழ்க!

noolaham.org | aavanaham.org

நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

020 7183 0367

புதிய சட்டிலைட்
இணைப்புகளுக்கும் அழையுங்கள்

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி தேர்தல்

தேர்தல் என்றால் அது அரசியல் கட்சிகளின் களம் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கும் காலம் இது. பாராளுமன்ற தேர்தல் மட்டுமே அரசியல் கட்சிகளின் கலம் என்ற நிலைப்பாடு 1970 வரை இருந்தது. கிராமசபை, நகரசபை, மாநகரசபைக்கான தேர்தல்கள் அதற்கு முன்னர் அரசியல் கட்சிகளின் செல்வாக்கை அல்லது தலையீட்டை பெற்றிருக்கவில்லை. கட்சி சின்னங்களில் கட்சிகள் போட்டியிடும் நிலையும் இருக்கவில்லை. 1948இல் சுதந்திரம் பெற்ற இலங்கையில் நடந்த தேர்தல்களில் சிறீலங்கா சுதந்திர கட்சிக்கு 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அரசாங்கம் அமைந்தது. அரசியல் அமைப்பு மாற்றத்தினூடாக இலங்கையை குடியரசாக மாற்றியது. அதுமட்டுமல்லாது பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி சங்கங்கள், கமத்தொழில் திணைக்களங்கள் என இயக்குனர் சபைக்கான உறுப்பினர்களையும், தேர்தல் முறையை நீக்கி தானே நியமனம் செய்தது. தன்னுடைய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடாகவும், தொகுதி அமைப்பாளர்களுடாகவும் இந்த இயக்குனர் சபைகளை நியமித்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை காலவரையின்றி ஒத்தி வைத்தது.

காங்கேசன்துறை தொகுதிக்கான இடைத் தேர்தல் உட்பட தனக்கு பாதகமான பாராளுமன்ற தேர்தல்களையும் அது ஒத்தி வைத்தது. உள்ளூராட்சிசபைக்கான தேர்தல்கள் அரசியல் ஊற்றெடுக்க சிறீமா தலமையிலான அரசாங்கமே அன்று அத்திவாரமிட்டது எனலாம். பின்னர் ஆட்சி அமைத்த ஐக்கியதேசிய கட்சி அரசாங்கம் கிராமசபை, பட்டணசபை என்ற அமைப்புகளில் மாற்றத்தை கொண்டு வந்தன. இவைகள் பிரதேச சபைகள் ஆக்கப்பட்டன. ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் ஒரு பிரதேச சபை அமைந்தது. நகரசபை, மாநகர சபை என்பன தொடர்ந்து இயங்கின. ஆயினும் இந்த மூன்று துறைகளுக்கான முழுமையான செயற்பாட்டிலும் அரசியல் முறைமை முளை விட ஆரம்பித்தது எனலாம்.

அந்த நாட்களில் கிராம, பட்டண, நகர, மாநகர சபை தேர்தல்களுக்காக நடைபெற்ற தேர்தல்கள் கலகலப்பானவை. ஊள்ளூர் பெரியவர்களின் செல்வாக்கே இத்தேர்தல்களில் மேலோங்கி இருந்தது. பணபலம், அந்தஸ்து, வேறிடத்து உள்ளூர் பெரியவர்களின் துணை பலம் இவற்றின் மூலமே வேட்பாளர்கள் வெற்றி பெற முடிந்தது. உறவுகளின் பிரிவு, அடிதடி, ஆட்கடத்தல், சாராய பரிமாற்றம் என பலதும் பத்தும் ஆட்சியை பிடிக்கும் இந்த அதிகார போட்டியில் ஊர்தோறும் ஆதிக்கம் செலுத்தின.

ஒவ்வொரு சபைகளும் குறிப்பிட்ட தொகை வட்டாரங்களை கொண்டிருக்கும். வட்டாரத்துக்கு தெரிவாகும் அங்கத்தவர்கள் சபைத் தலைவரை தெரிவு செய்வார்கள். வட்டார தேர்தல்கள் முடிந்த கையோடு, வட்டார அங்கத்தவர்களை விலை பேசி, அவர்களை தம் அணிக்கு இழுத்து, கிராமசபை தேர்தலில் போட்டியிடும் நடைமுறை ஆரம்பமாகிவிடும். அடுத்த வேட்பாளர் அவரை அணுகமுடியாதவரை அவரை கடத்தி தம்மோடு வைத்திருந்து தேர்தலில் அன்று மட்டுமே வெளிப்படுத்தும் நிலைப்பாடுகளும் அப்போது இருந்தது. இவைகளே ஆள்கடத்தல் என பெயர் பெற்றது.

வட்டார தேர்தலின் வெற்றிக்கும் உறவினர், நண்பர் என அணிகட்டி பிரிந்திருந்து வேலை செய்வார்கள். நடுநிலையில் உள்ள சமானியர்களின் வாக்குகளை கவர சாராயம், சாரம், வேட்டி, சேலை என அன்பளிப்புகளும் தேர்தலுக்கு முந்திய இரு நாட்களும் இராப்பகலாக போட்டி போட்டுக்கொண்டு நடைபெறும்.

தெல்லிப்பளை கிராமசேவைக்கு நீண்ட காலம் தம்பு செல்வரத்தினம் என்பவர் தலைவராக இருந்தார். பணிமனைக்கு பக்கத்தைய வீடு. கொல்லங்கலட்டியின் ஒரு தேர்தலில் தன் மாமன் முறையான சிவராசாவையே முக்கிய போட்டியாளராக இவர் எதிர் கொள்ள நேர்ந்தது. பன்னாலை வட்டாரத்தை நீண்டகாலம் பிரநிதித்துவப்படுத்திய வன்னியசிங்கத்தை தோற்கடித்தவர் கண்மணி கிளாக்கர். மாற்றத்தை விரும்பிய இளைஞர் அணி இவருடைய வெற்றிக்கு பின்பலமாக அமைந்திருந்தது.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

மயிலிட்டி கிராமசபைக்கு தலைவராக தொடர்ந்து அரசாட்சிய ஆசிரியர் சிறீ பாஸ்கரன் அவர்களும், இளைஞர் அணி ஒன்றின் ஆற்றலின் முன் தூற்று நின்றார். பின்னாளில் உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளராக இருந்த இளைஞர் கிஷ்ணசாமி இவரை தோற்கடித்து தலைமையை அலங்கரித்ததும் ஒரு காலம்.

ஆசிரியராக பூனகரியில் இருந்து அரசியலில் தன் கண்ணை பதித்தவர் கிளிநொச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான ஆனந்த சங்கரி அவர்கள். கிராமசேவை தேர்தலில் பங்கு பெற்ற பல வட்டாரங்களின் பொதுசனங்களிடையும், ஊர் ஊராக சென்று அனுமதி கேட்டும், அன்றைய நாட்களில் அவருக்கு ஊரவர்கள் ஆதரவு கொடுக்கவில்லை.

இந்நிலையில் ஆனையிறவை அடுத்துள்ள தட்டுவம்பட்டி என்ற தாழ்ததப்பட்ட மக்களின் வட்டாரத்தில் போட்டிக்கு நின்றார். அவர்களுடைய ஆதரவையும் பெற்றார். வெற்றி பெற்றார். கரைச்சி கிராமசபைக்கு மும்முனை போட்டி வந்த போது வலம் குறைந்த அணியின் துணையுடன்தான் தலைவரானார். பட்டணசபையாக அது பிரிந்த போதும் தலைமை பதவியை கைப்பற்றும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. பின்னர் பொது தேர்தலில் நான்கு தடவைகள் போட்டியிட்டு, 1970இல் அவரால் வெற்றி பெற முடிந்தது.

யாழ்ப்பாண மாநகர மேஜராக அல்பேர்ட் துரையப்பா, அளவெட்டி மல்லாகம் கிராம சபையின் ஆட்சி செலுத்திய வ.பொன்னம்பலம் போன்ற தென்னிலங்கை கட்சிகளின் ஆதரவாளர்களையும் உள்ளூராட்சி தேர்தல்கள் அன்றய நாட்களில் ஆதரித்து ஏற்றுக்கொண்டன. அங்கீகரித்தன.

உறவினர், நண்பர் என அணி கட்டி பிரிந்திருந்து வேலை செய்வார்கள். நடுநிலையில் உள்ள சமானியர்களின் வாக்குகளை கவர சாராயம், சாரம், வேட்டி, சேலை என அன்பளிப்புகளும் தேர்தலுக்கு முந்திய இரு நாட்களும் இராப்பகலாக போட்டி போட்டுக்கொண்டு நடைபெறும்.

நீண்ட இடைவெளியின் பின் வடக்கு கிழக்கு மீண்டும் உள்ளூராட்சி சபைகளை தேர்தலை மீண்டும் எதிர்நோக்குகின்றன. மீண்டும் தெற்கின் ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற அல்லது ஆளும்கட்சியினுடைய அணிகள் போட்டிக்கு நிற்கின்றன. பலவேறுகட்ட பாதிப்புகளின் மத்தியிலுள்ள சிறிமான் பொதுஜனம் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமர் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? கூட வந்த குரங்கு ஆண்டாலென்ன? என்ற மணநிலைக்கு மக்கள் வந்து விட்டார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிப்பேழை வெளியீட்டுவிழா

கடந்த 06-02-11 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணியளவில் குறைடனில் உள்ள லாங் பிராங் பாடசாலை மண்டபத்தில் ஓ.. வண்டிக்கார புகழ் மாணிக்கம் சத்தியமூர்த்தி அவர்களால் பாடப்பட்ட மாணிக்கராகம் மற்றும் திரு சத்தியமூர்த்தி அவர்களின் தந்தையார் அமரர் மாணிக்கம் அவர்கள் அளவெட்டி அளகொல்லை விநாயகர் குறித்து எழுதி, இசைமேதை அமரர் குற்றாலம் நாகராஜன் அவர்களால் இசையமைக்கப்ட்ட திருப்பள்ளிஎழுச்சிப்பாடல்கள் என்ற இரு இறுவெட்டுக்களின் வெளியீட்டு விழா மண்டபம் நிறைந்த மக்களிடையேமிகவும் விமரிசையாக நடைபெற்றது. இவ் இரு இசைத் தட்டுக்களின் மதிப்புரையினை ஈழத்தின் பெருமைக்குரிய பெருங்கலைப் படைப்பாளிகள் மேடையில் திரு சத்தியமூர்த்தியின் பாடல்களுக்கு இடை இடையே வழங்கினர்.

இவ் இரு இசைத் தட்டுக்களின் இசைக் கோர்வையையும் மற்றும் தொழில்நுட்பம் அட்டை வடிவமைப்பு இசைக்கலைஞர்கள் ஒருங்கிணைப்புப் போன்ற இன்னோரன்ன பிற விடயங்களை திரு ஆறுமுகம் இரவீந்திரன் அவர்கள் நெறிப்படுத்தி இவ் இரு இறுவெட்டுக்களும் சிறப்பாக வெளிவருவதற்கு உறுதுணையாக நின்று உழைத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தேர்தல் வந்தால் சொல்லியனுப்பு...

எல்லாரும் நல்லா பாத்துக்குங்க... ஏ ஐயாமாரே, அண்ணன்மாரே... தங்கச்சிமாரே அக்காமாரே... சிரிப்பு போலீசுகாரவுகளே... உடன்பிறப்புக்க்களே... நான் அரெஸ்ட் ஆவுறேன்... என்னய கைது செய்யிறாக... ஐ... நான் ஜெய்லுக்கு போறேன்... நான் ஜெய்லுக்கு போறேனுங்கோ....இப்போ நானும் ஒரு அரசியல்வாதி... ஆமாம்... நானும் இப்போ அரசியல்வாதி ஆய்ட்டேனுங்கோ...

ங்கொயால.. ஒண்ணுமே விளங்கமாட்டேங்குது. மீனவர்களை சிங்கள ராணுவம் கைது செய்ததால ஆர்ப்பாட்டம் நடத்தி கனிமொழி கைதாம். எதுக்கு ஆர்பாட்டம் யாரை எதிர்த்து என்று ஒன்றும் புரியல. ஒரு வேளை காங்கிரஸுக்கு செக் வைக்கவா? சிங்கள ராணுவ நடவடிக்கை என்றால், நாகேஸ்வர ராவ் பூங்காவில் என்ன வேலை?.

நீ நடத்துறா மாதிரி நடத்து, நான் கைது பண்றா மாதிரி பண்றேன், நானும் சிறைக்கு சென்று விட்டேன் என்று அலப்பவா?

ஒரு வேளை கையாலாகாத தலைவருக்கு எதிராகவோ? அட போங்கப்பா...ம்மா ரொம்ப தான் குழப்புறீங்க.

ஒட்டு காசுக்குதான் சொல்லிப்புட்டோம்.

- கும்மாச்சி

2011ம் ஆண்டின் சிறந்த நடிகைக்கான விருது கனிமொழிக்கு வழங்கப்படுகிறது.

இளய தலைவலியின் தொண்டர்களுக்கு அறிவுரை உங்கள் தலைவர் உங்கள் பேட்டைக்கு வரும்பொழுது சுவரொட்டி, தட்டி வைப்பதற்கு இலவசமாக வாசகங்கள் தரப்படும்.

சொல்லி "கில்லி"யில்
ஜல்லியடித்த பல்லியே வருக.
"அழுகிய தலைவலி மகனே"
வருக.
குப்புறப் பறந்த "குருவி"யே
வருக.
பல்லுதெரித்த "வில்(லு)லே
வருக.
கோமகன் சந்திரசேகர்
பெற்றெடுத்த "போக்கிரி"யே
வருக.
டக்கடிக்கும் டகல்பாஜி
"சச்சி(ன்)னே வருக.
வெத்து வேட்டு
"வேட்டைக்கார(ன்)னே வருக.
ஐம்பது படம் நடித்தும்
நடிக்காத இளைய
தலைவலியே வருக.
சைலென்ஸ் புகழ் சாக்ரட்டீசே
வருக.
குத்துப் பாட்டுத் தலைவா
வருக.
தென்னகத்தின் ஒபாமாவே
வருக.
தெலுங்கு ரீமேக் தென்னக
சிரஞ்சீவியே வருக
வாயைத் திறக்காமல் வசனம்
பேசும் வலிப்பு வாயனே
வருக.
தமிழகத்தின் அடுத்த
அறுநூறாவது சூப்பர் ஸ்டாரே
வருக.
கோஷ்டிபூசலில் குத்தாட்டம்
ஆடும், குணமானே வருக.
தென்னகத்தின் நேருவே
வருக
தென்னகத்தின் ராஜீவே வருக
தென்னகத்தின் பிரியங்காவே
வருக.
விஜயகாந்தியே வருக.

- கும்மாச்சி

அடிமைத் திராவிடம் அழிந்தா போய் விடும்...

சீமானே எழுந்து வா
சிறை மீண்ட
சீமானெ நிமிர்ந்து வா
சதா உன் நாவினில்
அண்ணன் அண்ணனென்று
உதிர உன் வார்த்தைகள்
ஈழத்து தமிழரின்
இதயம் விரிகிறது
மார்பு புடைகின்றது
சொன்னாயொரு வார்த்தை
தாயக மண்தான்
ஈழத்தை ஈழமென்றாய்
எத்தனை சுத்தமது
மெய்ப்பிப்பாயா ஒரு நாள்
மெழுகாய் உருகுமுன்
உன் ஈழ உறவுகள்
ஈழம் அழுகிறது
தினம் தினமது
கண்ணீரில் நீந்துகிறது
ஆனாலும் ஆரியம்
போர்வை போர்த்தி மறைக்ளின்றது
தமிழனும் ஆண்டவன்தான்
ஆனாலும் அரசர்கள்
கலைஞர்கள் ஆயிற்றே
அதனாலோ மகுடங்கள்
தலையுடன் கழண்டது
ஆட்காட்டி விரல் நீட்டி
ஆட்டி வைக்க எம்மினத்தை
தோற்றுவிட்ட சரித்திரமாய்
தூற்றிவிட்டார் ஆரியர்கள்
அண்ணனுக்கு தம்பி நீ
எங்களுக்கு அண்ணனாய்
வீறு கொண்டு புரட்சி செய்
விடிவை நோக்கி பயணம் செய்
எண்கோடி தமிழரையும்
எட்டிப்போய் பார்க்க வை
கையறு நிலையில்
கை கட்டி வாழும்
உன் ஈழத்து சோதரரை
அறிந்தாயா சீமானே
வடக்கின் வைத்தியர்கள்
வந்திறங்கி ஈழத்தில்
சிறுகீறு காயமேனும்
கழட்டி விட்டார்
உன் சொந்தங்களின் அங்கங்களை
அடங்கியும் முடங்கனாய்
அடிமையாய் வாழென்று
ஆரியம் ஒன்று கூடி
அழித்து விட்டார் ஈழத்தை
ஆனாலும் திராவிடம்
அடிமைதான் சுகமென்று
அடமெல்லோ பிடிக்குது.

வ. கணேஷ்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero.
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from concept to design

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்முகிறேன் நான்

துக்கமும் களைப்புமாக புரண்டோடுகிற நதியில் நானும் ஒரு சுள்ளித்தடியாக அலைபடுகிறேன் எத்துப் படுகிறேன். பற்றிப்பிடிக்க ஒரு கொழுகொம்பின்றி சுழட்டி எறிபடுகிறேன். இடையிடை சிறு துணுக்காக ஒரு வெளிச்சப்பொட்டு பிறகு அந்தகார இருள். அது நெடுநேரம் கல்லிலும் மலையிலும் காட்டிலும் மேட்டிலும் மோதுண்டு முகம் சிதைந்து பின்தள்ளுகையில் எனக்கென்று ஒன்றுமில்லா வெற்றுப் பிரபஞ்சத்தில் தனியனாய் ஏங்கித் தவிப்புறுகிறேன்.

வாழைவாடுகிறதே என்று வாய்கால் வெட்டி நீர் வார்த்தோம் ஆடு அழுகிறதே என்று அள்ளிக் குழை போட்டோம், நாய்க்கு கல்லெறிந்து கதறியழப் பார்த்ததில்லை. எமக்கு ஏன் இந்த விதமாய் நிகழ்கிறது. மெல்லிதயம் கொண்டிருந்தோம் என்பதனாலா ?

என்னைத் தனித்து இதனை நான் உரைக்கவில்லை. என் தமிழச்சமூகத்தைச் சொல்கிறேன். போருக்குக் தின்னக் கொடுத்த வாழ்வு நமது. சிங்களம், இந்தியா, ஆரியம் என்று அவனவன் ஏறி மிதிக்கச் சிதைபட்ட தேசம் நமது. எவன் எவனோ எம்மை எட்டி உதைத்தனர். கண்டவன் நிண்டவன் எல்லாம் எம்மீது கைவைத்தனர். இப்படி அரசியல் அநாதைகளாகப் போக எது காரணம். அல்லது யார் காரணம்.

2009 மே மாத முள்ளிவாய்க்கால் துக்க சாகரத்தின் பின் எங்களை எவன் எவனோ எல்லாம் அழிக்க ஆயுதம் கொடுத்தவன் எல்லாம் இப்பொழுது அன்பு சொரிய அணைப்பது போல் நடிக்கிறான். எங்களை ஏறெடுத்தும் பார்க்காத சிலர் இப்போது ஈழத்தமிழரை மீட்க வந்த ரட்சகர் போல் நடிக்கின்றனர், நாடகமாடுகின்றனர். அப்பா அம்மா இல்லாத வீட்டில் அனாதைக் குழந்தைகளாய் ஆனோம் யாரும் வந்து காதைத் திருகுவர் மூக்கை நிமிண்டுவர் கன்னத்தைக் கிள்ளுவர், சமயங்களில் கழுத்தையும் நெரிப்பர். ஏனென்று கேட்க எங்களுக்கு யார் இருக்கின்றனர்.

இந்நிலையில் என்னிலிருந்து கோபம் பீறிடுகின்றது. அத்திரம் மேவுகின்றது, வேதனையும் வெப்பியாரமும் துக்கமும் துவளலும் என்னைத் தின்கின்றன. யாரைக் கோபிப்பேன், யாருக்கெடுத்து உரைப்பேன், யாரோடு நோவேன்.

அந்தக் காலங்களை நினைத்துப் பார்க்கிறேன் இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு முடிந்துபோன கதை இங்கு எதற்கு என்று யாரும் கேட்டால் என்னிடம் இருக்கிறது பதில் மறக்கமுடியாத கதை, மறக்கக்கூடாத கதை, மீள நினைவு கூர்ந்து பாடம் கற்றுக்கொள்ளவேண்டிய கதை.

1975ம் ஆண்டை அண்டி 1977ம் ஆண்டு வரை நீண்ட கதை அண்ணன் அமிர்தலிங்கம் என்றும் சொன்னோம். தளபதி என்றும் வீரம் கொப்பளிக்க சிலிர்த்து நின்றோம். வேட்டி கட்டி வெள்ளை சேட் அணிந்த ஒருவர் எவ்வாறு போர்ப் படையின் தளபதியாக இருக்கலாம் என்று நாம் யோசிக்கவில்லை. அவரது வீராவேசப் பேச்சுக்களே அவர் தளபதி என்று உரத்துச் சொல்லின. 'துணிந்தவனுக்கு தூக்குமெடை பஞ்சுமெத்தை வீரனுக்கு துப்பாக்கிக் குண்டு விளையாட்டுப் பந்து' என்று மேடை அதிர முழங்கினார். கைகீறி நெஞ்சார இரத்தத்திலகமிட்டேன் நான்.

எனக்கு மிக நன்றாக ஞாபகம் இருக்கின்ற ஓர் இரவு. எங்களுர் அம்மாள் கோவில் மடத்தில் மாதம் தோறும் கருத்தரங்கு நடைபெற்றது. தமிழீழத்தை எப்படி அடையலாம் என்பது மாதிரியான கருத்தரங்கு. தளபதி அமிர்தலிங்கம், உடுவில் தர்மலிங்கம், மு.திருநாவுக்கரசு என்போர் ஒவ்வோர் முறையும் வருவர். தளபதியின் கணீரென்ற பேச்சும், உடுவில் தர்மரின் வியாக்கியானமும், மு.திருநாவுக்கரசுவின் நகைச்சுவைப் பேச்சும் எம்மைக் கட்டிப்போடும். இரவும் பகலும் எந்நேரமும் எனக்கு தமிழீழம் பற்றிய கனவு.

ஒருமுறை அக்கருத்தரங்கில் ஒரு புதினம் நிகழ்ந்தது. அதுவரைக்கும் முதலாவது துரோகி என்று யாரைச் சொல்லிக் கொண்டிருந்தோமோ அவர் மேடையில் வீற்றிருக்கிறார். துரோகி என்பதனால் அதிகம் கல்லெறி வாங்கிய வீட்டின் உரிமையாளர் அவர் இப்பொழுது சாந்தமாக புன்னகை தவழ்ந்த முகத்துடன் அமர்ந்திருப்பது யாவருக்கும் ஆச்சரியம் அல்ல அதிர்ச்சி.

1972 மே 22 குடியரசு நாட்டுக்கான அரசியல் யாப்பை நிராகரித்து தந்தை செல்வா தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். அதற்கான இடைத்தேர்தல் எங்கள் காங்கேசன் துறைத் தொகுதியில் நடந்தது. போட்டியில்லாமல் தந்தை செல்லாவைத் தெரிவு செய்ய வேண்டுமென எல்லோரும் ஆவல்ப்பட்டர்கள். ஆனால் ஒரேயொருவர் தந்தை செல்வாவை எதிர்த்து தேர்தலில் நின்றார். அவர் கம்யூனிச கட்சியின் தோழர் வ.பொன்னம்பலம். அவரே இப்பொழுது தளபதி அமிர்தலிங்கத்துக்கு அருகில் அமர்ந்திருக்கிறார்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

இறைகுமாரன், உமைகுமாரன் என்ற அளவெட்டி இளைஞர்கள் எல்லோரும் குழம்பினார்கள் தளபதி அமிர்தலிங்கம் எழுந்து ஓர் உரையாற்றினார். அது இப்பொழுதும் அடித்தாற்டபோல் ஒலிக்கிறது. ' எதிரிகள் எப்போதும் எதிரிகளல்லர், துரோகம் செய்திருந்தால் அவர்கள் திருந்திவர சந்தர்ப்பம்வழங்கப்படவேண்டும்...'

இப்படி வழிதெளிவாகச் சென்ற உரையில் ஓரிடத்தில் தளபதி சொன்னார் 'தமிழீழம் என்பது உயர்ந்த இலட்சியம் அந்த இலட்சியத்தை அடைய நாம் எதிரிகளைக் குறைக்க வேண்டும் நண்பர்களை அதிகரிக்க வேண்டும்...'

அப்பொழுது எனக்குப் புரிந்தது ஓர் உன்னதத் தலைவர் எங்களுக்குக் கிடைத்திருக்கிறார் அவர் நிச்சயம் தமிழீழம் பெற்றுத் தருவார். அதற்கு ஆணையிட்டு 1977 பொதுத் தேர்தலில் தளபதி அமிர்தலிங்கம் கர்ச்சித்தார் 'இது வெறும் தேர்தல் அல்ல உங்களிடம் தமிழீழத்துக்கான ஆணை கேட்டு வந்திருக்கிறோம் உதயசூரியன் சின்னத்துக்கு நீங்கள் போடும் புள்ளடி ஒவ்வொன்றும் தமிழீழத்துக்கான படிக்கட்டுக்கள். அடுத்த தைப்பொங்கல் தமிழீழத்தில்.....'

தமிழீழ மக்கள் யாபெரும் அந்தப் படிக்கட்டுக்களை உயரமாகவும் உரமாகவும் அமைத்து விட்டனர் அதில் ஏறுவோம் என்றவர்களின் எந்தக்காலும் அடிப்படிக்கட்டைக் கூட தொடக்கூடி இல்லை. அஃது ஒன்றும் அறியாது வாமதேவுச் சித்தப்பா தவராசா அத்தானுக்குக் குசுகுசுத்துச் சொன்னார் 'நடுக்கடலில் கப்பலில் வைச்சு தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தப் போகினம் பிரதமர் யார்? அமைச்சர்கள் யாரார் என்கிறதெல்லாம் தெரிவு செய்தாச்சு இன்னும் ஒரு கிழமையில தெரிய வரும்...'

அதன் பிறகு போன கிழமைகளோ ஆயிரமாயிரம் அதெல்லாம் இருக்கட்டும் என் தீராவேதனை அதுதான் தமிழீழ ஆணைகேட்டுப்போனவர்கள் யப்பான் ஜீப்பில் ஊர் ஊராக உலாத்தினார்கள். விமானம் ஏறி நாடுநாடாகச் சுற்றினார்கள். இரத்தத் திலகமிட்ட பஞ்சப்பரதேசிகள் நாம் வாய்பார்த்துக்கொண்டு நின்றோம்.

அந்தத் துரோகத்தை அப்பாத்துரை அமிர்தலிங்கமும் அவரைச் சார்ந்தவர்களும் செய்திராவிடில் இந்த நிலமை எங்களுக்கு வந்திருக்குமா. இலட்சக்கணக்கில் எங்கள் மக்களை நாங்கள் இழந்திருப்போமா. இத்தகைய அவலம் நேர்ந்திருக்குமா? விம்முகிறேன் நான் வெறென்ன செய்ய ?

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)



பூமியுடன் ஒப்பிடப்படும் புதன், வெள்ளி மற்றும் செவ்வாய்

பூமி ஒரு விண்பொருள்

எல்லையற்ற வான்வெளியின் பல்லாயிரம் கோடி அண்டங்கள் நடுவில் நகரும் 'பால்வழி' தான் எம் தாய் அண்டம். ஒரு சாதாரண அண்டம். ஒரு இலட்சம் ஒளி ஆண்டு விட்டமும் 20 ஆயிரம் ஒளியாண்டு தடிப்பும், ஒரு சாப்பாட்டுக் கோப்பையை இன்னொரு சாப்பாட்டுக் கோப்பையால் மூடினால் வரும் சுழல் தட்டு வடிவமும் கொண்டதுதான் இந்தப் பால்வழி அண்டம். இதன் அகத்தே அடங்கி உள்ள பத்தாயிரம் கோடி விண்மீன்களில் ஒன்றுதான் எமக்கு ஒளி தந்து உயிருட்டும் கதிரவன். பிரபஞ்சத்துடன் ஒப்பிடும்போது அவன் ஒரு துகள். ஆனால் எம்மைப் பொறுத்த மட்டில் அவன் ஒரு பாரிய ஒளிப் பிழம்பு. அவன் அண்டத்தினுள் அடங்கும் 99.86 வீதம் பருப்பொருள் அவனாகவே உள்ளான். மிகுதி உள்ள 1.14 வீத எடையினுள் அடங்கும் அனைத்துப் பொருள்களும் அவன் பாரிய ஈர்ப்பு விசையை மீறி இம்மியேனும் விலகிச் செல்லமுடியாது அவனையே வலம் வரும் அவனின் கைதிகள்.

முதற்கண் அவனை வலம்வரும் அவன் கோள்களைப் பார்ப்போம். ஒன்பது கோள்கள், மன்னிக்கவும் இப்பொழுது அவை எட்டாக குறைக்கப் பட்டு விட்டனவே, அவனை வலம் வருகின்றன. மிக அண்மையில் வலம்வரும் புதனில் ஆரம்பித்து எட்டாவதாக வலம் வரும் நெப்டியூனுக்கும் இடையில்தான் தூரத்தில் எத்தனை வேறுபாடு. நெப்டியூன் ஒரு முறை வலம் வரும் காலத்துக்குள் புதன் கிட்டடத்தட்ட ஆயிரம்முறை வலம் வந்து முடித்து விடுவான். இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் வலம் வருபவை முறையே வெள்ளி என்னும் கோளும் பூமி என்னும் கோளும். இரண்டையும் இரட்டையர் என்று சொல்லுமவிற்கு உருவ ஒற்றுமை உடையவை. ஆனாலும் வெள்ளி சற்றுச் சிறியது. பூமி 365.25 நாட்களில் ஒரு முறை வலம் வரும்போது வெள்ளி அதன் தூர வித்தியாச அநுகூலத்தால் 224.7 பூமி நாட்களுள் சுற்றி முடித்துவிடும். இரண்டு கோள்களுமே மிகவும் அழகானவை. வெள்ளி அளவுக்கு பிரகாசம் இல்லாவிடிலும் அதன் நீலவண்ணத்தால் வெளியில் இருந்து பார்க்கும் எல்லோரையும் கவருவது பூமிதான். ஆனால் பூமியில் உள்ளோரைக் கவருபவை வெள்ளியும் செந்நிறத்தான் செவ்வாயும்தான்.

வெள்ளியின் அழகை என்னவென்று சொல்ல. பூமியிலிருந்து நாம் நோக்கும்போது பெறும் ஒளியை வைத்து விண்மீன்களை தரப் படுத்துவார்கள். முதலாம் தர விண்மீன்கள் ஒளிகூடியவை. இரண்டாம்தரம் அதற்குக் குறைந்தவை. அந்த வரிசையில் 6ம் தரம்வரைதான் நாம் வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடியவை. வானில் பூசம் நட்சத்திரத்தை ஒருமுறை பாருங்கள்?. முதலாம் தர விண்மீன் ஒன்றுக்கு எடுத்துக்காட்டாக அதை வைத்துக் கொள்ளுங்கள். அதிலும் ஒளி கூடிய வான் பொருள்களை எங்கே கொண்டுபோய் போடுவது? 0 என்று போடலாம் தொடர்ந்தும் சய 1 என்ற வரிசையில் போய்க் கொண்டிருக்கலாம். ஆம் அதைத்தான் செய்கிறார்கள்.

வானிலேயே எம் கண்களுக்கு ஒளி கூடிய சீரியஸ் என்னும் விண்மீனின் ஒளியை சய 1.46 எனக் கணிப்பார்கள். இந்த வகையில் எங்களுக்கு காலை வெள்ளியாக அல்லது மாலைவெள்ளியாக சய 4.6 வரை பிரகாசம் தந்து வெள்ளி எங்களைப் பரவசமூட்டும்.

இது போன்ற இன்னும் சில வான் பொருள்கயையும் பார்ப்போம். கதிரவன் சய 26.74, நிலவு சய 12.92. வியாழன் அதன் உச்சத் தோற்றத்தில் கிட்டத்தட்ட சய மூன்று வரை செல்லும். இதுபோல் செவ்வாயும் புதனும் சய இரண்டரைவரை செல்ல வல்லவை. எங்கள் கண்களுக்குப் புலப்படும் எஞ்சிய கோளான சனியும் சய அரைவரை செல்ல வல்லது.

Here For You!

• ESOL with Citizenship • Points Based Test • Spouse Visa Test • Multilingual Staff
• You pay only once & we train you until you pass • Successfully trained over 28,000 students
• Courses from £200 • Certificates with 20 days • Online numeracy and literacy courses

TrainingConnect
www.trainingconnect.co.uk
• UK • India • China • Dubai • Russia •

National Centres : Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Birmingham, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Croydon, Wolverhampton.

Head Office : Vista Centre, 9th Flr, 50, Salisbury Road, Hounslow TW4 6JQ To enrol or enquire about your nearest centre, call our team on 0208 538 0248

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:	கனடா:
Tel: 020 7043 4315	Tel: 647-724-4188
Fax: 020 7043 4312	Fax: 416-438-7855

email: info@orumanam.com

மணமகள் தேவை

1. Age 31, 5'7" A/L finished Living in US looking for a Suitable Bride Ref: 3258

2. Age 31, 5'6" IT Engineer working in a company in UK, German Citizen looking for a Suitable bride Ref : 3254

3. Age 37, 5'9", Engineer, British Citizen, seeking well educated bride in UK. Ref: 1084

4. Age 43, 5'10", A/L finished, UK PR, looking for a suitable bride. Ref: 912

5. வயது 37, 5'7", A/L finished, UK PR, தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 781

6. வயது 32, 5'3", IT Qualified, British Citizen, தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 1208

7. Age 27, 6", Self-Employed, British Citizen, looking for a suitable bride. Ref: 587

8. வயது 26, 5", இலண்டனில் Student Visa மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3259

9. வயது 35, 5'5", O/L finished, UK PR, தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 3263.

10. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

11. Age 37, 6", UK PR, A/L finished, looking for a matching bride. Ref: 2916

12. Age 31, 5'10", Ph.D qualified, Canadian PR, seeking a suitable bride. Ref: 3228

13. 34 years, 5'2", Graduated, British Citizen, looking for a suitable bride. Ref: 2396

14. 33 வயது, 5'8", Engineer, இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை இலங்கையில் தேடுகின்றனர். Ref: 2371

15. 32 years, 5'7", A/L finished, UK PR, looking for a suitable bride. Ref: 1526

16. 25 years, 5'6", Student visa in UK, looking for a matching bride. Ref: 1703

17. 40 வயது, 5'7", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2578

18. 31 years, 5'7", A/L finished, UK PR, looking for a matching bride. Ref: 686

19. 26 years, 5'10", Finansial Sector, British Citizen, looking for a educated bride. Ref: 1825

20. 30 வயது 5'9", Self Employed, Norwayஇல் வசிக்கும் மணமகன் ஐரோப்பிய நாட்டு குடியுரிமை பெற்ற மணமகளைத் தேடுகின்றார். Ref: 2249

21. 31 years, 5'8", Engineer, Student visa in UK, looking for a educated bride with citizenship. Ref: 2440.

22. 31 வயது, 5'7", Self Employed, செவ்வாய் குற்றம் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2395

23. 25 years, 6", fast food chain assistant manager, UK PR, looking for a suitable bride. Ref: 2327

24. 27 years, 5'7", Engineer, PSW visa in UK, seeking a suitable bride. Ref: 1013

25. 33 வயது 5'2" கடந்த 13 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் ஒரு Private Companyஇல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2303

26. Age 29, tall 5.4 British citizen accountant looking for a suitable bride Ref: 1130

27. Age 36, tall 5.4 British citizen , Engineer at present doing a Business looking for a suitable Bride Ref: 2149

28. Age 30, 5'7", Doctor, Danish Citizen, looking for a well educated bride. Ref: 1729.

29. வயது 26, 5'11", Personal Banker, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1807

30. Age 36, 6", MSc finished, British Citizen, well employed, looking for a matching bride. Ref:1191.

31. வயது 37, 5'9", A/L finished, PR in France, தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 972.

32. Age 27, 5'9", BSc in Computer Engineer, Student visa in UK, looking for a matching bride. Ref: 1856.

33. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1837.

34. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1784.

35. வயது 30, 6", BSc Graduate, UK PR, இலங்கையில் வசிக்கும் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். Ref: 2012

36. Age 29, 5'9", MSc in IT, Student Visa in UK, looking for a matching bride with UK PR or citizenship. Ref: 1919

37. வயது 32, 5'2", Student visa இல் பிரித்தானியாவில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உடைய மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 636.

38. வயது 25, 6'0", துபாயில் வசிக்கும் மணமகனுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1528

39. Age 25, 5'6", HMD Business student, student visa in UK, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 1703

40. வயது 31, 5'5", இலங்கையில் கல்விக் கோட்டத்தில் வேலை செய்யும் வாய் பேச முடியாத மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1656

41. வயது 31, 5'7", பிரித்தானியாவில் நிரந்தர வதிவுடமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 686

42. 24 years, 5'9", IT Student, student visa in UK, looking for a suitable bride. Ref: 1672

43. 35 years, 5'11", Uk PR, Self-Employed, seeking a matching bride. Ref: 1693

44. 37 years, 5'6", Computer Science Graduate, British Citizen, Divorced, looking for a suitable bride with UK citizenship. Ref: 1684

45. வயது 52, 5'7", widowed, இலங்கையில் வசிக்கும் மணமகன் சிறந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1699

மணமகன் தேவை

1. Age 29, 5'4", Doctor, Australian Citizen, looking for a well educated groom. Ref: 3232

2. Age 28, 5'4", BSc degree holder, British Citizen, serching for a matching groom. Ref: 1596

3. வயது 25, 5'4", Accountant Student, இலண்டனில் Student Visa,ல் இருக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3260

4. வயது 26, 5'4", இலங்கையில், BA final year படித்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3257

5. Age 32, 5'4", Doctor, Stident visa in UK, looking for a matching groom in UK. Ref: 3243

6. வயது 32, 5'2", ஆசிரியையாக இலங்கையில் வேலை செய்யும் பெண்ணுக்கு இலண்டனில் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3240

7. Age 31, 5'4", Architect, British Citizen, looking for a well educated groom. Ref: 3227

8. வயது 29, 5'2", Account Student, பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 881

9. வயது 32, 5'4", Architect ஆக வேலை செய்யும் ஜேர்மனிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 589

10. 42 வயது, 5'2", ஆசிரியையாக இலங்கையில் பணிபுரியும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2622

11. 26 வயது, 5'3", நோர்வேயில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2749

12. 25 வயது, 5'6", BA finished, British Citizen, நன்கு படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 2495

13. 31 years, 5'4", Architect & self-employed, German Citizen, living in UK, looking for a well educated groom. Ref: 589

14. 29 years, 5'2", Accountant Student, French Citizen, looking for a educated groom. Ref: 881

15. 25 வயது, 5'6", கொழும்பில் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2273

16. 28 வயது, 5'2", இலங்கையில் ஆசிரியராக பணிபுரியும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 2392

17. 30 வயது, 5'6", A/L finished, கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை எதிர்பார்க்கின்றனர். Ref: 2496

18. 50 வயது, 5'6", Finished Hotel Management in Colombo, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 804

19. 49 வயது, 5'6", Finished Hotel Management, Canadian Citizen, பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 805

20. 41 years, 5'4", Doctor, Living in Sri Lanka, looking for a educated groom anywhere. Ref: 1514

21. 43 years, 5'1", A/L finished, Living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref 2119

22. Age 29, 5'5", working as a Financial Analyst, British Citizen, looking for a well educated groom. Ref: 2175.

23. Age 27, 5'6", Investment Banker, British Citizen, looking for a educated and professional groom. Ref: 1722.

24. Age 28, 5'5", Doctor, British Citizen, seeking a well educated groom. Ref: 1780.

25. வயது 24, 5'3", BSc Degree holder in Mathematics & statistic, லண்டனில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உடைய பெண் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார்.Ref: 1243.

26. வயது 37, 5'3", MSc in IT, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 895.

27. வயது 28, 5'5", Financial Officer ஆக இலங்கையில் வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2027

28. வயது 29, 5'7", MSc in Financial Mathematics, இலங்கையில் Bank Of ceylonஇல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகினறனர். Ref: 1871

29. வயது 33, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் விவாகரத்து பெற்ற மணமகளுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1782

30. வயது 36, 5", A/L finished, இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் வேலை செய்யும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற துணையைத் தேடுகின்றனர். Ref: 1942

31. வயது 46, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற, குழந்தையுடன் வசிக்கும் விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர்.Ref: 1845

32. Age 32, 5'6", Teacher, French Citizen, looking for a matching groom. Ref: 1954.

33. 21 years, 5'3", Information technology in IT, living in India, seeking a matching groom in UK with citizenship. Ref: 1686

34. வயது 30, 5'4", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1551

35. வயது 23, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு UK Citizen பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1697

36. 25 years, 5'1", BA Graduate, PR in UK, seeking a suitable grrom. Ref: 1580

37. வயது 25, 5'6", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1696

38. வயது 29, 5'4", Doctor, இலங்கையில் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1695

39. 41 years, 5'5", MSc in computing, British Citizen, looking for a matching groom. Ref: 1678

40. Age 38, 5'7", working in financial sector, Canadian Citizen, looking for a matching groom. Ref: 1595.

41. வயது 23, 5'2", Medical Student, British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1408.

42. Age 25, 5'2", Pharmasist, British Citizen, looking for a educated groom. Ref: 1531.

43. வயது 28, 5'4", BSc Degree Holder, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார. Ref: 1596

44. Age 25, 5'2", Computer Engineer, Danish Citizen, looking for a educated groom. Ref: 1527.

45. வயது 25, 5'0", தற்பொழுது France இல் வசிக்கும் பெண்ணுக்கு, ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1475.

46. வயது 27, 5'2", இலங்கையில் Administrative Assistant ஆக வேலை செய்து கொண்டிருக்கும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1459.

47. வயது 25, 5'0", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1525.

48. Age 43, 5'2", working in a University in Sri Lanka, looking for a suitable grrom. Ref: 1246..

49. வயது 27, 5'1", graduate degree holder, இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1433.

50. Age 24, 5'9", BA finished in Jaffna univercity, looking for a suitable groom. Ref: 1599

51. இலங்கையில் வசிக்கும் வயது 30, 5'5", Nurse, மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1598.

52. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

53. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

54. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

55. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

56. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

57. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபமா ராவ் இலங்கைக்குப் போய் கதைத்தது என்ன?

நிருபமா ராவ் ஜனவரி 31-ம் திகதி இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப் படுவது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த வந்திருந்தார். இவர் நடாத்திய பேச்சு வார்த்தையின் பின் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடாத்தப் பட மாட்டாது என்று இருதரப்பாலும் உறுதி கூறப்பட்டது. நிருபமாவும் மஹிந்தவும் இப்படித்தான் உரையாடியிருப்பார்களோ?

நிருபமா: உங்கடை கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்குகிறார்கள் கொல்கிறார்கள் என்று தமிழ்நாட்டில் ஒரு சில குழுக்கள் கூச்சலிடத் தொடங்கிவிட்டன. அந்தக் கோமாளிகளை எலக்சன் முடியும் வரை சமாளிக்க வேண்டும். உங்கடை கடற்படையிடம் சொல்லுங்கோ அதுவரைக்கும் கொஞ்சம் தமிழ் மீனவரை விட்டுப் பிடிக்கச் சொல்லி.

மஹிந்த: நம்ம படையினருக்கு தொழில் பொழுது போக்கு எல்லாமே தமிழர்களைக் கொல்வதுதான். நாங்க இதை 1956இல் இருந்து செய்து வருகிறோம். இதை நிப்பாட்ட முடியாது.

நிருபமா: அதைச் செய்ய வேண்டாமென்று நான் சொல்லவில்லை. தயவு செய்து கொஞ்சம் அடக்கி வாசிக்கச் சொல்லுங்கோ.

மஹிந்த: அது சரியான கடினம். தனியாக தமிழர்களைக் கண்டால் கொல்ல வேணும் போல் இருக்கும் எங்கள் படைக்கு. இந்திய மத்திய அரசுக்கும் தமிழர்களைக் கொல்வது சரியான சந்தோசம்தானே. தமிழர்களைக் கொல்லத்தானே உங்க மத்திய அரசு எங்களுக்கு ஆயுதம் தந்தது பயிற்ச்சி தந்தது, காசு தந்தது. 20,000 ஆயிரம் இந்தியப் படையினரைக் கூட அனுப்பி வைத்தது.

நிருபமா: ஐய்யோ ஐய்யோ நான உங்களை தமிழர்களைக் கொல்ல வேண்டாமேன்று சொல்லவில்லை. நல்லாய் கொல்லுங்கோ. அந்தக் குறைந்த சாதி நாய்கள் கொல்லப்படுவதைப் பற்றி யார் கவலைப்படுவான். ஆனால் இந்த எலக்சன் வரைக்கும் கொஞ்சம் பொறுங்கோ. அதுக்குப் பிறகு உங்களுக்குத் தேவையான உதவிகளை நாங்கள் செய்வம் தமிழர்களைக் கொல்ல.

மஹிந்த: அதெல்லாம் ஏலாது. நாங்கள் செய்கிறதைச் செய்வம். நீங்கள் எங்களுக்கு உதவி செய்தே ஆக வேண்டும். இல்லாவிடில் திருக்கோணாமலை, காங்கேசன் துறை, பலாலி, மன்னார் புத்தளம் என்று எல்லா இடத்திலையும் சீனர்களை வந்து காம்ப் அடிக்க விட்டிடுவம். அப்புறம் உங்க கதி அதோகதிதான்.

நிருபமா: ஐய்யோ சார். உங்களை எங்களால் எப்படி தடுக்க முடியும்? நீங்க எந்த அளவு பெரிய ஆள். நீங்கள் தமிழனை அழித்தால் தான நாங்கள் இந்தியாவில் தமிழர்களை அடக்கிவைத்திருக்க முடியும். அவங்க ஏதாவது பேசினா இலங்கையில் நடந்ததுதான் உங்களுக்கும் நடக்கும் என்று சொல்லலாம். உங்களை எங்களுக்கு மிகவும் தேவை.

மஹிந்த: அப்பிடி வழிக்கு வா.

நிருபமா: உங்களை மன்றாட்டமாகக் கேட்கிறன் சார். பிளீஸ் சார் ஒரு அறிக்கையாவது விடுவம் இனி மீனவர்களுக்கு கடலில் பிரச்சனை இல்லை என்று. அது மட்டுமல்ல. ஒரு நாடகமாடி தப்பி உள்ள புலிகள்தான் தமிழ் மீனவர்களைக் கொல்கிறார்கள் என்று சொல்லுவம்.

(இப்போது நிருபமா மஹிந்தவின் காலைப் பிடித்திருப்பாரோ?)

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது நிருபமா இலங்கை சென்று வந்த பின்னும் தாக்குதல் நடக்கிறது. இதைத் தவிர வேறு எதைக் கதைத்திருக்க முடியும்?

- வேல் தர்மா

செய்தி...

மீனவர் கைது மன்மோகன் சிங்க கண்டனம், கனிமொழி ஆர்ப்பாட்டம்

தேர்தலிற்காக இந்திய அரசியல்வாதிகள் மீனவர்களை வைத்து நடத்தும் உக்கிர தாண்டவம் என்று இதனை கூறலாம். மீனவர் கைதும் அடுத்த 24 மணி நேரத்தில் இந்திய அரசு தி.மு.க ஆகியோரது நடவடிக்கையினையும் பார்க்கும் போது இவர்களே மீனவர்களை கைது செய்ய திட்டமிட்டு நடாத்திய நாடகமோ என தோன்றுகின்றது.

- உமை

எடேய் கருநாநிதிக்கு தெரியாத நாடகமா? மெரினா கடற்கரையில் கட்டிலில் இரண்டு மனிசிமாரோடு போய் உண்ணாவிரதம் இருந்தவன். இரத்த தாண்டவம் நடக்கும் போது கூட நாடக மாடியவன். உலக தமிழனையே பேய்க்காட்டியவன். எட கனிமொழி ராஜபக்சவுக்கு எதிராகவா? நடக்குமா?

- நேசன்

கதை இப்படி போகுதா..? பிடிச்சு கொடுத்ததே இந்திய கடற்படை போல் உள்ளது. அல்லது கொஞ்ச தி.மு.க ஆதரவாளர்களை தாங்களகவே போய் தரையிறங்க சொன்னார்களா தெரியவில்லையே? இதைதான் இராஜதந்திர அரசியல் என்பதோ? முள்ளிவாய்க்கால் எத்தனையோ மேல்!

- மருதங்கேணி

ஆட்சியில் இருப்பவர்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினால் யாரிடம் முறையிடுவது? இது என்ன கேவலம்?

- ராஜ் லோகன்

இன்று அமெரிக்கா பிடித்த ஒரு சோமாலிய கடல் கொள்ளைக்காரனுக்கு 34 வருட சிறை என்ற தீர்ப்பை வழங்கியது. அதை விட்டு ஒபாமா கண்டனமும் கிளிண்டன் ஆர்ப்பாட்டமும் செய்தால்?

- அகோதா

(நன்றி யாழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நடிகர்கள்

தமிழ் சினிமாவிற்கு இருக்கும் எண்ணற்ற சிறப்புகளில் சொல்லும்படியான ஒன்று: நீடித்து நிற்கும், தரமும் தனி பாணியும் கொண்ட நகைச்சுவை நடிகர்களை கொண்டிருப்பது. என்எஸ்கே தொடங்கி தங்கவேலு, சந்திரபாபு வரை எல்லா நகைச்சுவை நடிகர்களும் தங்களுக்கென ஒரு பாணியையும், தனக்கென ஒரு ஆளுமைக்காலத்தையும் ஏற்படுத்தி அந்த காலத்தில் தங்கள் பேரை நிலைத்து நிற்க செய்து மறைந்தனர்.

அதன் பின்னால் வந்த நாகேஷ் ஒரு தனி சகாப்தத்தையும், நல்ல மாற்றத்தையும் கொண்டு வந்தார். அதற்கு பெரிய உறுதுணை - இயக்குனர் கே. பாலச்சந்தர்.

நகைச்சுவைக்கு மட்டுமல்ல, நடிப்பையும், அதோடு கூடிய கதை ஒன்றிய பாத்திரப்படைப்பாகவும் மாறி ஜொலித்தவர் நாகேஷ். எதிர் நீச்சலையும், சர்வர் சுந்தரத்தையும், தருமியையும், காதலிக்க நேரமில்லையையும் மறக்க முடியுமா? கடைசி வரை இவருக்கும் எந்த விருதும் மறுக்கப்பட்டது திரையுலகம் வெட்கப்படவேண்டிய விஷயம்.

அடுத்த 25 வருஷம் கவுண்டமணி காலங்கள். செந்தில் இல்லாமல் கவுண்டமணி ஜெயிப்பார். கவுண்டமணி இல்லாமல் செந்திலுக்கு சொல்லும்படியாக எதுவும் இல்லை. ஆனால் இவர்கள் கூட்டணி அடித்த ஹிட்டுகள், இதுவரை முறியடிக்கப்படவில்லை. முறியடிப்பதும் சிரமம். இன்று வரை கவுண்டர் இருந்தால், அவர் மட்டுமே ஆண்டு கொண்டிருப்பார். உடல்நிலை கருதி, மார்கெட் நன்றாக இருக்கும்போதே விலகி சென்று பின் திரும்பி வந்து ஒதுங்கி கொண்டார்.

இப்போது இந்த தலைமுறைக்கு வரலாம். நகைச்சுவை நடிகர்கள் இல்லாமல் ஒரே ஒரு வெற்றிப்படமாவது விஜயோ அஜித்தோ கொடுக்க முடியுமா? என்றால் 99 % முடியாது என்பதுதான் பதில். காரணம் கதையை நம்பி படம் எடுக்கும் தைரியம் தயாரிப்பாளர்களுக்கு இல்லை.ஆனால் மாஸ் ஹிரோ சப்ஜெக்ட் என்றால் டபுள் ஓகே. ஒரு வில்லன், நான்கு சண்டைக்காட்சிகள், ஆறு பாட்டு, இதை இரண்டரை மணி நேரம் ஓட்ட தேவை வில்லனுக்கும் நாயகனுக்கும் ஒரு மோதல். அது போதும். இருந்தாலும் இந்த படம் ஓடுமா? இதே மாதிரிதான் எல்லா படங்களின் கதையுமே இருக்கே? என்ன செய்யலாம்? எதுக்கு கவலை? இங்குதான் காமெடி நடிகர்கள் தேவைப்படுகிறார்கள்.

கூப்பிடு நகைச்சுவை நடிகர்களை. அவர்களுக்கு ஒரு ஆறு சீன் விட்டுக்கொடுத்தால் வெற்றி உறுதி. ஆனால் ஹிரோவை மீறி புகழ் அடைய கூடாது .. நண்பன் பாத்திரத்தை ஒதுக்கி.. கூடிய மட்டும் ஹிரோவுடனே சுற்றி, முடிந்தால் அதில் திறமையை நிருபிக்கட்டும். எல்லாம் சரியாக போனால் அது ஹிரோ படம், படம் பப்படமானால் கை காமிக்க உதவும்.

ஆக இதற்கு முந்திய தலைமுறைகளை விட இந்த தலைமுறைக்கு காமெடி நடிகர்களின் உதவி அதிகம் தேவை. அதை கொடுக்கும் திறன் அவர்களுக்கு இருக்கிறதா? அலசுவோம்.

வடிவேலு:

தேவர் மகன் வந்து கிட்டத்தட்ட 20 வருடம் ஆகிவிட்டது. அன்றிலிருந்து இன்று வரை ஏறுமுகம்தான். இவரின் பெரிய பலமே, எந்த ஒரு வட்டத்துக்குள் சிக்காமல் இருப்பதுதான். இன்றைய தேதிக்கு குழந்தைகள் விளையாட்டானாலும் ஆனாலும் சரி, பெரியவர்கள் அன்றைய வாழ்க்கையானாலும் சரி, சந்தோசமானாலும் சரி, துக்கமானாலும் சரி - இவரின் டியலாக்குகள்தான் அதிகம் உபயோகிக்கப்படுகின்றன.

எந்த நடிகர் படம் ஆனாலும், அது எவ்வளவு மோசமாக விமர்சிக்கப்பட்டாலும், அல்ல தோல்வியுற்றாலும் இவர் அதில் இருந்தால் கூடிய வரை அந்த படம் காப்பாற்றப்படும். விதிவிலக்குகளும் சில உண்டு - குசேலன், சுறா, வில்லு, எல்லா அஜித் படங்களும்..இவர் பாணியில் சொன்னால் ' முடியல....'

சந்தானம் :

கவுண்டமணிக்கு பிறகு டீசிங் காமெடி, இவரைப்போல் யாருக்கும் வராது. ஹிரோவை கிண்டல் பண்ணும் உரிமையை கவுண்டருக்கு பிறகு இவருக்கு அருளியிருக்கிறது திரையுலகம். லொள்ளு சபா முகவரி கொடுக்க, எந்த கஷ்டமும் படாமல் வெள்ளித்திரைக்கு வந்தவர். வந்தது பெரிதல்ல வந்து நின்றது பெரிது. வந்து குறுகிய காலம் மட்டுமே ஆனதால் இப்போதைக்கு வேறு எதுவும் சொல்ல இல்லை. படம் தேர்ந்தெடுக்கும்போது சற்று யோசித்தால் சிறந்த எதிர்காலம் உறுதி.

கருணாஸ்:

அதிரடியான அறிமுகம். முதல் படத்திலேயே இவ்வளவு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியவர்கள் அதிகம் பேர் இல்லை. பாலாவின் கண்டுபிடிப்பு. பாதி வரை நன்றாகத்தான் போனார். ஏப்ரல் மாதத்தில், வில்லன், பொல்லாதவன், தேவதையை கண்டேன், யாரடி நீ மோகினி என ஒழுங்காக போய் கொண்டிருந்த இவரை திண்டுக்கல் சாரதியின் வெற்றி சற்றே தடம் மாற செய்துவிட்டது. 'உங்களுக்கு அரசியலும், படதயாரிப்பும் வேண்டாமே' இரட்டை குதிரை சவாரி எத்தனையோ பேர்களை வீழ்த்தியிருக்கிறது. நீங்களுமா ?

கஞ்சா கருப்பு :

யாருமே எதிர்பாக்காத இடத்தில இருந்து புதிதாக ஒரு பொக்கிஷம் கிடைத்தால் எப்படி இருக்கும் என்பது இவரை ' ராம்' படத்தில் பார்த்தபின்பு தமிழ் திரையுலகத்துக்கு தெரிந்தது. பாலாவின் இன்னொரு கண்டுபிடிப்பு. அமீரின் அரவணைப்பு. இவரின் எகத்தாளமான, ஊர் பேச்சு கையாடல், டயலாக் டெலிவரி, அசாத்தியமான, எதார்த்தமான நடிப்பு இவரை உச்சியில் வைத்திருகிறது. தனக்கான படம் மட்டுமே தேர்ந்தெடுப்பது மிக முக்கியம் நல்லதை எதிர்நோக்குவோம்.

விவேக் :

இவரை பட்டியலில் கடைசியாக சேர்த்தது வேதனையாகத்தான் உள்ளது. வேறு வழியில்லை - காரணம் இவரின் இப்போதைய செயல்பாடுகளும் இன்னபிறவும். பத்மஸ்ரீ, கலைமாமணி, ஜனங்களின் கலைஞன், சின்ன கலைவாணர் என்ற எல்லா புகழுக்கும் இவர் உரித்தானவர் .பாலச்சந்தரின் எந்த அறிமுகமும் தோற்காது என்பதற்கு இவர் ஒரு முக்கிய உதாரணம். மனதில் உறுதி வேண்டும் தொடங்கி பல படங்கள் நடித்தாலும் தனக்கென ஒரு பாணியை இவர் பிடித்து ஜெயிக்க ஆரம்பித்தது திருநெல்வேலி படத்திலிருந்து. அதன் பின் 2004 வரை வெற்றி. காதல் மன்னன், வாலி, பெண்ணின் மனதை தொட்டு, ரன், மின்னலே, சாமி என்று இவர் நடித்த படங்கள் ஓஹோவென வெற்றிகரமாக ஓடியவை. அதன்பின்னர் வீழ்ந்தார். பின் எழவேயில்லை விரைவில் பழைய 'புதிய' விவேக்கை எதிர்பார்க்கிறோம்

- அபிமன்யு

திரை விமர்சனம்

The King's Speech

நிர்ப்பந்தங்கள் மிகுந்த சூழ்நிலைகளில் 1936ல் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூட்டிக் கொள்கிறான் ஆறாம் ஜார்ஜ். சிறுவயது முதலே அவனிற்கு இருக்கும் திக்குவாய் காரணமாக அவன் தாழ்வுணர்வு கொண்டவனாகவும், மக்கள் முன்னிலையில் உரையாற்றுவதற்கு சிரமப்படுபவனாகவும் இருக்கிறான்.

காலங்கள் ஒடுகின்றன, ஆறாம் ஜார்ஜ் மன்னனாக முடிசூடிக் கொண்ட நிலையில் இளவரசன் ஆல்பர்ட், ஹிட்லர் தன் நாட்டு மக்கள் முன்னிலையில் ஆவேசமாக உரையாற்றுவதையும், ஹிட்லரின் பேச்சில் மதிமயங்கி கிடக்கும் ஜனத்திரள் அவன் பேச்சினால் உந்தப்பட்டு, உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஆர்ப்பரிப்பதையும் திரையில் பார்த்துக் கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம். இந்த இரு காட்சிகளின் ஒப்பீடுமே மக்களிடம் உரையாடல் என்பதன் முக்கியத்துவத்தை சிறப்பாக உணர்த்திவிடுகின்றன. தன் பேச்சால் மக்களை கவர முடியாத எவருமே அவர்கள் மனதில் இடம்பிடிப்பதில்லை, மக்களை நெருங்கி விடுவதில்லை, மக்களும் அவர்கள் மேல் நம்பிக்கை கொள்வதில்லை. மேடைப் பேச்சுக்களை நம்பி ஏமாறி வரும் மக்கள் கூட்டம் இன்றும் உண்டு. இளவரசன் ஆல்பர்ட்டின் தலையாய பிரச்சினையோ தன் குறைப்பிரசவ வார்த்தைகளால் பிறரை எதிர்கொள்வது என்பதாக இருக்கிறது.

இளவரசன் ஆல்பர்ட் தன் திக்குவாயை குணப்படுத்துவதற்காக பல மருத்துவர்களை அணுகுகிறான், ஆனால் எந்த சிகிச்சையும் அவனிற்கு பலனளிப்பதில்லை. இந்நிலையில் லியனல் லோக் என்பவர் பயிற்சியாளராக வருகிறார்.ஆரம்பத்தில் லியனலின் நிபந்தனைகள் காரணமாக லியனலை தூக்கி எறியும் ஆல்பர்ட் பின் அவன் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பிக்கிறான். இருவரிற்குமிடையில் மிகையற்ற நட்பு ஒன்று உருவாகிறது. அந்த நட்பு அதன் எல்லைகளை அறிந்திருக்கிறது. அதற்குரிய பிரிவுகளையும், சந்தேகங்களையும் அது கண்டு மீள்கிறது. திக்குவாய் குறைபாட்டால் தாழ்வுணர்வு கொண்ட ஆல்பர்ட்டை, தன் பயிற்சிகள் மூலம் அவன் அகத்துடனே மோதச் செய்கிறார் லியனல். தன் மீது நமிக்கையிழந்திருந்த ஆல்பர்ட் மெது மெதுவாக தன்னம்பிக்கை பெற ஆரம்பிக்கிறான். படிப்படியாக அவன் சொற்கள் திக்கும் அளவு குறைந்து கொண்டே வருகிறது.

இந்நிலையில் எதிர்பாராத சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவன் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூட வேண்டியிருக்கிறது. ஹிட்லரின் படைகளை எதிர்த்து செய்யப் போகும் போரிற்காக அவன் இங்கிலாந்து நாட்டு மக்களிடம் வானொலி வழியாக உரையாற்ற வேண்டியிருக்கும் மிகப் பெரிய சவாலும் அவனை வந்து அடைகிறது. அந்த சவாலை அவன் எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதே படத்தின் உச்சக் கட்டமாக அமைகிறது.

படத்தின் உச்சக்கட்டக் காட்சியில் வானொலி உரையை முடித்தபின். கம்பீரமும், ராஜகளையும் சூடி அவர் அரண்மனையில் வீறு பெற்று நடந்து வரும் அத்தருணம் படத்தின் மிக முக்கியமான தருணம். இளவரசன் எட்வர்ட்டின் காதல் விவகாரங்கள், இங்கிலாந்தின் அரசியல் என்பன திரைப்படத்தின் நிதானமான வேகத்தை மேலும் நிதானமாக்கி விடுகின்றன.

வழமை போலவே இசை மனதை நெகிழ வைக்க உதவுகிறது. நல்ல திரைக்கதை, சிறப்பான இயக்கம் என்றிருந்தாலும் படத்தை தூக்கி நிறுத்துவது ஆல்பர்ட் ஆக நடித்த காலின் ஃபர்த்தும் (Colin Firth), லியனல் லோக்கான நடித்த ஜியோப்ஃரி ரஷ்மே (Geoffrey Rush). ஆஸ்கார் விருது எல்லாம் இந்த பண்பட்ட கலைஞர்களின் திறமைக்கு சரியான அங்கீகாரமாக அமையப் போவதில்லை என்பதே என் கருத்து. மன்னனின் இந்த உரை, தித்தித்தித்திக்கும் ராஜோபசாரம்.

- அகிலன்

வீட்டில் இருந்து வீட்டு வேலை செய்வதற்கு
பெண் வேலையாள் தேவை

National Insurance Number
உள்ளவர்கள் மட்டுமே தொடர்புகொள்ளவும்.
சம்பளம் £200.00கிழமைக்கு, வேலையின் தரத்தைப் பொறுத்து கொடுக்கப்படும். தங்குவதற்கு தனி அறையும், சாப்பாடும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு
07574443185 (HARROW)

SHOP FOR TO LET / SHOP FOR SALE
KINGSBURY யில்
கடை வாடகைக்கு, விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
07932 625 099, 07956 469 632

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா

"பயணம்" - திரைவிமர்சனம்

உங்களை ஒரு தியேட்டருக்குள் துப்பாக்கி முனையில் வெடிகுண்டுகளுடன் பிணைக்கைதியாக தீவிரவாதிகள் பிடித்துக்கொண்டால் என்னாகும்? ஒரு இரண்டு நிமிடங்கள் கண்ணை மூடி புத்தபிரான் போல் அமர்ந்தோ அமராமலோ கற்பனை செய்துகொள்ளுங்கள்.

நினைக்கவே படுபயங்கரமாக கொடூரமாக அய்யயோ பயமாருக்கே என்று இருக்கிறதா? இல்லையென்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு ஒரளவாவது பயணம் திரைப்படம் சுவாரஸ்யம் கூட்டும் சாத்தியங்கள் இருக்கிறது. ஹைஜாக்கெல்லாம் எனக்கு அல்வா சாப்பிடறமாதிரி என்று நினைக்கிறவர்களுக்கும் இப்படம் பிடிக்கும். அடிக்கடி விமானப்பயணம் போகிறவர்களுக்கும் பிடித்துத் தொலைக்கலாம்.

ஹாலிவுட்டில் விமானக்கடத்தல் தொடர்பான படங்கள் நிறைய வெளியாகியிருந்தாலும், இந்தியாவில் மிக குறைவான படங்களே வெளியாகியுள்ளன. அவையும் பெரிய அளவில் வெற்றிபெற்றதில்லை. 2008ஆம் ஆண்டு வெளியான ஹைஜாக் என்னும் கொஞ்சம் மொன்னையான ஹிந்தி படம் விமானக்கடத்தலை அடிப்படையாக கொண்டது. அதற்கு பிறகு இப்போது பிரகாஷ் ராஜ் தயாரிப்பில் வெளியாகியிருக்கும் பயணம்.

தீவிரவாதிகள் படமென்றாலே ஹீரோயிசம் தூக்கலாக இருக்கும். பஞ்ச் வசனங்களுக்கு பஞ்சமிருக்காது. தீவிரவாதியை இடதுகையால் அடித்தபடி வலதுகையில் நாயகியின் இடைதடவி நடனமாடும் ஹீரோக்கள் நிச்சயம் இருந்தாகவேண்டும். ஏனோ பயணத்தில் அது நிச்சயமாக கிடையாது என்று ஆரம்பத்திலேயே தெரிந்துவிடுகிறது. டூயட் கிடையாது. மயிர்க்கூச்செரியவைக்கும் சண்டைக்காட்சிகள் கிடையாது. படத்தில் பாடல்களே கிடையாது. எழுத்தொட்டப் பாடல் மட்டும்தான். முதலில் அதற்காகவே பி.ராஜை பாராட்டிவிடுவோம். வாழ்க வளர்க!

அடடா ஒரு சூப்பர் ஹீரோவை வைத்துக்கொண்டு ஹீரோயிசம் இல்லாத படமா என நிமிர்ந்து உட்கார்ந்தால், படத்தின் கதை நம்மைப் பார்த்து கொக்கானி காட்டுகிறது. விஜயகாந்தின் அக்மார்க முத்திரை பெற்ற ஐஎஸ்ஓ 9001 தீவிரவாதிகள் ஒழிப்பு திரைப்படங்களின் அதே கதை. பணய கைதிகளை விடவேண்டுமென்றால் பாகிஸ்தானிலிருந்து பிடித்து வரப்பட்ட தாடிவைத்த சூப்பர் தீவிரவாதியை விட்டுவிடவேண்டும். ஸ்ஸ்ப்பா ரோஜா படத்தில் தொடங்கி விமானக்கடத்தலை கொண்ட ஹிந்தி படமான ஹைஜாக் படத்தின் கதையும் இதேதான் என்பது எல்கேஜி குழந்தைகளுக்கும் தெரிந்திருக்கும்.

என்னதான் புதுமை செய்திருக்கிறார்கள்? நிறைய குட்டி குட்டி ஜோக்குகள், விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும் நகைச்சுவை சம்பவங்கள், பாப்கார்ன் வாங்கினால் கிளிசரின் ஃப்ரீ என்கிற அளவுக்கு அழவைக்கிற செண்டிமெண்ட் காட்சிகள், தேசிய கீதம் போடாமலே, கிரிக்கெட் மேட்ச் பார்க்காமலே உங்களுடைய தேசப்பற்று உச்சி முதல் உள்ளங்கால்கால் வரை ஊறிப்போய் உடல் கூச்செரியவைக்கும் இந்தியக்காட்சிகள் மத ஒற்றுமையை நல்லிணக்கத்தை வலியுறுத்தும். ஸ்ஸ்ப்பா இதெல்லாம் நாங்க விக்ரமனின் படங்களிலேயே நிறைய பார்த்துட்டோம் என்று கத்திவிட தோன்றும் அளவுக்கு இப்படி நிறைய புதுமைகள்.

எப்போதும் போல இதிலும் மிக நுணுக்கமாக இஸ்லாமியர்களை கொடியவர்களாகவும், கொடூரமானவர்களாகவும், ஜிகாத்துக்காக எதையும் செய்யக்கூடியவர்களாகவும் காட்டி தொலைத்திருக்கிறார்கள். அதிலும் குழந்தைகளிடம் பாசமாக பேசிநடித்து ஏமாற்றி அவர்களுடைய பைகளில் குண்டுவைப்பதாக காட்டியிருப்பதெல்லாம் அப்பட்டமான அயோக்கியத்தனமே தவிற வேறொன்றும் இல்லை. அதிலும் ஒரு புரட்சியாளர் 'நான் கார்ல் மார்க்ஸையும் காந்தியையும் படித்துவிட்டேன் அதனால்தான் இப்படி புரட்சி பண்ணுகிறேன்' என்று லூசுபோல பேசுவார். அப்துல்காதருக்கு அமாவாசைக்கும் என்ன பாஸ் தொடர்பு!.

அரசியலை விட்டுத்தொலைத்துவிட்டு சினிமாவை சினிமாவாக அணுகித்தொலைப்போம். படத்தில் நூறுபேர் விமானத்தில் கடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய செல்போன்கள் பிடுங்கப்படுகின்றன. ஆனால் அடுத்தகாட்சியில் ஒரு மூலையில் ஒரு பெண் செல்போனில் பேசியபடி பக்கத்துசீட்டு ஆன்ட்டியோடு மகிழ்ச்சியாக சிரித்துக்கொண்டிருப்பதாக காட்டப்படுகிறது. விமானம் கடத்தப்பட்டிருக்கிறது, துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டிருக்கிறோம், குண்டுகள் வைத்துள்ளனர், ஆனால் எந்த வித பயமோ, அச்சமோ இல்லாமல் அனைவரும் பிக்னிக் வந்தது போல பேசிக்கொள்வதும், தீவிரவாதியின் துப்பாக்கியை வாங்கி விளையாடுவதும் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது.

அட பயணிகள்தான் இப்படினா தீவிரவாதிகள் அதுக்கும்மேல, ஹேய்.. மே கோன் ஹை.. தூம் கோன் ஹை என ஹிந்தியில் அடித்தொண்டையில் கத்திக்கொண்டே இருந்தால் போதுமா.. அடப்போங்கப்பா குழந்தைங்க கூட சிரிக்குது.. வல்லரசு படத்துல வர வாசிம்கான்தான் உண்மையான தீவிரவாதி என நினைக்க தோன்றுகிறது. படம் முழுக்க நிறைய காமெடி. நாகார்ஜுன் ஹீரோயிசம் காட்டவில்லையென்றாலும், கிளைமாக்ஸில் கொஞ்சம் கொஞ்சம் தன் முகத்தை காட்டத்தவறுவதில்லை.. மற்றபடி அவருக்கு சபாஷ். படம் முழுக்க ஒரே ஆறுதல் சூப்பர் ஸ்டாராக வரும் ப்ரித்வியும் அவருடைய ரசிகரும் வருகிற காட்சிகள் மட்டும்தான். சினிமா ஹீரோக்கள் மீதான நல்ல விமர்சனமாக அதைக்கருதலாம். (ஆனால் கிளைமாக்ஸில் வேறு வழியில்லாமல் ஹீரோவை ஹீரோவாக காண்பிக்க வேண்டி வந்ததோ என்னவோ)போலீஸ் வேஷம் போட்டுக்கொண்டு விமானநிலையத்தில் நுழையும் பத்திரிகையாளர் காட்சி காதில் பூ. பிரம்மானந்தத்தின் காமெடி இரண்டாபாதியில் கொஞ்சம்ஆறுதல்.

தமிழ்சினிமா மீண்டும் மீண்டும் இஸ்லாமியர்களை கொடூரமாக காட்சிப்படுத்துவதை இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் படமாக்குமோ தெரியவில்லை. ஆனால் ராதாமோகன் மிகநேரடியாக தன் அரசியலை நெற்றிப்பொட்டில் அடித்தது போல இது இஸ்லாமியர்களுக்கு எதிரான படமென பறைசாற்றுகிறார். அவருக்கு என் கண்டனங்கள்.

ஒருவேளை ராதாமோகன் முற்போக்காளராக இருக்கலாம். அவரிடம் கம்யூனிச சிந்தகைள் இருக்கலாம், அதனால் இப்படி ஒரு படமெடுக்க நேர்ந்திருக்கலாம்.

ராதாமோகனின் முந்தைய படங்களான அழகியே தீயேவை பல தடவைகள் பார்த்து ரசித்திருக்கிறேன். மொழி படம் கண்டு நெகிழ்ச்சியில் கண்ணீர்விட்டதுமுண்டு. ஆனால் இப்படம் எனக்கு எரிச்சலையும் கோபத்தையுமே ஏற்படுத்தியது.

- அதீஷா

சினித்துளி

பொன்னியின் செல்வன்!

பொன்னியின் செல்வன் படத்தை மணிரத்னம் இயக்குகிறார் என்பது நூறு சதவீதம் உறுதியான விஷயமாகிவிட்டது. இந்தப் படத்தின் நாயகர்கள் யார் என்பதே ஆவலைத் தூண்டுவதாக இருந்தது. விஜய்தான் படத்தின் ஹீரோவாம். பொன்னியின் செல்வன் நாவலில் வாசகர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட வந்தியத்தேவன் பாத்திரத்தில் வருகிறார் அவர். மற்ற முக்கிய வேடங்களில் விக்ரம், விஷால் மற்றும் தெலுங்கு சூப்பர் ஸ்டார் மகேஷ் பாபுவும் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்தில் நாயகர்களுக்கு இணையாக நாயகிகளுக்கும் பங்குள்ளது. எனவே பொருத்தமான நடிகைகளுக்கு தேர்வு நடந்து வருகிறது. நல்ல காலம் இந்தக் கொடுமையெல்லாம் பார்க்க அமரர் கல்கி உயிரோடில்லை.!

திருமாவளவன் நடிக்கும் 'மின்சாரம்'!

கோவை பிலிம் சிட்டி பட நிறுவனம் சார்பில் எம். தமிழரசன், எம். இலியாஸ் ஆகியோர் இணைந்து தயாரிக்கும் படம் மின்சாரம். இதில் நாயகனாக யுவராஜ், நாயகியாக மதுசந்தா ஆகியோர் நடிக்கின்றனர். விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் முதல் அமைச்சர் வேடத்தில் நடிக்கிறாராம். இப்படத்துக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி என். செல்வகுமாரன் இயக்குகிறார். குற்றவாளிகள் ஜாமீனில் வந்து மீண்டும் தப்பு செய்வது தொடர்பான படமாம் இது.

நிஜத்தில தான் முதலமைச்சர் என்ற கனவுக்கே இடமில்லை திரைப்படத்திலயாவது தனது ஆசையைத் தீர்த்துக்கொள்கிறாறே என்று புழகாங்கிதம் அடைகின்றனராம் உடன்பிறப்புக்கள்.

ஹரா வேறு ராணா வேறு!!

ரஜினி நடிக்கும் அனிமேஷன் படமான 'ஹரா'வுக்கும், புதிதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 'ராணா' படத்துக்கும் தொடர்பில்லை என்றும், இரண்டும் வேறு வேறு படங்கள் என்றும் தெளிவுபடுத்தியுள்ளார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார். இது குறித்து 'ராணா' வின் இயக்குநர் கூறுகையில், ராணா முழுக்க முழுக்க ரஜினி படம். இதில் அனிமேஷனெல்லாம் கிடையாது. 'ஹரா' வேறு படம். சரித்திரப் பின்னணியில் வரும் படம் சர்வதேசத் தரத்தில் இருக்கும் என்று கூறினார்.

கமல் - செல்வா கூட்டணி!

செல்வராகவன் இயக்கத்தில் கமல் நடிக்க போகிறார் என்ற தகவல் ஏற்கனவே வெளியாகிது. இப்போது இவர்களது கூட்டணியில் யுவன் சங்கர் ராஜாவும் சேர்ந்துள்ளார். செல்வராகவன் தனுஷை வைத்து 'இரண்டாம் உலகம்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதனையடுத்து கமலை வைத்து ஒரு படம் இயக்க போகிறார் செல்வராகவன். இதற்காக அட்டகாசமான கதையொன்றை கமலிடம் சொல்லி ஒப்புதல் வாங்கிவிட்டாராம். அத்துடன் படத்தை ஏப்ரல் மாதம் தொடங்குகிறார்.

இந்நிலையில் இவர்களது கூட்டணியில் யுவன் சங்கர் ராஜாவும் இணைந்துள்ளார். இப்படத்திற்கு யுவன்தான் இசையமைக்கிறார். கடந்த படத்தில் செல்வாவுடன் யுவன் இணையவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spicy Village

Indian & Srilankan Cuisine

We cater all indian and sri lankan food

அப்பம், தோசை மற்றும் தாயக உணவு வகைகளை தரமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

- Mutton Roll or Veg Rolls .... £ 0.50
- Fish Cutlet .... £ 0.50
- Paties .... £ 0.50

Take away ONLY

100 இடியப்பம், சொதி, சம்பல், உருளைக் கிழங்கு கறி | £ 12 Only Takeaway Only | £ 15 With chicken curry

HOME DELIVERY AVAILABLE

உங்கள் திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகளை தரமாகவும் நிறைந்த சுவையுடனும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.(பிற நகரங்களுக்கும் விநியோகம் செய்யப்படும்.)

86 Brighton Road, Purley CR8 4DA

TP: 020 8660 0956

KuttiBaba

Traditional clothing for little people

Appa said "no running around now, your vershdi will fall off"



"Appa, maybe you need to get your vershdi from KuttiBaba.com" I said

Check out the kutti vershdi that looks like a traditional vershdi but fits like a pyjama.

Order online or call/ email for a brochure

0845 3892155

info@kuttibaba.com

விசேட அறிவித்தல்

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

பாலாலயம் செய்யப்பட்ட எங்கள் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் தினமும் மூன்று வேளைப் பூசைகள்; விசேட அபிசேக ஆராதனைகளுடன் முறைப்படி நடைபெற்று வருகின்றன.

அடியார்கள் அனைவரும் தற்போதைய பாலாலய காலத்தில் அபிசேகங்களில் பங்குபற்றி அம்பாள் அருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம். ஜூன் மாதம் 6ம் திகதி நடைபெற இருக்கும் குடமுழுக்கு வைபவத்தை அடுத்து 45 நாட்கள் மண்டாலாபிசேகம் நடைபெற இருப்பதால் அதில் உபயகாரர்களாகப் பங்குபெற விரும்புபவர்கள் தயவுசெய்து ஆலயத்துடன் தொடர்புகொண்டு, தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

06.06.2011 குடமுழுக்கு வைபவம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரகுருக்களின் தலைமையில் நடைபெறும்

22.07.2011 வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் சிவஸ்ரீ கை. வாமதேவக்குருக்களின் தலைமையில் நடைபெறும்.

முக்கிய குறிப்பு : 2வது கும்பாபிஷேகத்திற்கான ஆலயத் திருப்பணிகள் தற்போது நடைபெற்று வருவதால் அதற்கு காணிக்கை நன்கொடை வழங்க விரும்பும் அடியவர்கள் ஆலயத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம். அடியவர்கள் ஆலயத்துடன் தொலைபேசியூடாகவோ (02088100835) அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு நன்கொடைகளை வழங்கலாம்.

வங்கிக் கணக்கிலக்க விபரம்:

Account Name : Shri Kanaga Thurkkai Amman Temple Trust, Account Number : 02717646 Sort Code : 30-98-91 Bank : Lloyds TSB, Branch : Uxbridge

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5, Chapel Road, London. W13 9AE. Tel: 0208 -810 0835 • Founded on 10.08.1991 Charity No : 1014409

www.ammanealing.com • Email : info@ammanealing.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Southall Travel

Redefining Travel

Why travel with **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் **சவுத்ஹோல் டிராவல்** மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

ATOL 5555 PROTECTED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org